Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 14 வெள்ளி - 47 16 - 22 - சனவரி - 2004

## கேணல் கிட்டுவின் நீங்காத நினைவு...



## நெருங்குவது ஏன்?



## இப்பொழுது ஏன் வந்தார்கள்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 16 . 01 . 2004
மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# இப்போது ஏன் வந்தார்கள்

ஒரு இடைவெளியின் பின்பு நோர்வே தரப்பு மீண்டும் கிளிநொச்சி வந்து விடுதலைப்புலிகளைச் சந்தித்துச் சென்றுள்ளது. வருகை தந்த தூதுவர் செய்தியாளர்களிடம் தனது நோக்கம் பற்றித் தெரிவித்தபோது தெற்கின் அரசியல் நிலைமை குறித்தும் தமிழ் மக்களின் தேவைகள் உணர்வுகளை அறிந்துகொள்ளும் பொருட்டும் தனது இந்த விஜயம் இருந்ததாக தெரிவித்தார்.

மேலும் வரும் 19 ஆம் திகதி கொழும்பிற்கு வருகைதரவுள்ள சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுடைய வருகை அவர்களுடன் நடைபெறவுள்ள சந்திப்பு பற்றியும் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில் டோக்கியோ மாநாட்டில் ரணிலுக்கு வாக்களிக்கப்பட்ட நிதி வந்து சேர்வதற்கான வாய்ப்பற்றிருந்தது. சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டாலேயே வாக்களிக்கப்பட்ட நிதி ரணிலின் கைக்கு வரும் என்பதை உதவி வழங்கிய நாடுகள் கண்டிப்பாக வற்புறுத்தியிருந்தன.

டோக்கியோ நிதி என்பது சமாதானத்திற்காக ரணிலுக்கு வழங்கப்படும் பரிசு எனலாம். சமாதானம் இன்றேல் அப்பரிசைப் பெறும் தகுதியும் ரணிலுக்கு இல்லை என்பது தான் உதவி வழங்கும் நாடுகளின் வரையறையாக இருந்தது.

இதனாலேயே ரணில் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதில் மிகவும் அக்கறையுற்றிருந்தது. விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைவை பரிசீலனைக்கு எடுத்து பேச்சை ஆரம்பிக்க அது சம்மதம் தெரிவித்திருந்தது. ரணிலுக்கு கிடைக்க இருக்கும் பரிசு மீதான கவர்ச்சி அத்தகையது. அதன் அரசியல் பரிமாணம் அத்தகையது. அது சந்திரிகாவை அதன் கட்சியை போட்டியில் இருந்து எதிர்காலத்தில் விலக்கிவிடக்கூடிய சர்வவல்லமை பொருந்தியதாகக் காட்சியளித்தது. அத்தகைய ஒன்று பேச்சு ஆரம்பிக்க முடியாத ஒரு இருண்ட குகைக்குள் இன்றைய அரசியல் நெருக்கடி தள்ளிவிட்டதனால் ரணில் வெறும் கையனானார். ரணிலுக்கான வாக்களிக்கப்பட்ட நிதி எட்டாத் தொலைவில் இருப்பதாக இருந்தது.

ஆனால் சந்திரிகா மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பெடுத்து இலங்கை அரசியலில் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்ததுடன் ஒரு மறுதேர்தலை நோக்கி நாடு சென்று கொண்டிருப்பது திட்டவட்டமாக தெரியவந்தது. இத்தகைய சூழலில் சமாதானத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக நிதியைத் தடுத்து வைத்து அதனை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திய உதவி வழங்கும் நாடுகள் இப்பொழுது ரணிலைக் காப்பதற்காக நிதியை வழங்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டதாக அவை எண்ணுகின்றன.

சமாதானத்திற்காக ரணிலுக்கு அழுத்தம் கொடுப்பதென்ற நிலைமை மாறி சமாதானத்திற்காக ரணிலை முதலில் நிலைநிறுத்த வேண்டும் என்ற கட்டாயத்துக்கு உதவி வழங்கும் நாடுகள் உட்பட்டு விட்டன. அவ்வாறெனின் வாக்களிக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதியையேனும் வழங்காமல் ரணில் தான் ஆட்சியைக் கைப்பற்றி வைத்திருந்த இக்காலத்தில் ஒருவெகுசன கவர்ச்சியான செயற்றிட்டத்தை காட்ட முடியாதவராகப் போய்விடுவார். ஒரு தேர்தலை சந்திக்க வேண்டிவரினும் ரணிலுடைய இக்காலம் ஒருவெகுசன கவர்ச்சி மிக்கதாக சிங்கள மக்கள் உணர வேண்டும்.

வெறும் யுத்தநிறுத்தம் அதனை ஈடுசெய்ய முடியாது. தமிழ் மக்களுக்கு வேண்டுமானால் இக்காலம் ஒருஅரிதான காலமாக தோன்றலாம். ஆனால் யுத்தத்தின் உருசியை நேரில் தரிசிக்காத சிங்கள தேசத்திற்கு யுத்தநிறுத்தம் மட்டும் ஒரு கவர்ச்சியாகா. மாறாக யுத்த நிறுத்தத்தின் பயனாக அவர்கள் எதிர்பார்க்கும் பொருளாதார மீட்சி ஒன்றே அவர்கள் எதிர்பார்க்கும் அம்சமாகும்.

"சிறிலங்காவை மீளப்பெறுவது" என்று ஒருகவர்ச்சிகரப் பிரச்சாரத்தை ரணில் செய்த பின்பு அதில் எள்ளளவேனும் நம்பப்படுவதற்காக ரணில் எதையேனும் செய்யவில்லையென்றால் தேர்தல் ஒன்று வருமிடத்து அது ஒரு குறிப்பிட்ட பாதிப்புக்களை நிகழ்த்தலாம் என்பதை இந்த உதவி வழங்கும் நாடுகளும் உணர்ந்தே உள்ளன. அதன்பொருட்டே ஒருபகுதி நிதியை வழங்குவதற்கான முடிவோடு வரும் 19 ஆம் திகதி உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் வருகின்றனர் எனக்கொள்ளலாம்.

அவர்களின் இந்த முடிவால் விடுதலைப்புலிகள் விசனம் அடைந்து விடக்கூடாது என்பதும் அதற்காக விடுதலைப்புலிகளுடன் சமரசம் செய்து கொள்வதும் பேச்சுநடத்து
வதுமே இந்த விஜயத்தின் நோக்கமாக இருக்க முடியும்.

இவ்வூகம் உண்மையெனின், அவர்களளவில் அது அவர்களுக்குச் சரியென்றாயினும் யுத்தத்தால் நேரடியாக வலிப்பட்ட தமிழ் மக்களுக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். இது ஒருசமநிலைக் குழப்பமாகி விடாதா என்ற கேள்வியை தமிழ் மக்கள் அவர்களிடம் கேட்க விரும்புவர்.

## தூரனின் பார்வையில்

# சந்திரிகா... ரணில்... அதிகாரப்போர் நிழல்
# இந்திய – அமெரிக்க பனிப்போர் நிஜம்

இலங்கை அரசியல் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையேயான அதிகாரப் போட்டி இலங்கை மீதான இந்திய-அமெரிக்க ஆதிக்கப்போட்டியாக உருவெடுத்துள்ளது போல்தெரிகிறது.

பின்னது நிஜவடிவம் என்றால், முன்னது அதன் நிழல் வடிவம் எனறே கூறும் வகையில் நிகழ்வுகள் நடந்தேறிவருகின்றன.

இந்து சமுத்திரத்திரப் பிராந்தியம் 'மீதான ஆதிக்கத்தை தம்வசம் வைத்துக்கொள்வதில் இந்தியாவும், அமெரிக்காவும் காட்டும் அக்கறையானது எதிர்காலத்தில் அவர்களது இராணுவ மற்றும்அரசியல் தேவைகளின் அடிப்படையிலானதொன்றாகும்.

அவர்களின் இந்தத் தேவையானது, இரு தரப்புக்குமிடையேயான ஒருராஜதந்திர யுத்தமாக மாறுமளவிற்கு நிகழ்வுகள் யாவும் இலங்கைப் பிரச்சினையை மையப்படுத்தி நடந்துவருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ரணில் பதவிக்கு வந்த நாள்தொடக்கம் இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை முன்னெடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் அரசுடனான தொடர்புகளை நெருக்கமாக்கிக் கொண்டதையடுத்து, இலங்கை மீதான இந்தியாவின் ஆதிக்க ஆளுமைக்கு நெருக்கடி ஏற்பட ஆரம்பித்தது.

இனப்பிரச்சினைக்கான சர்வதேச அனுசரணையுடனான பேச்சுவார்த்தை நீண்ட காலம் தொடர்வதற்கு சாத்தியம் இருக்காது எனவும், விடுதலைப்புலிகள் அதனை எப்படியாவது குழப்பி மீண்டும் போர் நிலையொன்றைத் தோற்றுவித்து விடுவார்கள் என்ற தப்புக்கணக்கை இந்தியா போட்டதன் காரணமாக பேச்சவார்த்தைகள் ஆரம்பம் குறித்து அக்கறை காட்டாது இருந்துவிட்டது.

ஆனால் இந்திய மதிப்பீட்டுக்கு மாறாக, பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களில் விடுதலைப்புலிகள் காட்டிய விசுவாசமான ஆர்வம் இந்திய நினைப்புக்கு மாறான நிலைமைகளை தோற்றுவிக்க காரணமாயிற்று.

பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு சர்வதேச் ரீதியில் கிடைத்துவந்த அபரிமிதமான ஆதரவும், அளித்துவந்த ஊக்கமும், இந்தியா எதிர்பார்க்காத ஒன்றேயாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதானால் சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் காட்டிவந்த



விருப்பார்வமும் அவர்கள் காட்டிய பொறுமையும், கையாண்ட ராஜதந்திர ரீதியிலான உத்திமுறைகளும் சர்வதேச நாடுகளின் கவனத்தை வன்னிநோக்கி தீர்க்கமாக திருப்பச் செய்தமையானது இந்தியாவால் சகிக்க முடியாத விடயமேயாகும்.

இந்த சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் பின்புலத்தில் அமெரிக்காவின் வலுவான அறிவுறுத்தலும் நெறிப்படுத்தலும் இருந்துள்ளதை இந்தியா நன்குஅறிந்து கொண்டபோதும், அதனை உடனடியாக ஊடுருவித் தனது ஆளுமையை அதற்குள் ஆழமாகப் பதித்துக்கொள்ள சரியான வாய்ப்புக்கிடைக்காததால் காலம்வரும்வரை பார்த்திருந்தது என்றால் மிகையாகாது.

இதேவேளை அமெரிக்காவின் அணுகுமுறையானது இந்தியாவை புறந்தள்ளுவதாகவோ, இனப்பிச்சினை தீர்வு விவகாரத்தில் இந்தியாவுக்கான பங்கு. நிராகரிப்பதாகவோ வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. இந்தியாவை சமாதான நடவடிக்கைகளுடன் ஒன்றினைத்துச் செல்வதுளபோன்று தோற்றம் காட்டும் உத்திமுறைகளைக் கையாண்டதால், இந்தியாவாலும் எதுவுமே உடனடியாகச் செய்ய முடியாது போயிற்று. எனினும் நிலைமைகளின் மாற்றங்களை உன்னிப்பாக கவனித்துக்கொண்டே இருந்ததுடன் தனது நியாயமான தலையீடு ஒன்றை மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்கும் மறைமுகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக்கொண்டேயிருந்தது.

தனது இந்த மூலோபாயத்தை செயற்படுத்த பிரதமருக்கு எதிரான அதிகாரமிக்க சனாதிபதியை இந்தியா பயன்படுத்த முயன்ற அதேவேளை, ரணிலுக்கும் அவர் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கும் இடையூறு ஏற்படுத்தும் தனது ஈராண்டு கால வேட்கையைத் தணித்துக்கொள்ள சமாதானத்தை நகர்த்தி முன்னேற்ற ஆதரவுப்பலமாக இருக்கும் அமெரிக்க ஆதரவு சர்வதேச சமூகத்தை விரும்பாத இந்தியாவை தனது இலக்கினை எட்ட சந்திரிகா பயன்படுத்த முயன்றதும் தெரிந்த விடயங்களேயாகும்.

இந்த நடவடிக்கைக்காக சந்திரிகாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜதந்திரி வேறு யாருமல்ல லக்ஷ்மன் கதிர்காமரே தான்.

சந்திரிகாவின் அதிகார அரசியல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் சமாதான முன்னெடுப்புக்களில் இருந்து ரணில் விலகுவதாக வெளிவந்த அறிவிப்பு சமாதான முன்னெடுப்புக்களை சந்திரிகாவே பொறுப்பேற்கவேண்டும் என்ற ரணிலின் கோரிக்கை அதிகாரபலம் கொண்ட அரசுடன்தான் இனிப்பேச்சுக்களைத் தொடரமுடியும் என்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பு ஆகியன சிறிலங்காவின் பிரச்சினைகளுள் சந்திரிகாவை ஊடுருவல் ஊடகமாகப் பயன்படுத்தி உள்நுழைய இந்தியாவுக்கு போதுமான காரணிகளாகிவிட்டது.

சந்திரிகாவை அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகாண பிரதமர் ரணிலுடன் விரைவாக இணக்கத்திற்கு வருமாறு விடுக்கப்பட்ட அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு சந்திரிகாவை கொஞ்சமேனும் அசைக்கவில்லை.

இதற்கு அவர் வசமிருந்த நிறைவேற்று அதிகாரபலமும், இந்தியாவின் வலுவான ஆதரவுப் பின்னணியும்தான் காரணம் எனலாம்.

இப்போது இந்தியத் தலையீட்டுக்கான சாதகமான சூழல் ஒன்றை சந்திரிகா உருவாக்கிவிட்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலகம் தமிழர்களை நெருங்கி வருகிறதா?



**கொழும்பில்** தற்சமயம் நிலவும் தலைமைத்துவ வெற்றிடம் ஒரு புதிய சூழலை உருவாக்கி வருகிறது. அது தமிழர்களுக்கு அதிகம் சாதகமான திருப்பங்களைக்கொண்டு வரவல்லதாகவும் காணப்படுகிறது.

ஒரு புறம் தலைமைத்துவ வெற்றிடம் சமாதானத்தைத் தேங்கச் செய்திருக்கிறது. ஆனால், அது இன்னொரு புறம் தமிழர்களுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான இடைவெளியை ஒப்பீட்டளவில் குறைத்துக் கொண்டுவருகின்றது.

எப்படியெனில், நிலவும் தலைமைத்துவ வெற்றிடம் கொழும்பில் யாருடன் பேசுவது என்ற திகைப்பைச் சமாதானம் செய்யும் நாடுகளுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், கிளிநொச்சியில் அப்படியெந்தக் குழப்பமும் கிடையாது.

சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை தற்சமயம் அதிகம்



ஸ்திரமாய் இருக்கும் தரப்புப் புலிகள் தரப்பே.

எனவே புலிகளுடன் அதிகம் நெருங்கிவர வேண்டிய ஒரு தேவை மேற்கு நாடுகளுக்கு உண்டாகி வருகிறது.

கொழும்பில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடத்தால் அங்கு தெரிவுகள் குறைந்து கொண்டு வரும் ஒரு சூழலில் மேற்கு நாடுகள் கிளிநொச்சியை நோக்கிக் கவரப்படும் நிலைமைகள் அதிகம் வளர்ந்து வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று கிளிநொச்சிக்கு வந்து போனது.

19 ஆம் திகதி அபிவிருத்திக்குப் பொறுப்பான அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வர இருக்கிறார்கள்.

மாத இறுதியில் ஜப்பானைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வர இருக்கிறார்கள். அகாஷியும் விரைவில் வருகிறாராம்.

இதெல்லாம் ஒன்றைக் காட்டுகிறது. மேற்குலகம் தமிழர்களை அதிகம் செவிமடுக்கத் தொடங்கிவிட்டது.

எனவே, தமிழர்கள் தமது தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறவும், தம்மைப்பற்றிய தப்பபிப்பிராயங்களைப் போக்கவும் இது மிக வாய்ப்பான ஒரு தருணம்.

இந்த வாய்ப்புக்களைச் சரியாகக் கையாள்வதில் கிடைக்கப் போகும் வெற்றிகளே ஈழப்போரின் அடுத்தகட்டத் திருப்பத்தைத் தீர்மானிக்கப் போகின்றன.

இது ஒரு சுவாரஸ்யமான முரண். அதாவது சமாதானத்திற்குத் தடையாக வந்திருக்கும் ஒரு தலைமைத்துவ வெற்றிடம் தமிழர்களுக்குச் சாதகமானதாக மாறிவருகிறது என்பது.

இதை இன்னும் சரியாகச் சொன்னால்-சமாதானத்தின் தேக்க காலம் ஒன்று தமிழர்களுக்கு அதிகமதிகம் ராஜதந்திர வெற்றிகளைத தரவல்லதாகக் காணப்படுகிறது எனலாம்.

ஆயின், சமாதானத்தை விடவும் சமாதானத்தின் தேக்ககாலம் தமிழர்களுக்கு வாய்ப்பான தொன்றா?

ஆம், நிலைமை அவ்வாறு தானிருக்கிறது. ஏனெனில் கொழும்பிலுள்ள இரண்டு தலைமைகளுமே தங்களை சமாதானத்தின் நேசர்கள் போலக் காட்டிக்கொள்கிறார்கள்.

ஆனால், சமாதானத்துக்காகத் தியாகம் செய்ய ஒருவரும் தயாரில்லை. மாறாக, தமது எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக சமாதானத்தை ஒரு ஏணியாகப் பாவிக்கவே அவர்கள் தயாராகக்காணப்படுகிறார்கள்.

அண்மையில் ரணில் விக்கிரமசிங்க செய்த அறிவிப்பும் அத்தகையதே.

**நிலாந்தன்**

அவர் சமாதானத்தை எந்தளவிற்கு ஒரு துரும்புச் சீட்டாகப் பயன படுத்த முடியும் என்பதற்கு ஒரு உச்சக்கட்ட உதாரணம் அது.

ஒரு புறம் யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கப் போவதாக அவர் மிரட்டுகிறார்.

ஆனால், இன்னொருபுறம் அவருடைய அமைச்சர்களான மொறகொடவும், பீரிசும் டோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட நிதி உதவிகளின் ஒரு தொகுதியைப் பெறுவதற்காக முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். சமாதான உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கப் போவதாகக் கூறிக் கொண்டு, சமாதானத்தின் பெயரால் வாக்களிக்கப்பட்ட நிதி உதவிகளைப் பெறவேண்டிய அவசரம் என்ன?

ரணில் நினைக்கிறார், சில சமயம் நாடு ஒரு பொதுத்தேர்தலைச் சந்திக்கவேண்டிவரலாம் என்று. அதற்கு முன்பு, சமாதானத்தின் கவர்ச்சியான கனிகளைச் சிங்கள வாக்காளர்களுக்குக் காட்டுவதற்கு நிதி தேவை. எனவே ஒரு தேர்தலை நோக்கி நகர்த்தப்படும் காய்களே இவை.

ரணிலுக்கு ஒப்பீட்டளவில்



தெரிவுகள் அதிகமுண்டு. ஏனெனில் அவர் சமாதானத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்றிருக்கிறார். அத்தோடு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மிக விருப்பத்திற்குரியவராகவும் காணப்படுகிறார். இவை இரண்டையும் தவிர விஷேசமாக அவர் மேற்குலகின் செல்லப் பிள்ளையாகவுமிருக்கிறார்.

ஆனால், சந்திரிகாவுக்குத் தெரிவுகள் மிகக் குறைவு. அவரைப் பொறுத்தவரை இப்போதிருக்கும் தேக்கத்தைப் பேணினாலேயே போதும், புலிகளாக யுத்தநிறுத்தத்தை முறித்துக்கொள்ளாதவரை இப்போதிருக்கும் தேக்கத்தைப் பேணினாலேயே பரவாயில்லை என்ற ஒரு நிலையில் தான் அவரிருக்கிறார்.

இப்போதுள்ள நிலைமைகளின் வளர்ச்சிப் போக்கில் ஒரு பொதுத் தேர்தலுக்குப் போகவேண்டி வந்தால் முடிவுகள் தனக்குச் சாதகமாக அமையுமா என்பதில் அவருக்குச் சந்தேகங்கள் உண்டு.

பொதுத் தேர்தலில் சமாதானத்தின் நண்பர்களுக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாயிருக்கும். ஆனால், சமாதானத்தின் ஆக நெருக்கமான நண்பர் யார் என்ற போட்டியில் ரணில் அவரை எப்படியும் வென்று விடுவார்.

அவருக்கு இன்னுமொரு தெரிவிருக்கிறது. அதில் ஜே.வி.பி. யுடன் கூட்டுச் சேர்ந்து சமாதானத்தின் எதிரிகளுக்குத் தலைமை தாங்கவேண்டும். ஆனால், அப்படியென்றால் சமாதானம் செய்துவரும் மேற்கு நாடுகளைப் பகைக்க வேண்டியிருக்கும்.



இப்படிப் பார்த்தால் அவருக்குள்ள தெரிவுகள் மிகவும் குழப்பமானவை. மேற்கு நாடுகளுக்கும் நோகாமல், சமாதானத்தின் எதிரிகளுக்கும் நோகாமல் ஒரு முடிவை அவர் எடுக்க வேண்டியிருக்கும்.

இது சிங்கள வாக்காளர்களை மிகவும் குழப்பும். இப்போதிருக்கும் நிலைமைகளின் படி ஒரு தேர்தல் வந்தால் அது சிங்கள வாக்காளர்கள் மிகவும் குழம்பிப்போன ஒரு தேர்தலாயிருக்கும்

அதோடு அது தமிழ்ப்பிரதிநிதிகள் ஒப்பீட்டளவில் பலமாகக் காணப்படும் ஒரு நாடாளுமன்றத்தை உருவாக்கவும் கூடும்.

இது உத்தேசத் தேர்தல் பற்றிப் புலிகள் எடுக்கப்போகும் முடிவுகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது.

எனவே நிலைமைகளை நிதானிப்பதற்கும், ஒரு பொதுத் தேர்தலுக்கு முன்பு நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கும் உரிய ஒரு பரிசோதனைக் களமாக மாகாணசபைத் தேர்தல் களத்தைப் பயன் படுத்துவதற்கு ரணிலும் சந்திரிகாவும் தயாராகி வருகிறார்கள்.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகளே சில சமயம் இரு தலைவர் களினதும் அடுத்தகட்ட நகர்வுகளைத் தீர்மானிக்கப் போகின்றன.

இப்படி இரு தலைவர்களும் தங்களுக்கிடையில் அமைதிகாணும் வரையிலும் தமிழர்கள் என்ன செய்யலாம்?

இக்கால அவகாசத்துள் தமிழர்கள் மேற்குலகுடன் நெருங்கி வரும் தமது ராஜிய உறவுகளை மேலும் பலப்படுத்துவதில் கணிசமான அளவு தூரம் முன்னேறிவிட முடியும்.

தமது தனிப்பட்ட எழுச்சிகளுக்காகச் சமாதானத்தை ஒரு அற்ப ஏணி போலப்பயன்படுத்தும் சிங்களத் தலைவர்கள் என்ன முடிவுகளை எடுக்கப்போகிறார்கள் என்பது இப்பொழுது தமிழர்களுக்கு முக்கியமல்ல.

அந்த முடிவுகளுக்காகத் தமிழர்கள் காத்திருக்கத் தேவையும் இல்லை.

அல்லது ஜெயதேவ உயாங்கொட சொன்னது போலத் தமிழர்கள் ஆழ்நிலைத் தியானம் செய்யவும் தேவையில்லை.

மாறாக, கொழும்பில் நிலவும் தலைமைத்துவ வெற்றிடத்தை எவ்வளவு தூரம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்று தமிழர்கள் சிந்திக்கவேண்டிய தருணம் இது.

## ஓகோ! அப்படியா!



செய்தியாளரிடம். கருணாநிதி.

**விஷயந்துக்களிடமிருந்து விடுபட்டால் போதுமென வெளியேறிவிட்டோம்.**

### ஓகோ !அப்படியா!



இராணுவத்தினரின் புத்தாண்டுநிகழ்வில். பலகல்ல.

**தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் படைகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.**


### ஓகோ !அப்படியா!



செய்தியாளரிடம். டிரோன் பெர்னான்டோ.

**ஐ.நா.செயலாளராக என்னைவிட இராஜதந்திர ரீதியில் சிறப்பாக செயற்படக் கூடியவர் எவராவது முன்வருவாரேயானால் அவருக்கு வழிவிட நான் முன்வருவேன்**

### ஓகோ !அப்படியா!



அக்கரைப்பற்றில் நடைபெற்றகூட்டத்தில். பேரியல் அஷ்ரப்.

**சனாதிபதி தலைமையில் விரைவில் அமையப்போகும் அரசு சனநாயக விரோத சக்திகளைத் திருத்தும்.**

### ஓகோ !அப்படியா!



சுப்பிரமணியசுவாமி

**இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடமுன் இந்தியா இரு இந்திய இராணுவ முகாம்களையும், ஓர் இந்திய விமானப்படை முகாமையும் கொழுமபில்அமைக்க வேண்டும்.**

### ஓகோ !அப்படியா!



பி.ரி.ஐ. செய்திஸ்தாபனத்திற்கு பேட்டி சந்திரிகா.

**ரணில்விக்கிரமசிங்க அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவேளை நான் பாதுகாப்பு அமைச்சினை அவர்களுக்கு அளித்தது. நான் செய்த மிகப்பெரிய தவறு.**

# நறுக்கென...

## சந்திரிகா என்ன நகர்வை மேற்கொள்ளப்போகிறார்



**சீல** வாரங்களின் பின்னர் மீண்டும் அந்தச் செய்தி சற்று வெளிப்படையாக ஆனால் உறுதிப்படுத்தப்படாத நிலையில் ஊடகங்களினூடாக வெளிவந்துள்ளது.

'விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு சிறிலங்கா சுதந்திரகட்சி திரை மறைவில் முயற்சி' என்பது தான் இந்த செய்தி கூறும் செய்தியாகும்.

சில வாரங்களின் முன்னரும் இது போன்ற தொனியைக் கொண்ட சில தகவல்கள் ஊடகங்கள் ஊடாக வெளிவந்த போதிலும் அது தொடர்பாக மேலதிக விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை என்பது வேறுவிடயம்.

இப்போது வெளியான செய்தியும் சரியா, பிழையா என்பதற்கப்பால் இதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி நோக்கலாமல்லவா.

அதிகாரமற்ற பிரதமர் ரணில் தனது முக்கிய அரச அதிகாரப் பொறுப்புக்களை சனாதிபதி பொறுப்பேற்றுவிட்டதால் சமாதானத்தை முன்னெடுக்கும் அதிகாரமும் தனக்கில்லை என அறிவித்ததுடன், விரைவில் போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து தனது அரசுவிலகிக் கொள்ளப் போவதாகவும்,ஆதிகாரமுள்ள சனாதிபதி வேண்டுமனால் புதிய உடன்பாடொன்றில் விடுதலைப்புலிகளுடன் கையொழுத்திட்டு போர் நிறுத்தத்தை தொடரலாம் என்று ஓர் புதிய அழுத்தமான அறிக்கையை விடுத்ததன் மூலம் சந்திரிக்காவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில்அவர் என்ன முடிவை எடுக்கப் போகிறார் என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததே.

ஏற்கெனவே ஒரு தடவை, அதுவும் மிக அண்மையில், பிரபாகரன் எனது நம்பிக்கைக்குறிய நண்பரல்ல ஆனாலும் தேசிய நலன்கருதி விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார் என அவர் கூறியிருந்தமையானது எதிர்காலத்தில் அப்படி ஒரு சூழல் உருவாகும் பட்சத்தில் அதனை எதிர் கொள்வதற்கான தயார் நிலையில் தான் இருப்பதை உணர்த்துவதற்காகவும் இருக்கலாம்.

எப்படியானாலும் தற்போதைய அரசியல் நெருக்கடியில், ரணில் சர்வதேச அழுத்தத்தின் பின்னணியுடன் அல்லது பின்பலத்துடன் தனக்கு ஏற்படுத்தக் கூடிய அழுத்தங்களை சமாளிக்கவோ, எதிர்கொள்ளவோ மாற்றுவழிகளை தேடும் நிலைக்கு சந்திரிகா தள்ளப்பட்டுள்ளார் என்பது உண்மையாகும்.

இப்போது அவர் முன்னால் இரண்டு தேர்வுகள் உள்ளன.ஒன்று ஆட்சியைக் கலைத்து தேர்தலை நடத்தித் தனக்கான மக்கள் ஆதரவுப்பலத்தை நிரூபிப்பது. மற்றது விடுதலைப்புலிகளுடன் மறைமுகமாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, பின்னர் வெளிப்படையாகப் பேசுவதற்கான சூழலை ஏற்படுத்துவது.

இவற்றில், தேர்தலை எதிர்கொள்ளும் திறன் சந்திரிகாவுக்கு உடனடியாக இல்லை என்றே கூறவேண்டும். கூடியளவுக்கு தேர்தலை தவிர்த்து வேறுவழிகளில் தன்னை வலுப்படுத்த யோசித்துவரும் அவரால் மேற்குறிப்பிட்டுள்ள இரண்டாவது வழிமுறையைக்கையாளுதல் தவிர்க்க முடியாத அவசியமாகவும் இருக்கலாம்.

அவர் அதற்கான முயற்சியை ஆரம்பித்துவிட்டிருப்பாரா என்பது தெரியாது, ஆரம்பிக்காமல் இருக்கவும்முடியாது. அப்படி ஒரு ஆரம்பமுயற்சியில் அவர் இறங்கியிருப்பாரேயானால்... சிறிலங்காவின் அரசியல் மற்றும் சில விசித்திரமான களங்களுக்கான கதவுகள் திறக்கப்பட அவரே காரணமாகிவிடுவார் என்பதும் உண்மை.......

## ரணிலும் சந்திரிகாவும் யாரைப் பாதுகாக்கப் போகிறார்கள்



**அரசியல்குழப்பம்** ஒருபுறமும், அதிகாரப்போட்டி இன்னொரு புறமும்சிறிலங்காவின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி விட்டுள்ளநிலையில் ஆளும் அரசியல் தலைமைகள் நாட்டின் இறைமையை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு பாதுகாப்பு உடன்பாடு என்றுபேரில் அயல் மற்றும் அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதில் காட்டும் தீவிரமும், போட்டா போட்டியும் வேறொரு புறத்தில் நடந்து கொண்டுதான் உள்ளது.

ரணில் அரசு அமெரிக்காவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டை செய்கின்றது என்றால் சந்திரிகா இந்தியாவுக்கு ஓடோடிப்போய் இன்னொரு பாதுகாப்பு உடன்பாட்டை மேற்கொள்ளமுயல்கிறார்.

சிறிலங்காவின் பாதுகாப்புக்கு அமெரிக்கா, இந்தியா என அனைத்து மேலாதிக்க சக்திகளின் 'அரவ' அணைப்பு தேவையானதா? அந்த அளவுக்கு சிறிலங்காவின் பாதுகாப்புக்கு ஆபத்தும், அச்சுறுத்தலும் அதுவும் இந்தச் சமாதான காலத்தில் ஏற்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

உண்மையில் இந்தியாவும் சரி, அமெரிக்காவும் சரி, அல்லது வேறுஎந்த நாடுகளானாலும் சரி தம்மிலும் வலுக்குறைந்த, பலவீனமான நாடொன்றுடன் பாதுகாப்பு, ஒப்பந்தம்ஒன்றை மேற்கொள்ள விருப்பார்வம் கொண்டு செயற்படுகின்றன என்றால். அந்தச் சிறிய நாட்டிற்கு அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் சர்வதேச மட்டத்தில் இருக்கும் கேந்திர முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டுள்ளன என்பதே அர்த்தமாகும்.

சிறிலங்காவுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருக்கும் கேந்திரமுக்கியத்துவத் தரத்தன்மை வெளிப்படையான ஒன்றாகும்.

இலங்கைமீது இந்தியாவும், அமெரிக்காவும் எத்தகைய கழுகுப்பார்வையை வைத்திருக்கின்றன என்பதை விளக்கிக் கூறவேண்டிய அவசியமேயில்லை.

சமாதான முயற்சிகளையே, இலங்கை மீதான தமது ஆதிக்க வலுவை உறுதிப்படுத்தும் நடவடிக்கையின்ஓர் அம்சமாகவே அமெரிக்காவும் இந்தியாவும் வெவ்வேறு நோக்கில் அணுகிவருகின்றன. அமெரிக்காவின் விருப்பார்வத்தை ரணிலும் இந்திய அபிலாசைகளை சந்திரிகாவும் பிரதிபலிப்பவர்களாகவே உள்ளனர்.

அதன் விளைவுகளே இந்த உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், எல்லாம் ரணிலின்கை ஓங்கியிருந்தபோது அமெரிக்காவின் குரலும் ஓங்கியிருந்தது. இப்போது சந்திரிகாவின் குரல் ஓங்க, இந்தியப்பிடி இறுக்கமாகிறது. ரணிலும், சந்திரிகாவும் இலங்கையின் இறைமையை முற்றிலும் கையளித்தாவது தமது அரசியல் பாதுகாப்பைத்தான் உறுதி செய்வார்களேயன்றி நாட்டின் பாதுகாப்பையல்ல.......

## சுப்பிரமணிய (ஆ) சாமியின் புதிய கண்டுபிடிப்பு...!



**இந்திய** நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறும் காலத்தை பிரதமர் வாஜ்பாய் கோடி காட்டிவிட்டார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த சில மாநிலங்களுக்கான தேர்தலில் பாரதீய ஜனதாக்கட்சிக்கு கிடைத்த வெற்றிகளையடுத்து உரியகாலத்திற்கு முன்னரே நாடாளுமன்றத்திற்கான தேர்தலை நடத்த பாரதீய ஜனதாக்கட்சி தீர்மானித்ததில் வியப்பில்லை.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் தந்திரம் இதுவாகும். 'ஆதரவு அலை உள்ளபோதே தேர்தலைஎதிர்கொள்' என்ற புதுமொழி இதனை மேலும் தெளிவுபடுத்தக்கூடும்.

வாஜ்பாய் இதற்கான எண்ணத்தைக் கொண்டபோதே இந்தியாவில் தேர்தல் காய்ச்சல் ஆரம்பித்துவிட்டது.

குழம்பிய குட்டையில் அரசியல் ஆதாயம் தேடும் இந்திய கட்சிகள் கூட்டணி அமைப்பதில் ஆளுக்காள்குட்டிக்கொள்ளவும், காலைவாரவும், கையைப்பிடிக்கவும், தொடங்கியமையானது அதற்கேயுரிய அரசியல் பாரம்பரியமே.

கொள்கைமாற கூட்டணிமாறும்
கூட்டணிமாற கொள்கைகளும் மாறும்.

எல்லாம் தேர்தல் கள நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்பவே நடக்கும். வேண்டாம்! அதெல்லாம் குப்பைத்தனம் என நினைத்தாலும் நாற்றம் நம்மைநாடி வரவே செய்கிறது.

தி.மு.க, மற்றும் ம.தி.மு.க,பா.ம.க........இப்படி எத்தனையோ 'க'க்கள், அதாவது கட்சிகள், கழகங்கள் ஏற்கனவே தாம் இருந்த கூட்டணிக்குள் கலகங்கள் காரணமாக வெளியே வந்து புதிய கூட்டணிக்கான தேடலில் இறங்கிவிட்டார்.

அரசியலில் நேரெதிர் முரண்பாடுடையவர்கள் உடன்பாடுகாணும் காலம் தேர்தல் காலம்தான் ........

பெரியார்தடம் தொட்டு அண்ணா தடம் தொடர்ந்த [illegible]ன்பத்திராவிடம் காணவிழைந்த கருணாநிதி தலைமையிலான தி.மு.கா இம்முறை காங்கிரஸ் [illegible]ம் குத்துக் கரணம் அடித்து..... கூட்டணி சேரவுள்ளதாகத் தெரிகிறது. ஏனைய 'க'களும் (அ.இ.அ.தி.மு.க. வைத்தவிர) அவர் வழி செல்லவும் கூடும்.

ஆர்.ஆருடன் சேர்ந்தாலென்ன, அது அவரவர் கொள்கையின் பாற்பட்ட சுபாவம் என விட்டுவிடுவோம்.

தேர்தல் என்றதும் வழமைபோல் அந்தக்கோமாளி அரசியல்வாதி சுப்பிரமணிய (ஆ)சாமி தன் திருவாயை திறக்க ஆரம்பித்துவிட்டார்.

பிரபாகரனின் அறிவுறுத்தலின் பேரில்தான் தி.மு.கா - காங்கிரஸ் கூட்டணி அமைக்கப்படுகிறதாம்.! (ஹோ......ஹோ.....ஹோ)

இதன்மூலம் அவர் என்ன சொல்ல விரும்புகிறார்?

ஒரு காலத்தில், ராஜீவ்காந்தி கொலைக்கு விடுதலைப்புலிகள் தான் காரணம் என்றும், தி.மு.க அதற்குத் துணையாக இருந்தது என்றும் அலறிக்கொண்டிருந்த சுவாமியாரின் பிரசாரத்தைப் பொய்யென்று இந்தப் புதிய கூட்டணி பகிரங்கமாக்கிவிட்டதென்கிறாரா?

சோனியாவும், கருணாநிதியும் பிரபாகரனின் சொற்படிதான் நடக்கிறார்கள் என்கிறாரா?

இதன்மூலம் பாரதீய ஜனதாக்கட்சி கூட்டுக்குள் நுழைய முயற்சிக்கிறாரா? அமீனா (வட்டிக்காரன்) புகுந்த வீடும் அமெரிக்கன் நுழைந்த நாடும் உருப்படாது என்பார்கள்... அதனுடன் சுப்பிரமணிய சுவாமி நுழைந்த கூட்டணியும்.... என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம்.!

## கொள்கையற்றோரின் அரசியல்கூடாரம் தமிழகமா?



**பாரதீய** ஜனதாக்கட்சியுடனான கூட்டணியில் இருந்து தி.மு.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகளைத் தொடர்ந்து இப்போ பாட்டாளி மக்கள் கட்சியும் வெளிநடப்புச் செய்துவிட்டது.

விலகிய அனைத்துக் கட்சிகளுமே பெரியாரினதும், அண்ணாவினதும் வழியைப் பின்பற்றுவதாகக்கூறும் திராவிடச் சிந்தனையாளர்களின் கட்சிகளாகும்.

இவர்கள் அனைவரும் இந்தியாவின் மதசார்பின்மையையும் பகுத்தறிவுக்கொள்கையையும் கடைப்பிடிக்கும் பார்ப்பனீய எதிர்ப்பு அணியைச் சேர்ந்தவர்களாவர்.

ஆனால் பார்ப்பனீய ஆதரவு, இந்துதத்துவ கோட்பாடு ஆகியவற்றைக் கொண்ட பாரதீய ஜனதாவுடன் கடந்த காலத்தில் கூட்டணி வைத்து ஆட்சியிலும் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தமையானது இந்திய சனநாயகத்தின் இயல்பின்பாற்பட்ட ஒன்றேயாகும்.

கொள்கை முரண்பாடுகளுக்கு அப்பால் பதவி உடண்பாடு காண்பதென்பது தமிழக அரசியலில் ஒரு மரபாகவும் ஆகிவிட்டது.

ஆனால் தேர்தல்வரும் காலங்களில் மீண்டும் கொள்கை முரண்பாடுகள் தலையெடுப்பதும், கட்சி பேதங்களுடன் மோதிக்கொள்வதும் இயல்புதான்.

பாட்டாளி மக்கள் கட்சியின் விலகலும் கூட இதனடிப்படையிலான ஒன்றுதான் என்பதில் ஐயமில்லை.

தனது கட்சி பாரதீய ஜனதாவுடனான கூட்டிலிருந்து விலகியமைக்கு பா.ம.க. தலைவர் கூறிய காரணம் வேடிக்கையான ஒன்றாகும்.

உரியகாலத்திற்கு முன்னர்நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்த பா.ஜ.க முனைந்திருப்பது தமது கொள்கைக்கு முரணானது என்றிருக்கிறார் பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள்.

தமிழக அரசியல் கட்சிகள் கொள்கை, இலட்சியம், போராட்டம் ஆகியவை பற்றிப் பேசுவதுதான் சிறந்த நகைச்சுவையாகும்.

இன்றைய சூழலில் ஊழலும், சர்வாதிகாரமும் நிலவும் ஜெயலலிதாவின் ஆட்சியை நீக்குவதே உண்மையான (?) திராவிடக் கட்சிகளில் இலட்சியமெனின் தி.மு.க, ம.தி.மு.க,பா.ம.க ஆகிய பெரியாரியக் கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் ஒன்றாக இணைந்து கூட்டணி ஒன்றை உருவாக்குவதே காலத்தின் தேவையாக உள்ளது. ஆனால் அது குறித்த சிந்தனை அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

தி.மு.க.வின் அரசியலில் குடும்ப ஆதிக்கம்,
ம.தி.மு.க.வின் அரசியலில் கொள்கைக் குழப்பம்,
பா.ம.க.வின் அரசியலில் வன்னிய சமூகத்தின் ஆதிக்கம்.

ஆகியன முக்கியத்துவமான முனைப்பைக் கொண்டிருப்பதால் ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களினதும், தமிழகத்தினதும் நலன்கள் குறித்த சிந்தனைகள் எவரிடமும் முனைப்புக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை.

மத்தியில்-ஆட்சியில் இடத்தைப்பிடிப்பதும், மாநில ஆட்சியைக் கைப்பற்றுவதும்தான் அவர்களின் இலக்காக இருப்பதால்....தமிழக அரசியல்களம் கொள்கையற்றோரின் கூடாரமாகிவிட்டது.

**செங்குட்டுவன்**

அமைதி இல்லாத இடத்தில், இன்பம் இருக்க முடியாது. – ஜான் ட்ரைன்

திருமதி அடேல்பாலசிங்கம் அவர்கள் "சுதந்திர வேட்கை" நூலில் கேணல். கிட்டுவைப் பற்றி எழுதிய சில கருத்துக்களை அவரது 11ஆம் ஆண்டு நினைவாக இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.



# கிட்டுவின் இழப்பு இலையின் உதிர்வல்ல மலையின் சரிவு

ஆரம்ப காலத்தில் இருந்தே இன்னொரு வரலாற்று நாயகன் என்றால் அவர்தான், என்றுமே கலகலப்பாக உற்சாகம் மிகுந்து காணப்படும் கிட்டு. நாம் இந்தியாவிற்கு 1981இலே சென்றபோதுஅவரை விடுதலைப் புலிகளின் மதுரைமுகாமில் முதற்தடவையாக சந்தித்தோம். இளமைப்பருவத்தில் குறும்புக் காரராக விளங்கிய கிட்டு, தமிழ் நாட்டு உள்ளூர் வாசிகளின் பழைமைக் கொள் கைகளைக் கிண்டல்செய்து சவால்விட்டு மகிழ்வார். ஒருதடவை வேதியர்க்கு உரிய புனிதப்பூணூல் தரித்து உணவு விடுதி ஒன்றுக்குள் நுழைந்து ஆட்டிறைச்சிக்கறியும், கோழிப்பொரியலும் தருவித்து, அங்கிருந்த சைவ உணவினர் வியப்போடும் வெறுப்போடும் பார்த்துக் கொண்டிருக்க, கிட்டு தனது அசைவ உணவை நன்கு சுவைத்து உண்டார். தலைமைப் பண்புகள் அபரிதமாக நிறைந்த ஒரு இளைஞரே கிட்டு என்பதில் சந்தேகமே இல்லை.

1983ற்கும், 1987ற்கும் இடைப்பட்ட காலத்தில், யாழ்ப் பாணத்தில் அவர் விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக் கத்திற்கு தலைமைதாங்கி பல இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதனால் ஒரு துணிகரமான கெரில்லாப் போராளியாகவும், போர்த்தந் திரோபாயத்தில் ஒரு விற்பன்ன ராகவும் மக்களிடையே அவர் புகழீட்டினார். கட்டிறுக்கமான ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் கலகலப் பான அவரது சுபாவமும் ஒத் திசைந்து அவருக்கு ஒரு கவர்ச்சி கரமான ஆளுமையைக் கொடுத் தது எனலாம்.

ஆனால் கிட்டுவைப் பற்றி எண்ணும்பொழுதெல் லாம் போராளிகள் மீதும், மக்கள் மீதும், தமிழரின் தாயகம் மீதும் உணர்ச்சி பூர்வமாக அவர் கொண்டிருந்த அளவு கடந்த நேசம்தான் நினைவுக்கு வரு கிறது. 1985இலே எம்மைச் சந் திக்க கிட்டு சென்னைக்கு வந்த போது பாலாவையும் என்னை யும் தம்மோடு கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்ப அவர் திட்டமிட்டு வந்தார். அங்கே எம் மைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பதுடன் தாம் நேசித்த யாழ்ப்பாணத்தை எனக்குச் சுற்றிக்காட்டவும் கருதியிருந்தார்.

• • •

முல்லைத்தீவு அளம் பில் காடுகளில் அமைந்திருந்த 1:4 பாசறையில் கிட்டுவைக் கண்டதும் எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1988ல் தமிழ் நாட்டில் இருந்து நாம் தப்பிச்சென்ற சில நாட்களில் தமிழ் நாட்டில் இடம் பெற்ற ஒரு சுற்றிவளைப்பில் அப்போது, சென்னையில் இருந்த கிட்டுவும் அகப்பட்டு, பாதுகாப் புக்காவலில் வைக்கப்பட்டிருந் தார். பின்னர் இவர் யாழ்ப்பாணத் தடுப்புக்காவலுக்கு இடமாற்றம் பெற்றார். ஆயினும் அவருடைய உடல் ஊனத்திற்கு வழங்கப் படும் ஒரு சலுகையாக இந்திய அமைதிப்படைத்தலைமைப் பீடம தடுப்புக்காவலில் இருந்து அவரை விடுவித்தது. அவர், உடனடியாக முல்லைத்தீவுக் காடுகளில் இருந்த பிரபாகரன் அவர்களிடமும்,புலிப் போராளி களிடமும் சென்றார். பிரபாகரன் அவர்களுடன் இந்தத் தருணத்தில் உளவியல் ரீதியாக, போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதில் கிட்டு தமது தீரத் தைக் காட்டினார். புதிதாகக் கற்க வேண்டும் என்பதிலும்ஒருவர் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் கிட்டு எப்பொழுதுமே பேரார்வம் கொண்டவர். போராளி களுக்கு அவர் வகுப்புகள் நடத்தி னார்.அவர்களுடைய நடவடிக் கைகளிலும் ஈடுபாடு காட்டி னார். நிழற்படம் பிடிப்பதில் கிட்டு சூரர். நாம் அங்கு தரித்திருந்த போது பிரபாகரன் அவர்களை யும் எம்மையும் பல கோணங்களில் படம் பிடித்தார்.



• • •

ஒக்ரோபர் முற்பகுதியில், பிரபாகரன் அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை புரிவதற் காக, முல்லைத்தீவுக் காடுகளுக் கான இரண்டாவது பயணத்தை மேற்கொண்டோம். கிட்டுவின் துண்டிக்கப்பட்ட காலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக அவரை இலண்டனுக்கு அனுப்பத் தாம் விரும்புவதாக இந்தப் பயணத் தின்போதே பிரபாகரன் அவாகள் பாலாவிடம் கூறினார். தம்மை வெளிநாடு அனுப்பத் தீர்மானிக் கப் பட்டிருப்பதை அறிந்ததும் கிட்டுவின் மனம் ஊசலாடியது. சரியான உறுப்புப் பொருத்தல் கிடைத்தால், இலகுவாக நடக் கவும், தடையின்றி நடமாடவும் முடியும் என்பது அவருக்கு மகிழ்ச் சியே. ஆனால் தாம் வெகுவாக நேசிக்கும் தமது போராளிகளை யும் தாய் நாட்டையும் விட்டுப் பிரிவது அவ ருக்குசஞ்சலத்தைக் கொடுத்ததால், பிரிவை அவரால் நினைத்துக் கூடப்பார்க்க முடிய வில்லை. தமது போராளி களுக்கு பயிற்சி வழங்கும் பணியில் கிட்டு ஒளிர்ந்தார்: அவர்களுடைய ஈடுபாடுகளில் அவர்களை ஊக்குவித்தார். அவர்களை உற்சாகமாக ஈடுபடுத்த புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத் தினார். எனவே, பிரிய வேண் டிய நாள் நெருங்க, அவரும்சரி, அவருடைய போராளிகளும் சரி, கலகலப்பின்றிச் சோர்வாகக் காணப்பட்டார்கள். நான் பார்த்த பரிதாபத்துக்கு உரிய காட்சி களில் ஒன்று. அளம்பில் காட்டில் இருந்து கிட்டுவை வெளியே கூட்டிச்சென்ற நாளன்று, அந்த வரலாற்று நாயகன், பிரபா கரன் அவர்களுடைய தோளில் முகத் தைப் புதைத்து தேம் பியழு தது தான். அவரை ஒரு கதிரைப் பல்லக்கில் இருத்திய அவருடைய போராளிகள் அவரை உலங்கு வானூர்தி வரை தோளிலே சுமந்து சென்றார்கள். இந்த வடிவிலே தான் பாலாவை அவர்கள் முன்னர் தோளில் சுமந்தமையை நினைவு கூர்ந்தேன். காட்டுக்குள் இருந்து வெளியே கொண்டு வரப்படும்போது, தமக்கே உரிய நேர்த்தியில், கிட்டு தமது போராளி கள் முன், கலக்கத்தை முகத்தில் காட்டாது கலகலப்பாக வேடிக்கை யாகப்பேசி தமது பாசத்தை அவர் கள் மீது கொட்டினார். கிட்டு கொழும்பை அடைந்ததும் அவ ரைப் பிரித்தானிய தூதரகத்திற் குக் கூட்டிச் சென்றோம். பிரித் தானியத் தூதருடன் கலந்துரை யாடிய பின், பிரித்தானியாவுக் கான கிட்டுவின் வீசா அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், லண்டன் புறப்படும் முன், கிட்டு ஒரு முக்கிய விடயத்தை கவனிக்க வேண்டியிருந்தது. இந்திய அமைதிப்படைப் பாதுகாப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் முல்லைத்தீவுக் காடுகளுக்கு சென்றதிலிருந்து, மருத்துவ மாணவியான அவருடைய காதலி சிந்தியாவிடம் இருந்து அவர் பிரிந்து வாழவேண்டிதாயிற்று. சிந்தியாவோடு மீண்டும் இணைய வேண்டும் என்று அவர் தவித்தார். அவரைச் சந்திக்க சிந்தியா யாழ்ப் பாணத்தில் இருந்து கொழும்புக் குப் பயணம் புரிந்தார். அங்கே திருமணம் செய்ய அவர்கள் தீர் மானித்தார்கள். சடங்கிலே கலந்து கொள்ள கிட்டுவின் தாயார் வல்வெட்டித் துறையில் இருந்து கொழும்பிற்கு அவசரமாக வந்தார். சிந்தியாவின் பெற்றோர் ஏற் கெனவே கொழும்பில் இருந் தார்கள். பேச்சு வார்த்தையின் போது புலிப்பிரதி நிதிகள் தரித்திருந்த விடுதியின் அறை ஒன்றிலே ஒக்ரோபர் மாதம் 25ம் திகதி, கிட்டுவுக்கும், சிந்தி யாவுக் கும் பதிவுத்திருமணம் நடை பெற்றது. சில நாள் கழித்து கிட்டு லண்ட னுக்கு விமானம் மூலம் பயண மானார்.




• • •

இந்தியக்கடற்படையின ரின் கரங்களில் சிக்கி 1993 இலே, துயர்தரும் வகையில் அவர் மரணம் அடைந்தார். அதையடுத்து அவருடைய சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் பிரமாண் டமான அளவில் துயராஞ்சலி ஒன்று நடைபெற்றது. ஒரு இலட் சத்துக்கு மேலான மக்கள் அந்த வைபவத்தில் திரண்டி ருந்தார் கள். வெறுமே அஞ்சலி செலுத்த அல்ல. அந்த மண்ணின் மைந் தன் மீது இருந்த ஆழமான அன் பையும் மதிப்பை யும் வெளிக் காட்டவே பெரும் திரளாக மக்கள் அங்கு அணி திரண்டனர்.

**திருமதி அடேல்பாலசிங்கம்**

# மதவடி மயிலர்



**செய்தி :-** *விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் முகாமினுள் கண்காணிப்புக் குழு அனுமதியின்றிப் புகுந்தது.*

**மயிலர்:-** அத்து மீறலைக் கண்காணிப்போரே அத்துமீறுவதென்பது வேலியே பயிரை மேயும் வேலைதானே... கண்காணிப்போர் கண்கெட்டதனமாக நடக்கலாமா?

**செய்தி :-** *சமாதான முயற்சிகள் தொடரும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு. என்கிறார் ராஜித சேனரத்ன..*

**மயிலர் :-** உங்களுக்கு நம்பிக்கை உண்டு ஆனால் அரசுக்கு இல்லை என்கிறாரா...? அரசுக்கும் சனாதிபதிக்கும்மெல்லே நம்பிக்கை இருக்கவேண்டும்... மக்கள் ஆரைத்தான் அல்லது எதைத்தான் நம்பவில்லை...! நம்பிக்கெட்டது மக்கள். நம்பவைத்துக் கெடுப்பது அரசு.. நான் சொல்லுறது சரிதானே...!

**செய்தி :-** *அரசின் சமாதான முயற்சிக்கு சனாதிபதி ஒத்துழைப்புத் தரவில்லை என்கிறார் பிரதமர்.*

**மயிலர்:-** இவர் அவரையும் அவர் இவரையும் மாறி மாறி குற்றம் சாட்டி காலத்தை கடத்தப்பார்க்கினம்.. உண்மையில் இரண்டு பேரும் தான் புலிகளதும், சர்வதேச சமூகத்தினதும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தரவில்லை... அதுதான் உண்மைபாருங்கோ...!

**செய்தி :-** *விமான நிலைய நுழைவாயிலின் பாதுகாப்புப் பொறுப்பிலிருந்து விமானப்படையினர் நீக்கம்.*

**மயிலர்:-** விமானப் படையினர் மீது நம்பிக்கையில்லையோ? இந்த நடவடிக்கை விமான நிலையம் மீது இன்னொரு தாக்குதலுக்கு வாய்ப்பளித்துள்ளது என்றெல்லே தேச பக்த முன்னணியினர் குற்றம் சாட்டியுள்ளனர். நாளைக்கு இதை விமானப்படையின் மானத்தை விமானமேற்றுற முயற்சி என்றும் கூட குற்றம் சாட்டலாம்.. நான் சொல்லுறது பிழையோ?

**செய்தி :-** *கொழும்பிலுள்ள உல்லாச விடுதியொன்றில் அமைச்சர்களின் புதல்வர்கள் தாக்குதல்...*

**மயிலர்:-** தந்தை எட்டடி பாய்ந்தால் பிள்ளை பதினாறடி பாயாட்டி வெட்கமெல்லே... உல்லாச விடுதிகளில் தாக்குதல் நடத்துவதே அவர்களுக்கு உல்லாசமாகிவிட்டது.

**செய்தி :-** *புத்த மதத்தை அழிக்க நோர்வே முயல்கின்றதாம். தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு...*

**மயிலர்:-** புத்த விக்கிரகங்களைக் கடத்துதல். பாலியல் குற்றங்களைப் புரிதல். கள்ளநோட்டு அடித்தல்.. போன்ற குற்றங்களைச் செய்யும் பிக்குகளை விடவா நோர்வேக்காரர் புத்தமதத்தை அழிக்கப்போகினம்...

# எதிர்வரும் தேர்தலில்...

''இதோ ஒரு சில நிமிடங்களில் ஆரம்பமாகப்போகிறது. நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த......". இப்படி நாடகம் 'ஆரம்பிக்க முன்னர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், நாடகம் ஆரம்பிக கப் பல மணி நேரங்கள் எடுக்கும். வீட்டில் இருக்கும் ரசிகர்களை அரங்கத்துக்கு விரை வாக அழைக்கவும், அரங்கத்துக்கு வந்தவர் களை அமைதியாக இருக்கச் செய்யவும் அடிக்கடி விடுக்கப்படும் இவ்அறிவிப்பை "கூத்துக் கொட்டகை அறிவிப்பு" என்று கூறுவார்கள்.

இதுபோலத்தான் கடந்த ஒரு வருடகால மாகச் சிறிலங்காவில், தேர்தல் குறித்த அறிவிப்பும், ஜே.வி.பி-சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுக் குறித்த அறிவிப்பும் இருக்கின்றது.

சிறிலங்காவில் இரு அதிகாரத்தையும் இரு துருவங்களாக விளங்கும் ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கைப்பற்றிக்கொண்ட காலத்திலிருந்து எவ்வேளையிலும் பொதுத்தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உண்டு என்றே கூறப்பட்டு வந்தது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் ஒன்றைக் கலைக்கும் அதிகாரம் ஒரு வருடத்தின் பின்பே சனாதிபதியின் கைக்கு வருவதால் கடந்த ஆண்டு இது தொடர்பான ஊகங்கள், அறிவிப்புகள் அடிக்கடிவெளியிடப்பட்டன.

பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற ஊகங்கள் கூட வெளியாகின. இதற்கமைவாகப் பிரதான கட்சிகள் இரண்டும் அடிக்கடி தமது அமைப்பாளர்களை அழைத்துத்தேர்தல்

ஒன்றை எதிர்கொள்ளத்தயாராகுமாறு அறைகூவல் விடுத்தும் வந்தனர். இந்நிலைமை கடந்த சில நாட்களாகவும் நிலவிவருகின்றது.

ஆனால், தேர்தல் வருவதாக இல்லை. தேர்தலைச் சந்திக்கும் திராணி பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இல்லை என்பதே இதற்குக் காரண மாகும்

அதுபோலவே தான் ஜே.வி.பி.யுடனான கூட்டுக் குறித்தும் பொதுசன ஐக்கிய முன்னணி யின், குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடும் இருக்கிறது. சு.க-ஜே.வி.பி கூட்டானது ஒரு தேர்தல் கூட்டு என்பதால் தேர்தல் அறிவிப்பு ஒன்று செய்யப்படாதவரை கூட்டும் சாத்தியமாகப்போவதில்லை என்பது கடந்த இரண்டு வருடகாலத்தில் நிரூபணமாகியிருக்கின்றது.

அதிலும் இப்போது மாகாணசபைத் தேர்தலுக் காகக் கூட்டு வைத்துக்கொள்ளமுடியாது என்றும் பொதுத் தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்காக மட்டுமே கூட்டு வைத்துக்கொள்ள முடியும் என்றும் ஜே.வி.பி. புதிய நிபந்தனை போடுகிறது.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறமுன் மாகாண சபைத் தேர்தலை நடத்தித்தமது பலத்தைப் பரீட்சிக்க சனாதிபதி சந்திரிகா விரும்புகிறார். அதுபோலவே அவ்வாறான மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் தனித்துப் போட்டியிட்டுத் தனது பலத்தைக் காண்பிக்க ஜே.வி.பி. முயல்கிறது.

இதற்கு அது நாட்டுப் பற்றாளர் முன்னணியைக் கருவியாக்க முயல்கிறது. இப்பொழுது ஜே.வி.பி.யின் கவனம் சு.க.மீது மட்டுமல்ல, நாட்டுப்பற்றாளர் முன்னணி மீதும் இருக்கின்றது. சு.க-ஜே.வி.பி.கூட்டு சாத்தியமற்றுப் போனால் நாட்டுப்பற்றாளர் முன்னணியைச் சரணடைய அது தீர்மானித்திருக்கிறது. சு.க.விலுள்ள பெரும்பான்மைப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜே.வி.பி.யுடனான கூட்டுக்கு எதிராக இருப்பதால் அக்கூட்டுக் குறித்த சந்தேகம் ஜே.வி.பியிடம் எழுந்திருக்கிறது எனவே நாட்டுப்பற்றாளர் முன்னணியில் அது கூடுதல் கவனம் செலுத்திவருகின்றது.



இப்பொழுது நாட்டுப்பற்றாளர் முன்னணியின் பல அறிவிப்புக்கள் விமல்வீரவன்சவின் பெயரில் வெளிவரு வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், ஜே.வி.பி.யின் "நாட்டுப்பற்று" சு.க.வினுடனான கூட்டின் சாத்தியம்-சாத்தியமின்மையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

ஆனால், நாட்டுப்பற்றாளர் முன்னணி இப்பொழுது தன்னை ஒரு கட்சியாகப் பதிவுசெய்ய முயல்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும் விரக்திகொண்டுள்ள இவர்கள் இம்முடிவுக்கு வந்திருக்கிறார்கள். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றதும், ரணிலைவிட இறுக்கமாகப் போர்நிறுத்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந் நாட்டுப்பற்றாளர் முன்னணியுடன் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி மட்டுமல்லாது சிறிலங்கா சுதந்திரக் கட்சி யிலுள்ள ஜே.வி.பி.க்கு ஆதரவான அணியும் மிக நெருக்கமாகவேயுள்ளது.

இந்நிலைமையில் ஜே.வி.பியுடனான கூட்டு இல்லாது சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலில் போட்டியிடுமானால் 3வது அணி ஜே.வி.பி உள்ளிட்ட நாட்டுப்பற்றாளர் முன்னணி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இவ்வாறான நிலை உருவானால் மேலும் பாதிப்புக்குள்ளாகப் போவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியாகவேயிருக்கும்.

ஏனெனில், விரும்பியோ, விரும்பாமலோ ஐக்கிய தேசியக்கட்சி சமாதானக் கோசத்துட னேயே தேர்தலைச் சந்திக்கப் போகிறது. வெளிப்படையாகச் சமாதானத்தை எதிர்க்காத சு.க.வைவிட இனவாதத்தை வெளிப்படையாகப் பேசும் நாட்டுப்பற்றாளர் முன்னணியை நோக்கியே சமாதானத்துக்கு எதிரான சக்திகள் குவியப் போகின்றன.

எனவே திர்வரும் தேர்தலில் (அது வரும் போது) "நாட்டுப்பற்றாளரும்" முக்கிய சக்தியாக இருப்பர் என்றே கூறலாம்.

**வேலவன்**

---

# பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்

**திருகோணமலையில** பெண் போராளிகளின் முகாம் ஒன்றிற் குள் அனுமதியின்றி நுழைந்தமைக் காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை பெண் போராளிகள் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பி.பி.சி தமிழோசைக்கு கண்காணிப்புக் குழுவின் பேச்சாளா ஒருவர் அளித்த செவ்வியானது மகளிர் பிரிவின் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதில்கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த விவகாரம் தொடர்பாக போராளிகளால் திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழு பிரதி நிதியிடம் இந்த விவகாரம் கொண்டு செல்லப்பட்டு இதில் ஏற்பட்ட கண்காணிப்புக்குழுவின் தவறு களும் சுட்டிக்காட்டப்பட்டு அவர் மன்னிப்பு கேட்டிருந்தார்.

இதன்பின்னர் அந்த குழுவின் பேச்சாளர் உண்மைக்கு புறம்பாக போராளிகளால் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் ஒழுங்கை சீர்கெடுக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவித் தமை யானது கண்டனத்துக்கும் கண்டிக் கப்பட வேண்டியதுமாகும்.

சமாதானப் பேச்சுவார்த் தையை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியிலிருந்து நோர்வே அரசு தற்காலிகமாக விலகியிருக்கும் சூழ்நிலையில் கொழும்பில் சனா திபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்குமிடையிலான அதிகார இழுபறியின் உச்சமாக போர் நிறுத்த உடன் படிக்கையில் கைச்சாத்திட்டவரான ரணில் பின் வாங்கப்போவதாக மிரட்டிக்கொண்டிருக கும் புறச்சூழ்நிலையில்,

போர்நிறுத்தத்தையும் அதன்உடன் படிக்கையில் கூறப்பட்டிருக்கும் விடயங்களை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்காக பொறுப்புடனும் பொறுமையுடனும் ஒழுங் கைப்பேண வேண்டியகண்காணிப்புக்குழு இத்தகைய பொறுப்பற்ற வகையில் கருத் துக்களை தெரிவிப்பதும் கண்டனங்களை சம்பாதிப்பதும் நிச்சயம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

ஏனென்றால் இன்று கடைப் பிடிக்கப்பட்டுவரும் போர் நிறுத்த நடைமுறையானது புலிகளின் அதிக விசுவாசத்து டனான நம்பிக்கையை வெளிப் படுத்தும் ஒரு நடைமுறை யாகும்.

இதன்மூலம் புலிகள் தங்களது நற்பெயரையும் புலிகள் தொடர்பான நம்பிக் கையும் வளர்த்தெடுக்கும் ஒரு வரலாற்றுக் காலகட்டம் இதற்கு எந்த வகையிலும் அப கீர்த்தியை ஏற்படுத்த எவரை யும் அனுமதிக்கமுடியாது அனுமதிக்கவும் கூடாது.

இந்த பின்னணியில் மிகவும் பாராட்டும் வகையில் இன்று கட்டிக் காக்கப்படும் யுத்தநிறுத்த செம்மையாக் கலுக்கு புலிகளின் மதிப்பையும் மரியாதை யையும் மதிக்க வேண்டிய கடப்பாடு கண்காணிப்புக்குழுவிற்கு உண்டு. இந்த உண்மையை கண்காணிப்புக்குழு முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

இலங்கையிலிருக்கும் இன்றைய அசாதாரண நிலையில் கண்காணிப்புக்குழு வின் நடவடிக்கைகளும், கருத்துக்களும் முக்கியத்துவம் மிக்க ஒன்று. இதன் பெறும தியை அந்த குழு புரிந்துநடந்து கொள்ள வேண்டும்.

இந்த வகை யில் பொறுப்பற்ற தனமாக யுத்தநிறுத் தத்தை பேணும்இரு தரப்புக்களில் ஒருதரப் பிற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதானது, சம்பந்தப்பட்ட இரண்டு தரப் புக்களில் ஒரு தரப்பிற்கு மறுதரப்பு திட்ட மிட்ட வகையில் ஏற்படுத்தும் அசௌ



கரியங்களுக்கு நிகர்த்தது.

கண்காணிப்புக்குழு அவசர குடுக் கைத்தனமாக அறிக்கைகளை விடுப்பதும், தவறான முடிவுகளின் அடிப்படையில் கருத்துக்களை வெளிப்படுத்துவதும் ஒன்றும் புதிதல்ல இவ்வாறு பலமுறைஅது இத் தகைய தவறுகளை இழைத்துள்ளது.

ஆனால் இவை ஒரு தொடர்கதை யாக அனுமதித்துச் செல்ல முடியாது என் பதை முதலில் கண்காணிப்புக்குழு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் இரண்டு தரப்புக் களிடையேயும் கண்காணிப்புக்குழு தொடர் பான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண் டிய ஒரு முக்கிய காலகட்டத்தி லிருக்கும் கண்காணிப்புக்குழு தனது பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும். அதுவே சமாதானத்திற்கு நன்மை பயக்கும்.

மாறாக கண்காணிப்புக்குழு தனது தரப்பில் ஏற்படுத்தப்படும் தவறுகளை மறைப் பதற்காக உண்மைக்குப் புறம்பான தகவல் களை வெளிப்படுத்தக்கூடாது.

அதிலும் பி.பி.சி போன்ற ஒரு சர்வ தேச ஊடகங்களிற்கு கருத்துக்களை தெரி விக்கும் போது மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டிய விடயமாகும்.

இந்த விவகாரம் சிறிதாயினும் அதன்மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள் சமாதானத்தில் பாதிப்பை ஏற்படுத்தவல்லன.

முன்னரும் திருகோணமலை குரங் குப்பாஞ்சான் பகுதியில் புலிகளால் ஏற் கெனவே அமைக்கப்பட்டிருந்த ஒரு முகாமை அவசரத்தனமான அறிக்கை ஒன்றை விடுத்த தன்மூலம் சமாதானப் பேச்சுவார்தையிலும் தென்னிலங்கை இனவாதிகள் மத்தியிலும் ஒரு பெரிய போர்க்களத்தையே ஏற்படுத்தி யிருந்தது.

இந்த நிலையில் கண்காணிப்பு மிகவும்ஒரு சிரமமான பணியை பொறுப் புடன் செய்கின்ற அதேவேளை அதனை உண்மை வழுவாது பேணவேண்டிய கடப்பாடும் அவசியமும் உண்டு.

**நக்கீரர்**

இனத் தூய்மை இல்லாத மனிதர் அனைவரும், வெறும் உமி. - அதால்ஃப் ஹிட்லர்

# தைப்பொங்கல் தமிழரின் திருநாள்!
# உழவரின் பெருநாள்!

**தை** முதல்நாள் தமிழர்களின் திருநாள். உழவர்களின் பெருநாள். தமிழர்கள் இயற்கைக்கு விழா எடுக்கும் இனிய நாள். அல்லவை கழிந்து நல்லவை மலரும் இன்ப நாள்.

களனி திருத்தி, வயல் உழுது, எரு இட்டு, வரப்புக் கட்டி, நீர் பாய்ச்சி, நெல் விதைத்து, களை எடுத்து, விளைந்த நெல்மணிகளின் பாரம் தாங்கமுடியாமல் தலை சாய்ந்து படுத்த கதிர்களை நல்ல நாள் பார்த்து ஒரு கைப்பிடி அரிந்து தாம்பாளத்தில் வைத்து வீட்டுக்கு எடுத்து வந்து வீட்டு வாசலில்கட்டித் தொங்க விடுவார்கள். இதற்குப் புதிர் எடுத்தல் என்று பெயர். அதில் கொஞ்ச நெல்மணிகளை எடுத்து குத்தி அரிசியாக்கி அந்தப் புத்தரிசியை பழைய அரிசியோடு கலந்து மஞ்சளும், இஞ்சியும் கட்டிய புதுப் பானையில் பாலும் சர்க்கரையும், பாகும் பருப்பும் இட்டுப் பொங்கி இயற்கைத் தெய்வமான ஞாயிறுக்குப் படைத்து வீட்டுத் தலைவனும், தலைவியும் பிள்ளைகளும் கொண்டாடி மகிழும் விழாவே பொங்கல் நாள்! இது தமிழர்களுக்கே உரித்தான திருநாள்!

பொங்கல் விழாவிற்கு சில வாரங்கள் கழித்தே அரிவு வெட்டு இடம்பெறும். வெட்டிய கதிர்களைக் குவித்து வயலின் நடுவே சூடு வைப்பார்கள். அதன் பின்னரே மாடுகளைக் கொண்டு சூடு மிதிப்பு இடம்பெறும்.

தைப்பூசத் திருநாளில் புதிர் குழைத்தல் இடம்பெறும். புத்தரிசி பொங்கி, சர்க்கரையும் வாழைப் பழமும் சேர்த்துப் படைக்கும் இப்புதிர் சோற்றை சுற்றமும் நட்பும் அயலும் சூழ இருந்து உண்டு மகிழ்வர். அண்மைக்காலமாக இந்த வழக்கம் அருகிவருகிறது.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். உழவர்கள் தமது கமச் செய்கைக்குத் துணையாக இருந்த கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா பட்டிப்பொங்கல் என்றும் அழைக்கப்படும்.

பொங்கல் நாளை "மகரசங்கராந்தி"யாக புராணிகர்கள் மாற்ற முற்பட்டபோதும் அடிப்படையில் பொங்கல் உழவர் விழாவாகவே உயர்ந்தும் நிலைத்தும் வருகிறது.

வயல் உழவும், வண்டி இழுக்கவும், சூடு மிதிக்கவும், பால், தயிர், நெய் கொடுக்கவும், வயலுக்கு எரு தரவும் காரணமாக இருந்த எருதுகளையும், பசுக்களையும், கன்றுகளையும் குளங்களில் குளிப்பாட்டி, குடிக்கக் பச்சையரிசிக் கஞ்சி கொடுப்பர்.

மாலையில் பட்டிப் பொங்கல் பொங்கிப் படைக்கப்படும். மாடுகளுக்கு அப்பொங்கலில் ஒரு கவளம் உண்பதற்குக் கொடுக்கப்படும். பின்னர் மாடுகளின் கொம்புக்கும் நெற்றிக்கும் குங்குமம், சந்தனம் பூசி கழுத்தில் மலர் மாலை, வடை மாலை போன்றவற்றால் அலங்கரித்து வீதிகளில் ஊர்வலம் விடுவார்கள்.

தைப்பொங்கல் திருநாளுக்கு வானியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கி பயணம் செய்யும் ஞாயிறு (பூமியில் இருந்து ஆகாயத்தைஅண்ணாந்து பார்க்கும்போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்பதாவது தனு இராசியில் இருந்து மகர இராசியில் புகுகின்றான். ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்குப் போக எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.

இப்போது வழக்கில் இருக்கும் "பிரபவ" முதல் "அட்சய" 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்ற அரசனால் கி.பி. 78இல் அறிமுகப்படுத்தப்பட்டவை ஆகும். இவை வடபுல அரசனால் ஏற்பட்டதால் வடமொழிப் பெயர்கள் வழங்கப்படலாயிற்று.

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பாடு, வாழ்வு முதலியவற்றிற்கு விளைந்த அழிவையும், இழிவையும் எண்ணிப் பார்த்த தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் 1921- ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி மாற்று நடவடிக்கைபற்றி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்று நிர்ணயம் செய்யப்பட்டு அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவதெனவும் அதுவே தமிழ் ஆண்டாகக் கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

ஆங்கில ஆண்டுடன் 31யைக் கூட்டினால் வள்ளுவராண்டு வரும். இப்போது ஆங்கில ஆண்டு 2003. எனவே வள்ளுவராண்டு 2034



(2003 சக 31).

எனவே திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கம் தைப்பொங்கல் திருநாளான தை முதல் நாள் தொடங்கி மார்கழிக் கடைசியில் முடிவுறும்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரச நாட்குறிப்பிலும், 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலங்களிலும் நடைமுறைப்படுத்திவருகிறது.

தமிழ்நாட்டையும் தமிழீழத்தையும் பொறுத்தளவில் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் பருவமழை (கார்) காலமாகும். பண்டைய காலத்தில் ஆவணி புரட்டாதி மாதங்கள் கார்காலமாகவும் ஐப்பசி கார்த்திகை கூதிர் (குளிர்) காலமாகவும் கணிக்கப்பட்டது.

இப்போது ஆவணி புரட்டாதி மாதங்களில் நல்லநாள் பார்த்து விதைப்பு இடம்பெறுகிறது. சில சமயம் முதல் மழை பெய்த பின்னர் விதைக்கிறார்கள். மழை பெய்யுமுன் ஆவணியில் விதைப்பதும் உண்டு. இதற்கு புழுதி விதைப்பு என்று பெயர்.

புரட்டாசியில் சிறுகப் பெய்யத் தொடங்கி ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பருவ மழை பலமாகப் பெய்யும் காரணமாக வயல்களில் தண்ணீர் நிரம்புகிறது. தண்ணீரின் மட்டம் கூடக் கூட பயிரும் ஓங்கி வளரும். சில சமயம் பயிர் சிறிதாக இருக்கும்போது பெருமழை பெய்து வெள்ளத்தினால் பயிர் அழுகிப் போவதும் உண்டு. அல்லது போதிய மழை இன்மையால் கருகிப் போவதும் உண்டு.

நெல்லை விதைத்தால் நெல்லு மாத்திரம் முளைப்பதில்லை. எருவில் கலந்துள்ள புல்லு மற்றும் கிடச்சிக் கொட்டைகளும் முளைக்கும். அதனை களையெடுப்பதில் கமக்காரர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அதோடு வெட்டுக்கிளிகள், பூச்சி புழுக்கள் நெற்பயிரைத் தாக்குகின்றன. இந்த புழு பூச்சிகளை ஒழிப்பதற்கு இப்போது கிருமி கொல்லி பயன்படுத்தப்படுகிறது.

தை மாசி மாதங்களில் வயல்களில் தண்ணீர் வற்றி கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும். வயல்களை உழுது விதைத்து களை பிடுங்கி கட்டிக் காத்து உழைத்துப் பாடுபட்டதன் பயனை உழவர்கள் அறுவடை செய்யும் காலம் இதுவாகும்.

ஆன காரணத்தினாலேயே தை மாதப் பிறப்பை உழவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். தை பிறந்தால் தங்கள் துன்பங்கள் தீரும் வழி பிறக்கும் என நினைக்கிறார்கள்.

பண்டைய தமிழர்கள் ஒரு ஆண்டினை ஆறு பெரும்பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் முதுவேனில் என்பனவாகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்களைக் (மாதம்) கொண்டதாக இருந்தது. உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர் ஓராண்டு ஆவணியில் தொடங்கி ஆடியில் முடிந்தது என்கிறார்.

சங்க இலக்கியங்களில் எல்லாத் திங்கள்களின் பெயர்களும் சொல்லப்படவில்லை. தை, மாசி (பதிற்றுப்பத்து) பங்குனி (புறநானூறு) சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தொல்காப்பிய ஆசிரியர் இகரவீற்றுப் புணர்ச்சி, ஐகாரவீற்றுப் புணர்ச்சி ஆகியவற்றில் மட்டுமே "திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன" எனக் கூறுவதைக் காணலாம். எல்லாத் திங்கள் பெயர்களும் இந்த இரண்டு எழுத்தில் (இ, ஐ) முடிந்தன என்கிறார். இதிலிருந்து அவர் காலந்தொட்டே இன்று இருக்கும் திங்கட் பெயர்கள் வழங்கி வருகின்றன எனக் கொள்ளலாம்.

பண்டைய காலத்தில் திங்களின் வளர்பிறை தேய்பிறை கொண்டே பெரும்பொழுதைக் கணித்தனர். அதனால்தான் மாதத்தை திங்கள் என்று அழைத்தனர். திங்கள் ஞாயிற்றைச் சுற்றிவர எடுக்கும் நேரம் 27 நாட்கள், 7 மணி, 43 மணித்துளிகள்.



"உவவுமதி", (முழுமதி) நாளில் ஞாயிறும் திங்களும் எதிர் எதிராக நிற்கும் என்ற வானவியல் உண்மையைப் புறநானூற்றுப் பாடல் (65) தெரிவிக்கிறது.

ஆண்டை ஆறு பெரும் பொழுதாகப் பகுத்தது போலவே ஒரு நாளையும் ஆறு சிறுபொழுதாகப் பகுத்தனர். வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை. யாமம் என்பதே அந்த ஆறு சிறுபொழுதாகும். மேலும் ஒரு நாள் 60 நாளிகை கொண்டது என்று கணக்கிட்டனர். ஒரு நாளிகை 24 நிமிடங்களாகும்.

ஞாயிற்றைக் கொண்டு ஆண்டைக் கணக்கிடும் முறை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வராகமிகிரரால் கொண்டுவரப்பட்டது.

ஞாயிறு வணக்கம் இயற்கை வழிபாட்டைச் சேர்ந்தது. உலக நாகரிகங்கள் எல்லாவற்றிலும் ஞாயிறு வணக்கம் இருந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன. உலகில் வாழும் உயிர்களுக்கு ஆதாரமாக ஞாயிறு இருப்பதால் ஆதி மனிதன் ஞாயிற்றை தெய்வமாக உருவகப் படுத்தி வணங்கிப் போற்றி வந்ததில் வியப்பில்லை.

வேத காலத்தில் இந்திரன், வருணன், அக்கினி இவற்றுக்கு ஒப்ப ஞாயிறு தெய்வமாக வழிபடப்பட்டது. இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான சௌரம் ஞாயிறை முழுமுதற் தெய்வமாக வழிபடும் மதமாகும். பிற்காலச் சோழர் ஆட்சியில் சூரியனுக்குத் தனிக்கோவில்கள் எழுப்பப்பட்டன.

முத்தமிழ்க் காப்பியங்களில் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் -

"ஞாயிறு போற்றுதும்!
ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல்
பொன்கோட்டு
மேருவலம் திரி தலான்."
(சிலம்பு 1, 4-6)

என ஞாயிற்றை வாழ்த்திப் போற்றுகிறார். "காவிரி ஆற்றையுடைய நாடனாகிய சோழனது ஆணைச் சக்கரம் போன்று பொன் உச்சியை உடைய இமய மலையை வலம் வருதலால் ஞாயிற்றை வணங்குவோம்! ஞாயிற்றை வணங்குவோம்!"

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில், சமயசார்பற்ற எல்லோருக்கும் பொதுவான விழா பொங்கல் திருநாளாகும். பொங்கல் விழாவில் கற்பனைக்கோ, புனைவுகளுக்கோ, அருவருக்கத்தக்க பகுத்தறிவுக்குப் பொருந்தாத கட்டுக் கதைக்கோ இடமில்லை.

தமிழர்கள் கொண்டாடும் தீபாவளி தமிழ் அரசன் ஒருவனைக் கடவுள் அவதாரம் சூழ்ச்சியால் கொன்ற நாளாகும்.

தமிழர் திருநாளான பொங்கல் விழா என்பது வெறும் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் உண்ணும் நாளாக இருந்துவிடக்கூடாது. அது எங்கள் உணர்வுகளைப் புதுப்பிக்கும் நாளாகவும் கலை, பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றைப் போற்றிப் பாதுகாக்க சூளுரைக்கும் நாளாகவும் இருக்கவேண்டும்.

**திருமகள்**

## மூன்று செவிகள்

செல்வத்துள செல்வம் செவிச்செல்வம். அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.

செல்வங்களில் செவிச்செல்வம் ஒன்றாகும். ஆனால் அச்செவிச்செல்வமே செல்வத்துள் எல்லாம் தலையான செல்வமாகும். இதனை எப்பாலரும் விரும்பும் முப்பாலைத் தந்த வள்ளுவப் பெருந்தகையாம் தெய்வப்புலவர் குறள்மூலம் தெளிவாக்கியுள்ளார்.

பண்டைய காலங்களில் செவி வழியான செய்திகளே பெருமிதத்தன. இதனாலேயே சில கதைகளை கர்ண பரம்பரையான கதைகள் என்று கூறுகிறோம். (கர்ணன் - காது)

இங்கு மூன்று மண்டையோடுகள் அழகாக மேடையில் முன் வைக்கப்பட்டுள்ளது. இம் மூன்று மண்டையோடுகளும், தோற்றத்தில் ஒத்த இயல்புடையனவாகக் காணப்பட்டன. ஆனால் மூன்று மண்டையோடுகளிலும் வேறுபாடு உள்ளது. எனவே மூன்று தலையைக்கொண்டவர்களும் ஏதோவோர் வகையில் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள்.

**அவ்வேறுபாடுகள்**

01) ஒரு மண்டையோட்டின் ஒரு காதினூடாக விடப்பட்ட மெல்லிய கம்பி மறு காதினூடாக வெளிவருகிறது. இவர்கள் ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளிவிடுபவர்கள். இவர்கட்கு ஏதேனும் கூறிப்பயனில்லை.

இவர்களைக் கடை மாணாக்கர்களாகக் கருதலாம்.

02) இரண்டாவது மண்டையோட்டில் ஒரு காதினூடாக விடப்பட்ட மெல்லிய வலிய கம்பி அம் மண்டையோட்டின் வாயினூடாக வெளிவருகிறது. இவர்கள் காதால் கேட்டு வாயினால் மற்றவர்கட்கு சொல்வார்கள். அல்லது தமக்கே சொல்லிக் கொள்வார்கள்சற்று பிரயோசனமானவர்கள்.

இவர்களை இடை மாணாக்கர்களாகக் கருதலாம்.

03) மூன்றாவது மண்டையோட்டில் ஒரு காதினூடாக விடப்பட்ட மெல்லிய வலிய கம்பி அம் மண்டையோட்டினூடாக நெஞ்சுப்பகுதியை நோக்கிச் செல்கிறது. இவர்கள் காதால் கேட்டதை மனதில் பதிவார்கள். மிகவும் பிரயோசனமானவர்கள்.

இவர்களை முதல் மாணாக்கர்களாகக் கருதமுடியும்.

எனவே செல்வத்துள் மேலான செவிச்செல்வத்தை நாமும் பேணிப்பயன் பெறுவோம்.

i) நீங்கள் 1வது மண்டையோடு அல்ல.
ii) நீங்கள் 2வது மண்டையோடு
iii) இல்லை2வது மண்டையோட்டிலும் பார்க்க நீங்கள் 3வது மண்டையோடுகளே.

-மா.கணநாதன்-

# பரத நாட்டிய ஆடை ஆபரணங்கள்



தேவதாசிகள் கோயில்களில் ஆடிய சதிர்க்கச்சேரிகளில் இருந்து இன்றைய பரத நாட்டியம் தோன்றியதென முன்னொரு கட்டுரையில் கூறினோம். இத் தேவதாசிகள் தம்மை இறைவனின் மணப்பெண்களாக எண்ணி அதற்குப் பொருத்தமான ஆடை ஆபரணங்களை அணிவார்கள். இன்றும் இம்மரபு தொடர்கின்றது. திருமணப் பந்தலில் அமர்ந்திருக்கும் இந்து மணப்பெண்ணின் ஆடை அணிகலன்களுக்கும் பரத நாட்டிய மேடையில் ஆடும் பெண்ணின் ஆடை ஆபரணங்களுக்கும் இடையில் வேறுபாடு வித்தியாசங்கள் மிகவும் குறைவு அசப்பில் இருவரும் ஒரே மாதிரியே தோன்றுவர். இதை விட பரதக்கலை பெண்கள் கூடுதலாக ஆடும் கலையாகக் கணிப்பிடப்படுகின்றது. ஆண்கள் மிகக் குறை வாகவே ஈடுபடுகின்றனர். அவ்வாறு ஈடுபட்டாலும் பெண்வேடமிட்டே ஆடுகின்றனர்.

ஆனால் நடனப் பள்ளிகளைப் பெரும்பாலும் ஆண்களே நடத்துகின்றனர். தமிழ் நாட்டின் மிகச் சிறந்த நடன ஆசிரியர்கள் ஆண்களாகவே காணப்படுகின்றனர். வழுவூர் இராமையாபிள்ளை, கலாசேத்திராவில் பணியாற்றிய ஏ.பி.சொக்கலிங்கம் பிள்ளை, காரைக்கால் தண்டாயுதபாணி பிள்ளை போன்றோரை இத் தொடர்பில் குறிப்பிடலாம். இவர்கள் மேடையில் ஆடுவதில்லை, சொல்லிக்கொடுப்பதோடு நிறுத்திக்கொள்கிறார்கள். இந்தியாவின் ஒறிசா மாநிலத்தில் ஆடப்படும் இன்றைய ஒடிசி நடனத்திலும் பெரும்பாலும் பெண்களே ஆடுகின்றனர். ஆண்கள் பங்கேற்கும் போது பெண்வேடமிடுகின்றனர். பரதநாட்டியத்திலும் ஒடிசியிலும் ஆண்கள் ஆணாகவே ஆடுவது மிகவும் அபூர்வம். கதக், கதகளி, மணிப்பூரி நடனங்களில் ஆண்கள்தான் கூடுதலாகப் பங்கேற்கின்றனர். இதில் குறிப்பிடப்பட்ட விபரங்களை உள்வாங்கிக் கொண்டால் பரதக்கலைக்கும் ஆடை ஆபரணங்களுக்குமுள்ள நெருக்கம் புலப்படும்.

நடு உச்சி பிரித்துத் தலையலங்காரம் செய்வது பண்டு தொட்டு நிலவும் தமிழ்ப் பெண்டிர் வழக்கம் கன்னஉச்சி, மேவி இழுத்தல் போன்ற தலை அலங்காரங்கள் மிகவும் குறைவு. சீப்பை மூக்கு நுனியில் வைத்து மேற்புறமாக தலைநடுவரை சீப்பினால் நடுவகிடு பிரிப்பதை 'நடுஉச்சி' என்பார்கள். இவ்வகிடு நெற்றியில் ஆரம்பித்து உச்சந்தலைவரை செல்லும் இந்த அடிப்படையில் பரதம் ஆடும் பெண்ணின் தலையலங்காரம் செய்யப்படுகின்றது. நெற்றியின் மேற்புறத்தில் மயிர்க்கோடு ஆரம்பிக்கும் இடத்தில் உச்சிப்பட்டம் என்ற ஆபரணம் அணியப்படுகின்றது. சிறியதோர் பென்ரன் உச்சிப்பட்டத்தின் கீழ்ப்புறத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்.

உச்சிப்பட்டத்திற்கு ஒருபுறமும் நெற்றியின் இரு வலப்புற இடப்புற வெளி எல்லைகளில் நெத்திப்பட்டம் என்ற ஆபரணங்கள் அணியப்படுகின்றன. இவை நெற்றியின் இரு மூலைத் தலைமயிரில் இணைக்கப்படுகின்றன. இதனால் இவை ஆடும்போது நழுவும் வாய்ப்பில்லை. தலையின் மேற் பகுதியில் நடுவகிடின் வலப்புறத்தில் சூரியப் பிறை என்ற தலைநகை அணியப்படுகின்றது. இது சூரியனின் சின்னம் என்பதைச் சொல்லாமலே விளங்கும். அதேபோல் நடுவகிடின் இடப்புறத்தில் சந்திரப்பிறை என்ற தலைநகை அணியப்படுகின்றது. சூரியன் பிரகாசத்தையும், சந்திரன் அமைதியையும் இவ்விடத்தில் குறிப்புணர்த்துகின்றன.

உச்சிப்பட்டம் என்ற ஆபரணம் நெற்றியில் ஆரம்பித்து நடுவகிடின் வழியாகத் தலையின் உச்சிப்பகுதிவரை செல்லும். உச்சிப்பட்டம் முடியும் இடத்தில் ராக்கொடி தலைநகை அணிவது பரத நாட்டிய மாதர் வழமை. ராக்கொடி மயில், பறவையின் தலைபோன்ற உருவத்தில் இருக்கும். மயில் தலை உருவத்தின் பின்னணியில் மயில் தோகை போன்ற அமைப்பு இணைந்திருக்கும். தலைப்பின்னலில் சடைநாகம் மலர்களால் செய்யப்பட்டு பின்னலோடு இறுகப் பிணைக்கப்பட்டிருக்கும். சடைநாகம் என்பது அதன் பெயர் குறிப்பிடுவது போல் நாகபாம்பின் உருவத்தில் இருக்கும் இந்த மலர்நகை ஆதிசேஷனைக் குறிப்புணர்த்தும் பின்னலின் அடியில் மூன்று குஞ்சங்களைத் தொங்கவிடுவது இன்னுமோர் வழமை.

நடனமணிகளின் கழுத்து நகைகள் பின்வருமாறு இடம்பெறுகின்றன. மாங்காய் உருவத்தில் செய்யப்பட்ட தங்கத்தகடுகள் பொருத்தப்பட்ட கழுத்து மாலை மிகமுக்கியமாக அணியப்படுகின்றது. மாங்காய் உருவத்தகடு ஒவ்வொன்றிலும் கற்கள் பதிக்கப்படுகின்றன. மாங்காய் மாலையுடன் அட்டியல், காசுமாலை போன்ற கழுத்து நகைகளும் முத்து மாலையும் கழுத்தை நிரப்புகின்றன. நீளமான பதக்கம் சங்கிலியும் அணிவார்கள். பதக்கங்களில் பச்சை, சிவப்பு நிறக்கற்கள் பதிக்கப்பட்டிருக்கும். மயில் பதக்கம், கிளிப்பதக்கம், அன்னப்பதக்கம் என்று மூவகைப் பதக்கங்கள் உள்ளன. பதக்கத்தின் இரு புறத்திலும் பொருத்தப்படுகின்ற மயில், கிளி, அன்னம் போன்ற பட்சிகளின் பெயரால் பதக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன.

தோள் மூட்டிற்கும் முழங்கைக்கும் இடைப்பட்ட மேற்கரத்தில் வெளியில் தெரியும் வண்ணம் வங்கி எனும் ஆபரணம் அணியப்படுகின்றது. ஆடுபவரின் விருப்பத்திற்கு ஏற்ப வங்கி அகலம் கூடியதாகவோ குறுகியதாகவோ இருக்கலாம். இடுப்பில் ஒட்டியாணம் என்ற வளையம் இடுப்பைச்சுற்றி அணியப் படுகின்றது. பல்வேறு வேலைப்பாடு கள் செய்யப்பட்ட மிகவும் நேர்த்தியான கலையம்சங்களுடன் ஒட்டியாணங்கள் திகழ்கின்றன. வேலைப்பாடுகள் அற்ற பளிச்சிடும் ஒட்டியாணங்களும் உள. ஒட்டியாணத்திற்குப் பக்கபலமாக அதற்குச் சற்றுக்கீழ் இடுப்புச் சங்கிலியும் அணியப்படுகின்றது.

**இன்று பரதக் கலையில் பல்வேறு மாற்றங்கள் தோன்றியுள்ளன. இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் ஒரு பரதக்கலை நிகழ்ச்சி நான்கு தொடக்கம் ஐந்து மணி நேரம் எடுத்தது. இன்று அதிகபட்சம் இரண்டரை மணி நேரத்திற்குச் சுருங்கிவிட்டது. இதன்காரணமாக ஆடை ஆபரணங்களின் செறிவும் சுருங்கியுள்ளது.**





பேசும்போதும் எழுதும்போதும் இணைமொழிகளைப் பயன்படுத்தும் வழக்கம் தமிழில் உண்டு. ஆடல் பாடல், அன்பும் அறனும், அருமை பெருமை என்பன இதற்கான சில உதாரணங்கள். நகை நத்து என்பதுவும் இதுபோன்ற இணைமொழி என்று சிலர் தவறாக எண்ணுகின்றனர். நத்து என்பது ஒரு வெற்றுச் சொல்லல்ல. நத்து என்று சொல்லப்படுவது ஒரு வகை மூக்கு ஆபரணம் இது வட இந்தியாவில் இருந்து தென்புலம் வந்தது. மூக்குத்துவாரங்கள் இரண்டிற்கும் இடையிலுள்ள சதையில் துவாரமிட்டு நத்து அணியப்படுகின்றது. இந்துஸ்தானி மொழியில் இது நாத் என்று அழைக்கப்பட்டது. தமிழில் இது நத்து என்று வழங்குகின்றது. துவாரமிடவேண்டிய அவசியம் இன்றில்லை. அவற்றை மூக்கில் செருகிவிட்டால் போதும் ஆடல் முடியும்வரை அப்படியே இருக்கும்.

முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வரமுன் மூக்குக்குத்தி மூக்கு நகை போடும் வழக்கம் இந்திய இனங்களிடம் இருக்கவில்லை. இதில் தமிழர்களும் அடங்குவர். 'சின்ன சின்ன மூக்குத்தியாம் சிவப்புக்கல்லு மூக்குத்தியாம்' போன்ற நாட்டார்பாடல்கள் இதன்பின்பே தோன்றின. 'இந்து நாகரீகத்தில் பெண்களின் நிலை' என்ற ஆராய்ச்சி நூலில் இது பற்றிய தகவல்கள் பொதிந்துள்ளன. நூலின் ஆங்கிலப்பெயர் POSITION OF WOMEN IN HINDU CIVILI ZATION BY DR.A.S.ALTEKAR

**அன்பரசு**

(1938) கி.பி.8ஆம் நூற்றாண்டில் வர்த்தக நிமித்தம் அரபுக்கள் இந்தியாவுக்கு வரத்தொடங்கிய பின்புதான் மூக்குத்தி அறிமுகமானதாக இந்நூல் தெரிவிக்கின்றது. தமிழகத்து முஸ்லிம்கள் இலங்கைக்கு வரத்தொடங்கிய பின் ஈழவர் மத்தியிலும் அது அறிமுகமானதாக நாம் கொள்ளலாம்.

பரதம் பயிலும் நாரிமணிகளின் காதில் தோடும் சிமிக்கியும் இடம்பெறுகின்றன. காதிற்கு மேற்புறமுள்ள தலைமயிரில் மாட்டப்படும் கன்னசரம் என்ற நகையையும் அணிகிறார்கள். இது காதோடு ஒட்டியபடி காணப்படும். விரல்களில் மோதிரமும், கைகளில் காப்பும் அணிவது வழமை. அத்தோடு காற்சலங்கை மிகவும் அத்தியாவசியம் 'பாதம் இரண்டில் பன்மணிச்சதங்கை, கீதம் பாடக், கிண்கிணி ஆட' என்ற பாடல் வரிகள் இதை வலியுறுத்துகின்றன. காற்சதங்கை மணிகள் வெண்கலம், செம்பு, வெள்ளி என்பனவற்றில் ஒன்றாக இருக்கலாம். இருப்பினும் ஆடலுக்குப் பின்னணியாக வரும் பாடலின் சுருதிக்கு ஏற்ற வகையில் இருக்கவேண்டும். காற்சதங்கை மணிகளின் எண்ணிக்கை பற்றிய தர்க்கம் தொடர்கின்றது. பாதம் ஒவ்வொன்றிலும் ஐம்பது வரையிலான கிண்கிணிகள் இருந்தால் போதும் என்று நம்புகிறேன்.

ஆடுபவரின் உள்ளங் கைகளிலும் பாதங்களிலும் சிவப்பு வர்ணச் சாயம் பூசப்படுவது பாரம்பரிய வழமை. நடனமணிகளின் முகத்தில் மேக்கப் செய்யும்போது கண்களில் விசேட கவனம் செலுத்த வேண்டும். பளிச் சென்று தெரியக்கூடிதாகவும், பக்கவாட்டாகவும், நேராகவும் 'வெட்டித் திருப்புவதற்கு' உகந்ததாகவும் கண்கள் இருத்தல் வேண்டும். அதுபோல் உதடுகளிலும் கவனம் வேண்டும். நடன மணிகளின் ஆடைகள் விலையுயர்ந்ததாக இருப்பின் பெறுமதி கருதி அவர்களுக்கு உற்சாகம் பிறக்கும். முன்பு விலையுயர்ந்த பட்டுச்சேலைகளை ஆடலுக்குப் பயன்படுத்தினார்கள். இப்போது பளிச்சென்ற வர்ணங்களில் மலிவான ஆடைகள் வந்துவிட்டன. சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற வர்ணங்களில் எது ஆடுபவருக்குப் பொருத்தம் என்று ஆராய்ந்துகொள்வனவு செய்தல் வேண்டும். பிடிப்பு இல்லாத இறவுக்கையின் அவசியத்தை வலியுறுத்த வேண்டியதில்லை.

இன்று பரதக் கலையில் பல்வேறு மாற்றங்கள் தோன்றியுள்ளன. இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் ஒரு பரதக்கலை நிகழ்ச்சி நான்கு தொடக்கம் ஐந்து மணி நேரம் எடுத்தது. இன்று அதிகபட்சம் இரண்டரை மணி நேரத்திற்குச் சுருங்கிவிட்டது. இதன்காரணமாக ஆடை ஆபரணங்களின் செறிவும் சுருங்கியுள்ளது. இதைக் கருத்தில் எடுத்துள்ள பரதக்கலை ஆராய்ச்சியாளர் பத்மா சுப்பிரமணியம் நடனமணிகளின் ஆபரணங்களைப் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார். (பரதக் கலைக்கோட்பாடு: டாக்டர் பத்மா சுப்பிரமணியம். வானதி பதிப்பகம் (1991) பக்கம் 122)

பரத நாட்டியத்தில் தற்போது அணியப்படும் நகைவகைகள்:

**தலை:** ராக்கொடி, தலைச்சாமான், சுட்டி, சந்திரன், சூரியன், நாகர், சடைநாகம், குஞ்சலம்.

**முகம்:** காதில்தோடு, சிமிக்கி, மாட்டல், மூக்கில் மூக்குத்தி, நத்து, புல்லாக்கு.

**கழுத்து:** அட்டியல், பதக்கம் சங்கிலி, முத்துமாலை, மாங்காய் மாலை, காசுமாலை ஆகியவற்றில் ஒன்று அல்லது இரண்டு, மகரகண்டிப் பதக்கம்.

**கையில்:** புஜத்தில் வங்கி, நாகொத்து. பாஜிபந்து ஆகியவற்றில் ஒன்று காப்பு (வளையல்), பட்டைக் காப்பு அல்லது கங்கணம் விரலில் மோதிரம்.

**இடுப்பில்:** ஒட்டியாணம் அல்லது தங்க வர்ணத்தில் பெல்ற்.

**கால்களில்:** சதங்கை, கொலுசு, திருமணமானவர்களானால் மெட்டி.

## தொடர்கதை

### பகுதி — 03



# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

### அத்தியாயம் - 11

வேப்பமரத்தின் கீழ் இருந்த மரக்குற்றியில் அமர்ந்தபடி முற்றத்து மாமரக்கிளையில் கட்டப்பட்ட ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார் சிவம்.

அவர்களின் சிரிப்பையும் உற்சாகத்தையும் பார்க்கும்போது மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருக்கிறது.

சூரியன் எதிரேயுள்ள வயல் வெளியில் சிவப்பாய் தாழ்ந்து கொண்டிருந்தநேரம். குறுணிக்கற்கள் நெருடும் மண்சாலையில் வீட்டுப் பொருட்கள் ஏற்றிய மாட்டு வண்டில் சலங்கைச் சத்தத்துடன் போய்க் கொண்டிருந்தது.

திடுமென குண்டு வெடிக்கும் சத்தத்தின் அதிர்வு கேட்டு வடக்குப் பக்கமாய் நிமிர்ந்து பார்த்தார். கிளிநொச்சி பரந்தன் பக்கமாய்த்தான் குண்டுகளை போடுகிறார்கள். கட்டடங்கள் வீடு, மனை எதுவும் மிஞ்சாது போலிருக்கிறது.. கவலையோடு நினைத்துக்கொண்டார். தொடர்ந்து குண்டுகளின் அதிர்வு கேட்டுக் கொண்டேதானிருக்கிறது. உயிரைக் ஏந்திக்கொண்டு வீடு வாசல் விட்டு ஓடி ஸ்கந்தபுரம் வந்தும் இரண்டு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. கிளிநொச்சி நகரமே துடைக்கப்பட்டு விட்டது போன்ற வெறுமை யுடன்தான் இருக்கும், நாய்கள் மட்டுமே ஊளையிட்டுத் திரிகின்ற தெருக்களில் இப்ப ராணுவம் நிற்கும். எல்லாச்சனங்களும் பிரதானவீதிக்கு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாய் பிரிந்து தூர இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். இந்தப் பக்கம் வந்தவர்களில் ஸ்கந்தபுரம், அக்கரா யன் குளம் என்று சிலர் இருக்க பலர் இதையும் தாண்டி ஜெயபுரம் முழங்காவில் என்றும் துணுக்காய் மல்லாவி என்றும் போய் குடியிருந் தார்கள். காடுகளின் அமைதி கலைந்து போனது. தெரு ஓரங்களில் காடு களைக் குடைந்து பிளாஸ்டிக் படங்கு களால் கூரை அமைத்துக் கொண்டு நிறைய சனம் குடியிருந்தது.

இப்போதைக்கு ஊர் திரும்பும் சாத்தியம் இல்லை என்றே தோன்றியது கிளிநொச்சியில் ராணுவம் இருக்கும் வரை ஊர்திரும்ப முடியாது.

இந்த இடப்பெயர்வு வாழ்க்கையே தொடர்ந்து இருக்கப் போகிறதோ என்ற பயம் எழுகிறது. ஏதோ சங்கரப்பிள்ளையின் புண்ணியத்தில் இந்த இடம் கிடைத்து இப்படி இருப்பதே போதுமானது.

இந்த இடத்தில் வீடு கட்டும் போது எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் வீடு போடும் வரை மாமர நிழலிலேயே இருந்தார்கள். முருகானந்தனும் விக்கினேஸ்வரனும் அக்கராயன் குளத்தில் இருந்த மரக்காலையில் மரங்கள் வாங்கி மாட்டு வண்டிலில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். "அப்பையாவும் இடம்பெயர்ந்து இந்தப்பக்கமாய்த்தான் வந்ததாம். விசாரிச்சுப் பார்த்து ஆளைக்கூட்டிவா. மரவேலை செய்துதரும்." ஊரில் அவர்களுக்குரிய எல்லா மரவேலைகளும் செய்துதருவது அப்பையா தான். "இத்தியடி அம்மன்கோயில் வாசலில அப்பையாவை நேற்று கண்டனான். கேட்டுக்கொண்டு வாறன்."

சைக்கிள் எடுத்துக் கொண்டுபோன முருகானந்தன் அரைமணியில் அப்பையாவையும் கூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான்.

"நீங்கள் கேட்டு நான் மாட்டன் எண்டு சொல்ல ஏலுமே அண்ணை. வந்து செய்து தாறன். கச்சேரிக்கு இங்க கொட்டிலுகள் போடப்போகினம். நாங்கள்தான் மரவேலை செய்து குடுக்கிறம். மகனும் நிற்கிறான்தானே. மாறி மாறி நாங்கள் செய்து தருவம்."

"கொஞ்சம் பெரிசாய் போட வேணும் அப்பையா. இங்க நாங்கள் கனக்கப்பேர் இருக்கிறம்."

"அதுக்கென்ன அண்ணை. இந்த ரெண்டு மாமரத்துக்கும் நடுவில நாப்பது அடிவரை நீளக்கொட்டில் போடலாம்."

"சரி போடு"

மளமளவென்று அலுவல்கள் நடந்தன.

ராமசாமியும் ஆறுமுகமும் வந்து நின்று சேர்ந்து வீடுபோட்டு முடித்தார்கள். பக்கத்து மில்லில் விற்றபழைய சீற் வாங்கி மேலே போட்டார்கள். மண்ணிலேயே கல் அரிந்து ஒரு அறை கட்டி தகரத்தில் கதவு போட்டார்கள். மிகுதி இடத்துக்கு அரைச்சுவர் வைத்து மேற் புறத்துக்கு உரப்பைகளை விரித்து அடித்து விறாந்தை அறை என்று பிரித்துக்கொண்டார்கள். குசினிக்கு காட்டுத்தடிகள் வாங்கி வரிந்து கட்டினார்கள்.

பின்காணிக்குள் குளிப்பதற்கு கிணறு இருந்தது. பக்கத்து காணிகளில் இருப்பவர்களும் அந்தக் கிணற்றில் குளிக்க வருவார்கள். குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கரும்புத் தோட்டத்திற்கு பக்கத்தில் உள்ள கிணற்றில் அள்ளிவரவேண்டும். பிளாஸ்டிக் கான் கொண்டுபோய் நிரப்பி சைக்கிளில் கட்டிக்கொண்டு வருவார்கள். தெருக்கரையின் ஒரு பக்கம் ஓடும் வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும். குளிக்கவும் உடுப்புத்தோய்க்கவும் நிறைய ஆட்கள் வாய்க்கால் தண்ணீரையே பயன்படுத்தினார்கள். வாய்க்காலின் கரைகளில் வரிசையாய் குடிசைகள் போட்டு பல குடும்பங்கள் இருந்தன. வெய்யில் எறித்தால் என்ன மழை கொட்டினால் என்ன அந்த குடிசைகளிலேயே இருக்கவேண்டிய நிலை தான்.

முன் பின் தெரியாமல் எங்கெங்கோ இருந்து வந்தவர்கள் இப்போது அயலவராய் சுற்றத்தாராய் ஆனார்கள். கிளிநொச்சியிலிருந்து இயங்கிய அனேக நிர்வாகங்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்துவிட்டது.

ஸ்கந்தபுரத்தில் போடப்பட்ட கொட்டில்களில் கச்சேரி இயங்குகிறது.கல்வித் திணைக்களம் அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு இடம் மாறியது. புதிதாய் போடப்பட்ட கொட்டில்களில் பிரதேச சபையும் நூலகமும் இயங்கியது. சந்தையும் விரிவுபடுத்தப்பட்டது. தெரு நீளத்துக்கு இருபுறமும் கடைகள் வரிசை வரிசையாக முளைத்தது. கிளிநொச்சி வைத்தியசாலை அக்கராயன் வைத்தியசாலையுடன் இணைந்து கொண்டது. புதிதாய் கொட்டில்கள் போடப்பட்டும் நோயாளர்கள் வரிசை தெருவரை நீண்டது.

ஒரு தடவை தொடர்ந்து காய்ச்சல் இருந்ததில் அவரை முருகானந்தன் அக்கராயன் வைத்திய சாலைக்கு கூட்டிப்போயிருந்தான். அங்கு போய் வரிசையில் தெருவரை நீண்டிருந்த சனங்களைப் பார்த்து வேர்த்து விறு விறுத்துப்போனார். இடம் பெயர்ந்து சாப்பிடவே வழியில்லாமல் கஷ்டப்படும் சனங்களுக்கு நோயும் வந்தால் என்ன செய்வது. ஒரு பனடோல் பத்து ரூபாக்கும் வாங்கமுடியாத நிலையில் சனங்கள் வைத்தியசாலையிலேயே தவமிருந்தார்கள்.

அவரும் வரிசையில் நின்று ரத்தம் சோதித்து மலேரியா என்று குளிசைகள் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வர மூன்று மணியாகி விட்டது. தலைசுற்ற அப்படியே படுத்துவிட்டார்.

அதன் பிறகும் ஏதோ ஒரு வருத்தம் மாறி மாறி வந்து கொண்டுதான் இருந்தது மனதிலும் உடலிலும் இயலாத்தனம் வந்து விட்டது. ஓரிடத்தில் இருப்பதே பெரும் துன்பமாய் இருந்தது. முன்பெல்லாம் ஒவ்வொரு வெள்ளியும் சிறிது நடந்து கரும்புத்தோட்டப் பிள்ளையார் கோவிலுக்கோ, அப்பால் உள்ள முருகன் கோவிலுக்கோ போய் கும்பிட்டு வருவார். இப்போது எப்போதாவது ஒரு தடவைதான் போய் வரமுடிகிறது. நிறைந்து போயிருந்த சனங்களினால் ஸ்கந்தபுரம் வீதி திணறிக்கொண்டிருந்தது.

ஊர் ஆட்கள் அறிந்தவர் தெரிந்தவர் என்று அவரைத்தேடிக் கொண்டு வந்து கதைத்து விட்டுப் போவார்கள், அப்போது மனதுக்கு கொஞ்சம் ஆறுதலாய் இருக்கும். ஊரே ஒவ்வொரு திசையில் சிதறிப் போய்விட்டது.

பரந்தனுக்கு அந்தப்பக்கமாய் தருமபுரத்தில் போய் இருந்த பரமுவின் மனைவி எறிகணை வீச்சில் இறந்ததாய் சிதம்பரியும் யோகனும் வந்துசொன்னபோது மனதுக்குள் பாரம் அழுத்தியது. வளர்ந்த பொம்பிளைப் பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு பரமு என்ன செய்யப்போறானோ... அவ்வளவு தூரம் அயலில் இருந்து பழகியவர்களின் செத்த வீட்டுக்குக்கூட போக இயலாத நிலை அதிக துன்பத்தை தந்தது.

கேட்கிற ஒவ்வொரு செய்திகளும் கவலையைத்தானே தருகிறது. அவர் தூர வானத்தையும் வயல் வெளியையும் பார்த்தார். சூரியன் முற்றாய் மறைந்து இருள் மெதுவாய் படரத்தொடங்கியது.

"பொழுது படுறநேரம். காத்துக்க இதில இருக்காதேங்கோ. உள்ள வாங்கோ" பராசத்தி வந்து கூப்பிட்டாள்.

"விளையாடினது போதும் எல்லாரும் வாங்கோ. கால்முகம் கழுவியிட்டு படிக்கவேணும்."

அவர் மெதுவாய் எழுந்தார். உடம்பே சோர்ந்து போகிறது. ஏன் இந்த தளர்வோ தெரியவில்லை.

வீட்டின் உள்ளே நுழைந்து விறாந்தையில் இருந்த கட்டிலில் அமர்ந்துகொண்டார். அவருக்காக வாங்கப்பட்ட பழைய கட்டில். மற்றவர்கள் எல்லோரும் மெழுகப்பட்ட தரையில் பாய் விரித்துப் படுத்துக் கொள்கிறார்கள். வாணி இரண்டு லாம்புகளை கொளுத்திக்கொண்டு வந்து விறாந்தையில் வைத்தாள். சாந்தனும் சுசீலனும் ஒரு லாம்பின் முன்னால் படிக்க அமர்ந்தார்கள். சியாமளாவினதும் விக்கினேஸ்வரனதும் பிள்ளைகள் மற்ற லாம்பைச் சுற்றி புத்தகங்களுடன் அமர்ந்துகொண்டார்கள். மண்ணெண்ணெய் லீற்றர் இருநூற்றைம்பது ரூபா விற்றாலும் வீட்டுக்கு தேவைப்படும் விளக்குகளை கொளுத்தத்தானே வேண்டும்.

இவர்கள் கிளிநொச்சியில் படித்த பாடசாலை இப்போது நீள நீளக்கொட்டில்கள் போடப்பட்டு அக்கராயனில் இயங்கிக்கொண்டிருக்கிறது. தளபாடங்கள் இல்லாததால் தரையில் பாய்விரித்து அமர்ந்து கொண்டுதான் படிப்பு நடக்கிறது. சிலநேரம் நிழல் மரங்களின் கீழும் வகுப்புகள் நடக்கும். இடம்பெயர்ந்து வந்த ஆரம்ப நாட்களில் மரங்களின் கீழேயே சில பாடசாலைகள் நடந்திருக்கின்றன.

"ஏய் சத்தம் போடாமல் படியுங்கோ. ஆரும் சத்தம் போட்டால் அடிதான் விழும்" சியாமளாவின் அதட்டலில் அமைதியானார்கள்.

"எனக்கு பசிக்குது அம்மா."

"கொஞ்சநேரம் படிச்சிட்டு வந்தால்தான் சாப்பாடு. இருந்து படியுங்கோ"

"பிள்ளையளுக்கு சாப்பாட்டைக் குடுங்கோவன்"

அவர் குசினியைப் பார்த்து குரல் கொடுத்தார்.

"பத்து நிமிசம் படிக்கட்டும். சாப்பிட்டால் படிக்காமல் படுத்திடுவினம். இப்பதான் புட்டு அவிக்கிறம்."

தடி வரிந்திருந்த பக்கத்து குசினிக்குள் அவர்களது நடமாட்டம் தெரிந்தது காட்டுத்தடிகள் விளாசி எரிந்த அடுப்பின் முன் பராசத்தி இருந்து நீத்துப்பெட்டியில் புட்டை அவிய வைத்துக்கொண்டிருந்தாள். வாணி தேங்காய் துருவ சியாமளா தட்டுக்களை கழுவ முற்றத்துக்கு எடுத்துப்போனாள். விக்கியின் மனைவி தண்ணீர் வாளியை எடுத்து வைத்தாள்.

"கொஞ்சம் வெள்ளன உந்த சாப்பாடுகளை செய்தால் என்ன. நாலு பேரும் சேர்ந்து என்ன செய்யிறீங்கள். பிள்ளையளுக்கு பசியல்லே.."

அவர் அலுப்புடன் கட்டிலில் சாய்ந்து கொண்டார்.

அவருக்கு அன்னத்தின் நினைவு வந்தது. இடம்பெயர்ந்து வந்த இத்தனை நாட்களில் அந்தப் பக்கத்திலிருந்து ஒரு தகவலையும் அறிய முடியாதிருந்தது. முற்றாக பாதை அடைபட்ட பிறகு நடராசுவும் வரவில்லை.

நடராசு வருவதென்றால் காங்கேசந்துறையிலிருந்து கப்பலில் திருகோணமலைக்கு வந்து பிறகு பஸ்ஸில் வவுனியா வந்து வன்னிக்கு வரவேண்டும். இந்த சுற்றுப்பாதையால் வருவது எவ்வளவு சிரமம். ஐம்பத்தைந்து மைல்கள் நீளமுள்ள பாதையில் பயணிக்க முடியாமல் சுற்றுப் பாதையால் ஐம்பத்தைந்து மணி நேரம் பயணிக்கவேண்டியிருப்பது எத்தனை துன்பம். அப்படித்தான் அவ்வளவு தூரம் சுற்றி வசந்தனைப் பார்க்க வந்தாலும் இவர்கள் இங்கிருப்பது நடராசுவுக்குத் தெரியாது. அவருக்குள் எந்நேரமும் அந்த யோசனையே இருந்தது.

இரவு சாப்பிட்டுவிட்டு சுருட்டு பற்ற வைத்துக்கொண்டிருந்தார். வீடு அமைதியாகி விட்டது. விறாந்தையில் லாம்பு மெல்லிய வெளிச்சத்துடன் எரிந்துகொண்டிருந்தது. வெம்மையான காற்று புளுக்கத்தைத் தந்தது. வானத்தில் வட்ட நிலவு வெளிச்சத்தை அள்ளி இறைத்துக்கொண்டிருந்தது.அடுத்த காணிக்குள்ளிருந்த குடிசைகளில் விளக்கு வெளிச்சத்தை காணமுடியவில்லை. நிலவு எறிக்கும் நாட்களில் குடிசைகளில் விளக்குகள் எரிவதில்லை. அனேகம் பேரின் நிலை இந்த விதமாகத்தான் இருக்கிறது. வாய் கசத்து ஊறிய எச்சிலை எழுந்து போய் துப்பி விட்டு மறுபடி வந்து அமர்ந்துகொண்டார். இருளை ஊடுருவிக்கொண்டு பெருங்குரலில் ஓலமிட்டு அழும் பெண்ணின குரல பக்கத்துக்குடிசையிலிருந்து கேட்டது.

(தொடரும்)

சிறுகதை

# ஊடு தேடி...



ரஜிதா

வள்ளம் புறப்பட்டது. இனம் புரியாத இன்பக்கிளர்ச்சி மேலோங்க வள்ளத்தினுள் இருந்த பெரியவர்கள் மௌனசாமிகள் ஆனார்கள். எல்லோர் மனதிலும் எங்கட இடத்துக்கு எங்கட வீட்டுக்குப் போறம் என்ற உணர்வுக் கொந்தளிப்பு. அந்த இன்பத்தை முழுமையாக அனுபவிப்பதற்காக மௌனமாக இருந்தார்கள். குழந்தைகளுக்கு மட்டும் ஒரே கொண்டாட்டம்.

வள்ளம் வெகுதூரம் சென்றுவிட்டது. சிறிது சிறிதாக இந்திய நிலப்பரப்பு மறைந்து எங்கும் கடல் மயமாகக் காட்சியளித்தது.

வள்ளத்தில் இருந்தவர்கள் அனைவரும் 1990ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து வள்ளங்கள் மூலம் இந்தியா வந்தவர்கள். இவ்வளவு காலமாக அவர்கள் அகதிமுகாமில் பட்ட அவலம் சொல்லும் தரமன்று.

நடராசா ஒரு விவசாயி. கீரை, வெங்காயம், மரவெள்ளி என்று காலத்திற் கேற்ப பயிர்களைச் செய்து, அந்த ஊரில் விரல்விட்டு எண்ணக்கூடிய பெரியவர்களுள் ஒருவனாய் வாழ்ந்தவன்.

ஒருநாள், 'ஆமிக்காறங்கள் ஒவ்வொரு இடமா பிடிச்சுக்கொண்டு வாறாங்களாம். அதுக்குள்ள காடையரும் வாறாங்களாம். பிஞ்சுக் குழந்தையளக்கூட வெட்டுறாங்களாம்.' என்றபடி பீதியுற்ற மக்களுள் தனது இளம்மனைவி பார்வதியுடனும், விக்னேஸ், கதிர் என்று முறையே ஐந்து, மூன்று வயதுடைய மகன்களுடனும் இந்தியா சென்றவன்.

தேனுகா அகதி முகாமிலேயே பிறந்தாள். பிள்ளைப் பேற்றின்போது அவர்கள் பட்டபாடு நாய்படாப்பாடு. அன்றே பார்வதியின் மனதில் விதை விழுந்துவிட்டது. 'செத்தாலும் பரவாயில்லை, எங்கட நிலத்தில சாகவேணும்' அந்த விதை நாளாக நாளாக பெருவிருட்சமாகி கிளை பரப்பியது. நடராசாவை ஒவ்வொரு நாளும் குடையத்தொடங்கினாள்.

குழந்தைகள் வீட்டைப்பற்றி விசாரிக்கும் போது பழைய வசந்தங்களைச் சொல்லிச் சொல்லியே பூரித்தாள். எனவே ஆசை ஆர்வம் குழந்தைகளையும் தொற்றிக் கொண்டது. 'அப்பா எங்கட வீட்ட போவம்' என ஆக்கினைப்படுத்தினர். அதன் விளைவு இன்றைய கடல் பயணம்.

பொங்கி நுரை தள்ளும் கடலலைகளும் எங்கட வீட்டை போறம் என்ற வீம்புமாகக் குழந்தைகளின் உற்சாகத்திற்கு அளவேயில்லை.

"அப்பா! அண்ணாவைப் பாருங்கோ எங்கட வேப்பமர ஊஞ்சலில தான்தான் முதல் ஆடுவாராம். அப்பா நானெல்லே முதல்...." என மழலை கொஞ்சக் கூறினாள் ஐந்து வயதான தேனுகா.

"இல்லை நீ சின்னப்பிள்ளை விழுந்திடுவாய் நான் ஆடிப்போட்டு பிறகு உன்னையும் தூக்கி வைச்சு ஆடுவன் என்றான் சின்னவன் கதிர்.

அப்பொழுதே அவர்களுக்குள் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. பின்னர் பார்வதி தலையிட்டு அவர்களை அடக்கினாள். அவர்களை அடக்கினாளே ஒழிய அவளின் மனக்கற்பனைகளை அடக்க முடியவில்லை.

சிவராத்திரிப் பொழுதில் அவளின் சகோதரிகளோடு சேர்ந்து, நாலு கயிறு போட்டு நடுவே மரப்பலகை வைத்துக்கட்டிய ஊஞ்சலில் கழித்த பொழுதுகள் பசுமையாய் நிழலாடியது.

பார்வதியின் கற்பனை இவ்வாறிருக்க நடராசாவின் கற்பனை வேறுவிதமாய் இருந்தது. 'வீட்டை போய் இரண்டு நாளில வீடெல்லாம் சீர்ப்படுத்திப்போட்டு நிலத்தைக் கொத்தவேணும். 'ஆடி விதை தேடி விதை' எண்டு சொல்லுவினம்' இந்த முறை நெல்லு விதைக்க வேணும். வயிறார குத்தரிசிச்சோறு சாப்பிட வேணும். உங்க உந்தப் பச்சையரிசிச்சோற்றை பதின்மூண்டு வருசமா சாப்பிட்டு மூலவியாதி வந்ததுதான் மிச்சம். வேறொண்டுமில்லை.

இருள் கவியத் தொடங்கியது. வள்ளம் கரை ஒதுங்கியது. 'உங்கட இடம் வந்திட்டுது எல்லாரும் இறங்குங்கோ நேவிக்காரன் வரமுதல் நாங்கள் போகவேணும்' வள்ள ஓட்டி துரிதப்படுத்தினான்.

தூங்கிய மகளையும் சாமான்களையும் தூக்கியபடி நடராசா கீழே இறங்கினான். அவன் உடல் புல்லரித்தது. 'ஊருக்குள்ள போய் விசாரியுங்கோ நாங்கள் வாறம்' என்றபடி குடும்பங்களையும் இறக்கிவிட்ட நிம்மதியில் வள்ளக்காரன் சென்றுவிட்டான்.

சிறிது தூரத்தே குடிமனைகள் தென்பட்டன. இவர்களைக் கண்டதும் கூட்டம் கூடிவிட்டது.

இவர்கள் நிலைமையை நன்றாக அறிந்த ஊர்ப்பெரியவர், "சரி சரி நீங்கள் எங்கட வீட்டை வாங்கோ ஏதாவது, சாப்பிட்டுவிட்டு படுங்கோ எல்லாம்விடியப் பார்ப்பம்" என்றபடி கூட்டத்தைக் கலைத்தார்.

அவர்கள் எவ்வளவுதான் கேட்டும் அந்த இடத்தின் பெயரைக் கூறாது விடியட்டும் என்றுவிட்டார். இவற்றிற்கெல்லாம் பழக்கப் பட்டுப்போன பெரியவர்.

விடிந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக விசாரித்ததில் அந்த இடம் நெடுந்தீவு என்று புரிந்தது. அவர்களுக்கோ பேரதிர்ச்சி.

ஊர்ப்பெரியவர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். இது ஒரு வழமையான நிகழ்வென்பதையும் பருத்தித்துறைக்குக்கொண்டு போறம் என்றுவிட்டு இந்திய மீனவர்கள், ஏதாவது ஒரு தீவில் இறக்கிவிட்டுச் செல்வதையும் தெரிவித்தார்.

பின்னர் அவர்களுக்கான உணவுகள் வழங்கப் பட்டது. நடராசா உண்ண மறுத்து விட்டான். அவனது இடத்தை விசாரித்துவிட்டு மாவிட்டபுரத்தில் வீடுகளே இல்லை என்று கூறிய பெரியவரின் வார்த்தைகள் அவனுக்கு பேரிடியாய் விழுந்தன.

'வெளித்திண்ணையில் வேப்பமர நிழலில ஓலைப்பாய் விரிச்சு படுக்கவேணும்' என்ற அவனது கற்பனை காற்றாகிப் போனது.

விவசாய எண்ணமெல்லாம் கைவிட்டு போய் ஒரு குடிசை போடுவம் என்ற நிலைப்பாட்டில் புறப்பட்டான்.

ஊர்ப்பெரியவர் வழிசொல்லி ஒரு ஆளையும் யாழ்ப்பாணம்வரை துணைக்கனுப்பினார். குறிகட்டுவான் வரை வள்ளத்திலும் பின் பஸ்ஸிலும் செல்லுமாறு கூறினார். நன்றிப்பெருக்கோடு அவருக்குப் பயணம் சொல்லிப் புறப்பட்டனர். 'என்ன இருந்தாலும் இது எங்கட சனமெல்லே' என்ற உணர்வு அவனுள் பரவி நின்றது.

மதியம் அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளை நோக்கி பஸ் புறப்பட்டது. கொண்டெக்ரரிடம் இடத்தைக் கூறினான். அந்த இடத்திற்கு பஸ் போகாது என்றார் நடத்துநர்.

"பரவாயில்லை எங்க மட்டும் போகுமோ அங்க மட்டும் போங்கோ" என்றான் நடராசா. அவனுக்கு இவரது பேச்சு விநோதமாய்பட்டது.

'பஸ்போகாட்டா நடந்தெண்டாலும் போவம். இந்தப் பதின்மூண்டு வருசத்தில வழியும் மறந்து போகுமே' ஒரு தடவை கண்மூடி தனது ஊரை சிந்தித்தான். சிந்தனையின் பசுமை முகத்திலும் தெம்பை வரவழைத்தது.

"அண்ணை கனவு கண்டது காணும் இறங்குங்கோ. இதுக்கு மேல போகேலாது கனநேரம் நிண்டா ஆமியும் விசாரிப்பான். நாங்கள் வாறம். அரை மணித்தியாலத்தில சாப்பிட்டிட்டு எடுப்பம் அதுக்கிடையில யோசியுங்கோ. இல்லாட்டி நாளைக்குத்தான் பஸ்"

நடராசாவிற்கு தலை சுற்றுவது போலிருந்தது. இது எந்த இடம், எந்தக்காடு, எதுவுமே புரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தான். வானளாவி நின்ற அரசமரம் தன்னைப்பறைசாற்றியது. இது ஐயனார் கோவில் எவ்வளவு பசுமையான இடம் இப்போது...

பொயின்றிற்குள் நின்ற ஆமியைத் தனது இடத்திற்குப் போக அனுமதி கேட்டான். அவன் கோபமாக மறுத்தான். இனியும் பேசினால் சுட்டுவிடுவான் போலிருந்தது.

களைத்துப்போய் பஸ்ஸினுள் ஏறி அமர்ந்தார். குழந்தைகள் கரைச்சல் கொடுத்தன.

"அப்பா எங்க எங்கட வயல்" என சின்னவனும்,

"இது எந்தக் காடு" என மூத்தவனும்,

"எங்கட வீட்டபோவம்" எனக் கடைக்குட்டியும் சிணுங்கினர். தனது இயலாமையை மறைக்க குழந்தைகள் மீது சீறி விழுந்தான்.

அருகே வந்த நடத்துநர், "நீங்கள் எங்க இருந்து வாறியள்" என்றார். இப்போது அவர் குரலில் பரிதாபம் கலந்திருந்தது.

"இந்தியாவில் இருந்து பதின்மூன்று வருசத்துக்குப் பிறகு" என்றான் நடராசா.

"இஞ்சத்தை வீடெல்லாம் எப்பவோ அழிஞ்சுபோட்டுது. வழியெல்லாம் பற்றைக்காடுகள் சனசஞ்சாரமே இல்லை. பண்ட் தாண்டிப்போகேலாது."

அந்த வசனத்தைக் கேட்டதும் நடராசாவின் முகத்தில் கண்ணீர் கொப்பளிக்கத் தொடங்கியது.

"இப்ப நாங்கள் எங்க போறது" பார்வதி விக்கலுடன் கேட்டாள். அவனால் பார்வதியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே முடியவில்லை.

"நீங்கள் ஒண்டு செய்யுங்கோ யாழ்ப்பாணத்தில இருந்து நேரா முகமாலை போய் கிளிநொச்சி போங்கோ. அங்க எங்கட 'பொடியளிட்ட' சொன்னியளெண்டால் ஏதாவது வசதி செய்து தருவினம்." என்றார் நடத்துநர்.

பஸ் புறப்பட்டது. வீடெல்லாம் எப்பவோ அழிஞ்சிட்டுது பண்ட் தாண்டி யாரும் போகேலாது என்ற வசனம் மனதில் சாட்டையடியாய் வலித்தது.

குழந்தைகளை அணைத்துக் கொண்டான்.

□ □ □ □

## குட்டிக் கதை

பார்வதி அக்கா முயற்சிக்காறிதான்.

ஓயாமல் உழைத்து உழைத்து இழைத்துப்போனாலும் அவள் இன்னும் உழைத்துக் கொண்டிருந்தாள்.

வறுமை அவளது இறுக்கமான உறவாய் இருந்தது.

அவளுக்கு இப்போது வயது முப்பத்தி மூன்றுதான். கட்டான உடல், கனிவான முகம், கலையாத சிரிப்பு. இம்சியளவு வாழ்வு புயலோடு அடித்துச்செல்லப்பட்டது அவளுக்கு வேதனை தான்.

அவள் யாரிடத்திலும் கையேந்தி நிற்கவில்லை. எதிர்காலத்தைத் தானே திட்டமிட்டுக் கொண்டாள்.

குழந்தைகள் பள்ளிக்கூடம் போகத்தொடங்கிவிட்டனர்.

தையல் கலை அவளுக்கு கைகொடுத்தது.

சண்டை தன் வாழ்வுக்காக சாவுக்கு ஆள்தேடி அலைந்தது.

யுத்தம் வீட்டுவாசல்வரை தேடி வந்தபோது பார்வதி அக்கா சில காலம் முகாம் ஒன்றில் தன் வாழ்க்கையைத் தொடங்கி நடத்தினாள்.

இளமை உணர்வுகளில் அடிபட்டுப் போகாமல் யாருடைய வாய்க்கும் பல்லுக்கும் அகப்படாமல் நெறியான வாழ்வுள் புதைந்து கிடந்தாள்.

ஏதோ அப்பப்ப கிடைக்கும் நிவாரணத்துடன் தன்னுடலை வருத்திக்கிடைக்கும் ஊதியத்துடன் வாழ்க்கை நகர்ந்தது.

அப்பாவின் இழப்பை மறந்துவிட்ட அந்தக் குருமனுகளால் தாங்கள் வாழ்ந்த இடத்தை

# எங்கட காணிக்குள்...



கடுகடுப்பைக் கூடக் காண முடியாது. இத்தனையும் அவளைத் தனிமைப்படுத்திவிட்டது.

சின்னத்தம்பியர் அவளைக் கிழப்பிக்கொண்டு வந்து வன்னியில் ஒரு துண்டுக் காணியில் குடியேறி தனி வாழ்வு வாழத்தொடங்கியதால் அவளது சாதிசனம் அவளைத் தள்ளி வைத்துவிட்டது.

அவளின் உறவெல்லாம்மூன்று பிள்ளைகளும் அவரும்தான்.

அவர்களை வளர்த்து வல்லவர்களாக்கி, வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதில் இருவரும் குறியாய் இருந்தனர்.

வனத்துள் வனப்பாக நிமிர்ந்து எழுந்தன தென்னங்கன்றுகள். சின்னஞ்சிறிய குலைகளைத் தள்ளிச் சிரித்தன.

வியர்வை முத்துக்களால் மூச்சுக்கொண்டு எழுந்து நிமிரும் பயிர்களையும் கண்டு அவர்களே திகைத்து நின்றனர்.

சின்னத்தம்பியர் தனது சாரதிப் பத்திரத்துடன் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடமே கழிந்து போனது.

குண்டு வீச்சால் சிதறிப் போன சின்னத்தம்பியரின் உடலைக் கூட ஒன்றுசேர்த்துப் பார்க்க அவளால் முடியவில்லை.

எப்படியோ அவள் துன்பங்களைச் சுமக்கத் தயார் ஆனாள்.

புயலோடு இணைந்த விற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

எடுக்கக் கூடியதையும் எடுத்துக்கொண்டு, குழந்தைகளுடன் உயிர்காக்க ஓடிக்கொண்டிருப்பவருள் ஒருத்தியாக ஓடத் தொடங்கினாள்.

எங்கே கால்போன போக்கில் .........

எதைப்பற்றியும் யோசிக்க பொழுது விடியவில்லை.

அவளுக்குச் சோறு போட்ட இயந்திரம் அனாதையாகக் கிடந்தது. வன்னியில் அவளுக்கு இடப்பெயர்வு.

துன்பச் சுழியில் அகப்பட்டு அடித்துச்செல்லப்பட்டவள் மறக்கமுடிய வில்லை.

"அம்மா எங்கட வீட்ட எப்ப போவம்" என்று கேட்டு அவளைக் குடைந்து கொண்டிருப்பார்கள்.

"அவளால் ஒரு நாளைக்குப் போவம்'' என்று சொல்லமுடிந்ததே தவிர, உறுதியளிக்க முடிய வில்லை.

ஒருநாள் குழந்தைகளுக்கு உண்மையைச் சொன்னாள்.

"எங்கட காணிக்குள் ஆமி இருக்கிறானாம்"

இப்படியே விட்டிட்டு நாங்கள் ஓடினால் அவன் போவானோ அம்மா.

மூத்தவனின் கேள்வி அவளை உலுப்பிவிட்டது.

என்னம்மா முழுசுறாய் நாங்கள் போய் அவனைப் போகச் செல்லுவம்.

இரண்டாவது மகன் கூறினான்.

"உனக்கு விசரே அவன் சுட்டுப்போடுவான்"

மகன் கூறினான்.

நாங்களும் சுடுவம் மூத்தவனின் உதடுகள் துடித்தன.

"எங்கட காணிக்குள்ள அவனுக்கு என்ன அலுவல்."

இரண்டாவது மகன் பற்களை நெருடினான்.

நாங்கள் எங்கட காணிக்குள் போகத்தான்போறம் நீங்கள் கெதியா... பார்வதி வானவெளியை நோக்கி தன் அனல் விழிகளை செலுத்திக்கொண்டிருந்தாள்.

முருகு பாரிமகன்


## ஈழநாதத்தின் குறுநாவல் போட்டி

### சிறந்த படைப்புக்கு 25,000 /= ரொக்கம் பரிசு

இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஈழநாதம் குறுநாவல் போட்டி ஒன்றை அறிவிக்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் இதில் ஆர்வமுடன் பங்கேற்க அது வேண்டுகிறது.

கதை எவ்விடயப்பரப்பிலும் அமையலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்பு முன்பு தவறி வந்ததோ, வேறு போட்டிக்காக அனுப்பப்பட்டதோ, முன்பு பிரசுரிக்கப்பட்டதாகவோ, பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்ட தாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தனது சொந்த ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த படைப்புக்கு (25,000/=) இருபத்தி ஐயாயிரம் ரூபா ரொக்கம் பரிசாகக் கொடுக்கப்படும்.

பிரசுரிக்கத் தகுதியானவை எழுத்தாளரின் அனுமதியுடன் வெள்ளிநாதத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி மே,15 ஆம் திகதி. தொடர்புகளுக்கு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
கிளிநொச்சி.


## முகங்களையும் முகவரிகளையும் தொண்ட மனிதர்கள்

அன்றுதான் அருகருகில்
உண்மையாய் இருந்தோம்
என்னை உனக்கும்
உன்னை எனக்கும்
தெரியாமல் தானிருந்தோம்.

அன்றைய இரவொன்றை
நீ எனக்குப் பரிசளித்தாய்,
உன்னை நானும்
என்னை நீயும்
புரிந்து கொள்வதற்கு.

நீ உனது குடும்பத்திலிருந்து
அந்நியப்பட்ட பொழுது
அதிர்ச்சிக்குள்ளானேன்
உன்னுள்ளும் மனிதம்
குடியிருந்தமையை அறியாமையால்
வெட்கித்துப் போனேன்.

எனக்காய் நீ குருதி
சிந்திய பொழுதும்
உன்னை நீ இழக்க
முற்பட்ட பொழுதும்
என்வீர சகோதரர்களை
ஞாபகமூட்டினாய்: பாச
விழிகள் மலர அவர்களை
உண்ணில் கண்டு
கண்ணீர் சொரிந்தேன்.

நண்பா என்றே
உன்னை விழிக்கிறேன்
வேறெதனையும்,
நான் உனக்குள்ளும்
நீ எனக்குள்ளும்
கண்டு பிடிக்க முடியாது.

நண்பா!
நான் உன்னோடு உறவாட
எவரும் எனக்கு எதையும்
தரவில்லை, என்பதை
நீயறிவாய்: எனினும் நட்புடன்
புன்னகைகளைத் தொடர்ந்தும்
பரிமாறுவோம்.

உன் போல நான்
வாழ விரும்புகிறேன் உன்
குடும்பம் மறுக்கிறது
இப்பொழுது நீ என்னுள்
ஆழப்புகுந்து
ஏளனமாய் சிரிக்கிறாய்
"இன்னும் நான் நானாக
வாழவே அவர்கள்
விடுகிறார்களில்லை" என்கிறாய்
நான் புரிந்து கொள்கிறேன்
என்னையும் உன்னையும்
அவர்களையும்.

நண்பா இன்னும்
நாம் எம்
உணர்வுகளை
கொழுந்து விட்டெரியச்
செய்வோம்
உனது குடும்பத்திலிருந்து
உனது சுயங்களை
நீ வென்றெடுப்பதற்கும்
எனது சுயங்களை நான்
வென்றெடுப்பதற்கும்.

அதுவரை ஆத்மார்த்தமான
உன் உணர்வுகளைத்
தாங்கியபடி
உடலால் விடைபெற்றுக்கொள்கிறேன்.

யாத்திரீகன்




# இரவு இவர்களுக்கு ஒளிதான்




தீபன் குமாருக்காக காத்திருந்தான். அவர்களுக்கு முக்கியமான வேலை ஒன்று காத்திருந்தது. தனிக்கட்டையாக, வாழ்வுக்காக, ஏங்கிக் கொண்டிருக்கும் சீத்தா ஆச்சியின் வீடு மேய்ந்துகொடுக்கவேண்டும்.

அதற்குரிய கிடுகுகள் யாவும் ஒழுங்குசெய்து முடித்திருந்தார்கள்.

மற்றவர்களின் துன்பங்களைத்தங்களின் துன்பமாக ஏற்றுக கொண்டு அவர்களுக்கு உதவி செய்வதிலேயே அவர்களின் வாழ்வுப் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது.

"தம்பி கையை அலம்பு.. சாப்பிடு...பிறகு எங்கை எண்டாலும் போ!" தாயின் அன்புக் கட்டளை.

அவன் எழுந்து கையை அலம்பிவிட்டு சாப்பிட அமர்ந்தான்.

"அம்மா பசிக்குது"

குரல் வந்த திசையில் ஊடுருவியது தீபனின் விழிகள்.

எண்ணெய்யே காணாத பரட்டைத்தலை, ஒட்டிய உடல், அழுக்கேறிய உடை, விழிகளில் நீர்த்துளிகள் இரு சிறுவர்கள்.

தீபன் அவர்களை உள்ளே வருமாறு அழைத்தான்.

விழிகளைப் பிதுக்கி, நெளிந்து வளைந்து, கூனிக்குறுகி உள்ளே வந்து திண்ணையில் அமர்ந்தனர்.

இரக்க சுபாவம் மிக்க தாயின் கண்கள் கலங்கிப் போனதை தீபன் கவனிக்கத் தவறவில்லை.

'அம்மா இவங்கள் பெரிய கில்லாடிகள். பள்ளிக்கூடமும் போகாமல் தெருத் தெருவாகத் திரியுறாங்கள். இவங்களுக்காக அழுகிறியள்"

"பாவமடா அதுகள் பிஞ்சுகள் அதுகள் என்ன செய்யும், நீங்களும் சாப்பிடுங்கோ வாருங்கோ கையை அலம்புங்கோ"

"வேண்டாம் எங்கட பையுக்குள்ள போடுங்கோ"

அவள் வியப்புடன் பார்த்தாள்.

அவர்கள் கெஞ்சுதலுடன் கேட்டனர்

"ஏன் இஞ்சை சாப்பிடக் கூடாதே"

"எங்கட தம்பிக்கும் தங்கச்சிக்கும் குடுக்க வேணும்"

தாயுள்ளம் கலங்கியது. சின்னஞ்சிறுசுகள் என்ன பாசம்

அவள் தனக்குள் வியர்ந்து கொண்டாள்.

"அம்மா உது ஒரு பொய் ஞாரக் கூட்டம் உப்புடித்தான் சொல்லுவாங்கள்"

குமாரின் குரல் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

குமாரைக் கண்டதும் சிறுவர்கள் திரு திருவென முழித்தனர்.

பாவம் குமார் வெருட்டாதை. சின்னப்பிஞ்சுகள்.

"இல்லை அம்மா உவன்ரை தாயை எனக்குத் தெரியும்"

"டேய் உண்மையைச் சொல்லுங்கோ உங்கடை அப்பா என்ன வேலை என்று தீபன் அதட்டினான்"

இருவரும் சிணுங்கத் தொடங்கினர்.

"அப்பா விறகு கொத்தயுக்க கோடாலி வெட்டி நடக்கமாட்டார். "என்று தேம்பினான் ஒருவன்.

அம்மாவிற்குக் காய்ச்சல் என்றான் மற்றவன்.

"டேய் பொய் சொல்லாதை அம்மா உங்களைக் கூட்டி வந்து உதிலை விட்டிட்டு வேற பக்கத்தால போகயில்லையோ?"

என்று அதட்டினான் குமார்.

ஓம் என்பது போல் தலையசைத்தான் மூத்தவன்.

"டேய் தம்பியவை நீங்கள் படிக்கப் போறயில்லையோ."

என்ற அம்மாவை முந்திக் கொண்ட குமார்

"அம்மா உனக்குத் தெரியாது இவன்ரை தகப்பன் பெரிய குடிகாரன் அந்த மனுசி பாவம் பிச்சை எடுத்துக்கொண்டு போய்க் குடாட்டில் அடியிலை ஒருத்தரும் தப்பேலாது" என்றான்.

"இதுதான் அம்மா இப்ப நடக்குது. தான் உழைச்சு வாழத் தெரியாது மனுசி பிள்ளையளைக் கையேந்த வைக்கிறவங்களால இந்தப் பிஞ்சு களின்ர எதிர்காலமே பாழாய்ப் போகுது"

"சரி சரி விடுங்கோ அதுகள் சாப்பிடாட்டில் இருக்கட்டும் நீங்கள் சாப் பிடுங்கோ என்றாள் அம்மா.

"உவங்களை உப்பிடி விட்டால் சமூகமே நாறிப்போகும்"

அதுக்கு நீங்கள் என்ன செய்யப் போறியள் குமார்?

அதுக்கு வழி இருக்குது. அம்மா விளங்காதவனுக்கு விளங்க வைக்க வேணும்.



"ஏற்காதவனுக்கு ஏற்கும்வரை சொல்லுவம்"

'வாருங்கோ சாப்பாடு போட்டாச்சு"

தீபன் உட்கார்ந்தான். குமார் சாப்பிட மறுத்து விட்டான். அவன் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு சிறுவர்களையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அம்மா மூவருக்கும் சிற்றுண்டி கொடுத்தாள்.

தீபன் எழுந்து கை அலம்பினான்.

"குமார் ஆச்சியின்ரை வீடு மேய்ஞ்ச கையோட உவங்கட வீட்டை போவம்" என்றான் தீபன்.

"ஓமோம் இதுக்கு ஒரு முடிவு கட்ட வேணும்."

அதுக்கு முதல் இதுகள் பள்ளிக்கூடம் போக வேணும், அந்த அம்மாவை வீட்டில இருந்து உழைக்க வழி பண்ண வேண்டும்.

"ஓமடா மோனை நல்ல புத்தி சொல்லி ஆரையாளும் கெஞ்சி மண்டாடி ஏதும் செய்து குடுங்கோ"

"ஓமம்மா"

இருவரும் எழுந்து ஆச்சியின் வீட்டை நோக்கி நடந்தனர்.

அம்மா பைநிறைய உணவைப் போட்டு நிரப்பினாள். சிறுவர்கள் இருவரும் வாங்கிக் கொண்டு நன்றிப் பெருக்குடன் வெளியே சென்றுகொண்டிருந்தனர்.

**முருகு பாரிமகன்**

## வாரம் ஒரு குறள்



*நல்ல குடியிலே பிறந்தவர்கள் ஒரு கீழ்த்தரமான செயல்களைச் செய்தாலும் அது ஆகாயத்திலே தோன்றுகின்ற சந்திரனின் களங்கத்தைப்போல அது பெரிதாகத் தோன்றும்.*

*அதாவது நற்குடியிலே பிறந்தவர்களுக்கு சந்திரனையும் அந்தச் சந்திரனிடத்திலே விளங்குகின்ற களங்கத்தை அவர்களின் குற்றத்திற்கும் ஒப்பிடுகின்றார். இதிலே குடிப்பிறந்தவர்கள் எவ்வாறான செயல்களைச் செய்தாலும் அது அவர்களை இழிநிலைக்கு தள்ளி விடும் என்பதனையே*

*"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்*
*மதிக்கண் மறுப்போல் உயர்ந்து"*

*என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 19

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தி | உ | க | கு | டு | ம் | வ |
| ளை | பா | யி | ரை | ள் | ர | மி |
| தீ | அ | வெ | மே | வ | ன் | தொ |
| சி | ப | ல | ன் | த | பு | ன் |
| க | ல | வ | நி | ள் | பா | ல் |
| த் | சை | பு | ர் | ட் | ர் | யா |
| கா | ய | கை | ட | ப் | யீ | சு |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -17 இன் விடைகள்

01. பல்லி.
02. பாம்பு.

01. பச்சை.
02. சிவப்பு.
03. மஞ்சள்.

### சொற்சிலம்பம் - 17 இன் பரிசுக்குரியவர்

த.தர்சினி,
மு/கைவேலி கணேச வித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு

### சொற்சிலம்பம் - 17 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கு.தமிழ்ப்பிரியா, கிளி/இராமநாதபுரம், ம.வி, வட்டக்கச்சி.
02. சி.முகுந்தன், கிளி/மு.ம.வி, முரசுமோட்டை.
03. ஜெ.ஜெயூரன், மு/விசுவமடு.ம.வி. விசுவமடு.
04. இ.தமிழினி, கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.
05. சு.பால்ராஜ், ஆண்டு -05 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
06. ச.வர்ணகுமார், யா/சித்திவித்தியாலயம், பருத்தித்துறை.

01. வகுப்பறையில் காணப்படும் பொருட்கள்?

01) ......................................

02) ......................................

03) ......................................

சொற்சிலம்பம் -19.
ஈழநாதம்.
யாழ் சாலை.
கிளிநொச்சி.

02. தாமரைப்பூவின் நிறங்கள்?

01) ......................................

02) ......................................

பெயர் :- ......................................

முகவரி :- ......................................

......................................



## தொடர் - 02

இந்த இடத்தில் ஓரிரு விஷயங்களைச் சொல்லிவிட்டுப் போவது நல்லது. உலகம் சுருங்கி, நாடுகளுக்கிடையிலான பயணங்கள் வலு சாதாரண சங்கதிகளாகிவிட்ட இக்காலத்தில் பயண இலக்கியம் எவ்வளவு தேவை? அது அவசியமா? என்றொரு கேள்வி. எம்மவரில் எத்தனையோ பேருக்கு அது மிகச் சாதாரணமாகி விட்ட போதிலும் அந்த அனுபவங்கள் கிட்டியிராத பலருங்கூட இருக்கவே செய்கின்றார்கள். தவிர, எந்தப் பயணக் கதையும்- அது தினசரி நாங்கள் வேலைக்குப் போய் வருகிற நாலு மைல் ஆனாலுஞ் சரி- சுவாரஸ்யமானது" தான். பாதை ஒன்றாயிருந்தாலும், பார்க்கிறவர்களும், பார்க்கப்படு கிறவர்களும்- பார்க்கப்படுபவைகளும் வேறு, அதனால் கிடைக்கிற அனு பவங்களும் உணர்வுகளும் கூட வேறு எல்லோரும் வாழ்கிற வாழ்க்கையை எழுதுகிறவன் தான் எழுதுகிறான். அதுபோலத்தான் இதுவும்.

இன்னுமொன்று-இப்போது எங்கள் ஆட்கள் போயிருக்கிற, பேர்ய் வருகிற புலம் பெயர் நாடுகளுக்கான பயணங்களிலிருந்து கொஞ்சம் வேறுபட்ட பயணம் இது ஆபிரிகாவுக்கு-குறிப்பாக மேற்காபிரிகாவுக்கு-அதிலும் குறிப்பாக நைஜீரியாவுக்கு, பதினைந்திருபது ஆண்டுகளின் முன் எம்மவர் பலர் போய் ஆசிரியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் பணியாற்றினார்கள். இப்போது அதுவுமில்லை அத்துடன் அவர்களில் எவரும் தம் வாழ்வு அனுபவங்களை எழுதியதாயுமில்லை. புலம்பெயர்ந்த எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் சில கதைகள் இதற்கு விதிவிலக்கு. இங்கே பதியப்படப் போகிற மிகச் சில விஷயங்கள் கிழக்காபிரிக்கா பற்றியவை கென்யப் பயணம் உண்மையில் ஒரு வாரகால ஸஃபாரி! விலங்குகளைத் தேடி அலைந்த வேளையில் மனிதர்களையும் அவர்கள் வாழ்வுகளையும் பற்றிக் கூட கொஞ்சம் அறிய முடிந்தது.

முன்னர் பலரும் அறிந்திராத் விஷயங்கள் பற்றி எழுதுவது பயனுள்ளதுதான் ஏறத்தாழப் பதினைந்தாண்டுகளின் முன் எனது சோவியத்-ரஷ்ய பயண அனுபவங்கள் வெளியான வேளையில் கிடைத்த வரவேற்புங்கூட இப்போது இந்த எழுதும் எண்ணத்திற்கு வலுச் சேர்க்கின்றன.

என் பாதைகள் புதியனவையாகவும்,பயணங்கள் வித்தியாசமானவையாகவும் இருக்க நேர்ந்து விடுகிறது. அதை நானும் விரும்புகிறேன். முன்னர் ஓரிரு தடவைகள் புலம் பெயர்ந்த நண்பர் உறவினரிடமிருந்து அழைப்பு வந்த போது, அதை ஏற்கும் மனமிருக்கவில்லை. அமேரிக்காவிலிருக்கிற அளவெட்டி நண்பரின் அழைப்பில் அங்கு போகிறோம் என்றால் அது அளவெட்டிக்கேயொழிய அமெரிக்காவுக்கல்ல என்றொரு- முட்டாள்தனமான?- மனப்பதிவு என்னுள் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்: அமேரிக்காவுக்குப் போவதானால், அமெரிக்கன் அழைத்து அங்கு போகவேண்டும்! இப்போது கென்யாக்காரர் அழைத்திருந்தார்கள்.

என்றோ ஒரு தடவை ஆபிரிக்காவுக்குப் போய் வருவேனென்பதில் எப்படியோ எனக்கு நம்பிக்கை இருந்து வந்தது. அநேகமாக அது ஒரு எழுத்தாளர் மாநாட்டுக்காக இருக்கலாமென ஒரு மங்கலான கற்பனை. ஆனால், அப்படியாயிருக்கவில்லை. இப்படித்தான் முன்பு சோவியத் பயணமும் ஆயிற்று இலக்கியப் பயணமாய் இருக்குமென்ற எதிர்பார்ப்பு, மொழிப்பயணமாய் முடிந்தது. கொழும்பில் மூன்றாண்டுகள்பயின்ற, யாழ்ப் பாணத்தில் நான்கு மாதங்கள் படிப்பித்த, ரஷ்யமொழி அறிவைச் செப்பனிட லுமும்பா பல்கலைக் கழகத்தில் ஒரு மொழிப் பயிற்சிக் கான பயணமாய் ஆயிற்று, அது இப்போதும் கிட்டத்தட்ட அப்படித்தான்.



சற்றும் எதிர்பாராத விதமாக, எதிர்பாராத வேகத்தில் இந்த கென்யப் பயணம் வாய்த்தது. ஆபிரிக்காவின் பாலான ஆர்வம், 50களின் பிற்பகுதியில் என் மாணவப் பருவத்திலிருந்தே தொடங்கியது தான். முதலில் ஈர்த்தது கொங்கோப் பிரச்சினை பெல்ஜியத்தின் காலனித்துவத் தலைகளை அறுத்துக் கொண்டு 58 இல் விடுதலையடைந்த கொங்கோவின் முதற் பிரதமராக அமர்ந்த மக்கள் தலைவர் பட்ரிஸ் லுமும்பாவும் அவருக்கெதிரான ஏகாதிபத்திய சதிகளும், அந்தச் சதிகளின் விளைவாய் லுமும்பா 61 இல் கொலையுண்டதும் அந்த நாட்களில் பரபரப்பான விஷயங்களாயிருந்தவை பின்னர் கொங்கோவின் இடத்தை எண்ணளவிலாவது கென்யா பெற்றது. ஏனெனில் ஜோமோ, கென்யாட்டா தலைமையிலான 'மாவ்-மாவ்' இயக்கத்தின் தொடர்ந்த போராட்டங்களும் பின்னர் கென்ய ஆபிரிக்க தேசிய யூனியனின் வளர்ச்சியுமாய் 1961 இல் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமும் 1963 இல் முழுமையான சுதந்திரமும் என்று கென்யா பெற்ற முன்னேற்றங்களின் பரபரப்பான வரலாறு தொடர்ந்தது. ஏறத்தாழ அந்தப் பரபரப்படங்கிய வேளையில் அறுபதுகளின் பிற்பகுதியில் நைஜீரியாவில் பயாஃப்ரா பிரச்சினை தலை தூக்கிற்று. நைஜீரியாவின் தென் கிழக்குப் பகுதிகளிலிருந்த 'இபோ' இனமக்கள், தமது சொந்த நாடாக 'பயாஃப்ரா' என்பதைச் சுதந்திரப் பிரகடனம் செய்தபோது உலகின் வல்லரசுகள் ஏறத்தாள எல்லாமே நைஜீரியாவுடன் நின்று பயாஃப்ராவை நசுக்கிஅழித்த சோக வரலாறு தொடர்ந்தது.அதன் பின் உகண்டா, தென்னாபிரிக்கா என்று ஆர்வத்தை ஈர்த்த வண்ணமே இருந்தது ஆபிரிக்கா.

இந்த ஆர்வங்களின் பக்க விளைவாய், ஆபிரிக்க இலக்கியங்களுடனான தேடலும் பரிச்சயங்களும் தொடரலாயின. பிரிட்டிஷ் கௌண்ஷிலின் கொழும்பு நூலகம் களம் அமைத்துத் தந்தது. சினுவ அச்சிபேயின் படைப்புக்கள் அநேகமாக எல்லாவற்றையுமே தேடிப்படித்து,அந்த விறுவிறுப்பில் அவரைப் பற்றிய விபரமான கட்டுரை ஒன்றினை 78 இல் 'மல்லிகையில் எழுதினேன். அந்தக் கட்டுரை பேராசிரியர் சிவத்தம்பி ஒருவருடைய கவனத்தை மட்டுந்தான் ஈர்த்ததாக எனக்குத் தெரிந்தது. அந்த் வேளையில் அச்சிபேயோ அல்லது ஆபிரிக்க இலக்கியங்களோ எம்மவரிடையே பெரிதாக கவனம் பெற்றிருக்காமை காரணமாக இருக்கலாம். அச்சிப்பே யுடனானஎன் அந்த பரிச்சயம் பின்னர் ஆபிரிக்கஇலக்கியங் களுடனான அபரிமிதமான 'ஆர்வத்திற்கு அடிகோலிற்று. சைப்ரியன் எக்வென்சி அமோஸ் டுட்டுவோலா, கப்ரியல் ஒக்காரா, என இத் தொடர்பு நீளலாயிற்று.

அப்போது-ஏறத்தாளக் கால் நூற்றாண்டுக்கு முன் படித்த எக்வென்ஸியின் சமாதானத்திற்குத் தப்பிப் பிழைத்தல் நாவலை இன்னொரு முறை படிக்கலாமென்று இன்னமுந்தான் தேடுகிறேன், கிடைப்பதாயில்லை இந்தக் கென்யப் பயணத்தின் கடைசி நாளன்று விமானமேறுவதற்கு முன் வாய்த்த இரண்டு மணி நேரத்தில் நைரோபியின் புத்தகக் கடைகள் பலவற்றிலும் புயல் வேகத்தில் (அயூப்பிற்கு நன்றி) தேடியுங் கூட அதைக் காணவே முடியவில்லை.

(தொடரும்)



# (கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

சரந்தன்



## உண்மைகளை மறுத்துரைக்க வேண்டிய தேவையின் பின்னணிகள் யாவை?

கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை தெற்கிலிருந்து பௌத்தபிக்குகள் யாழ்குடாநாட்டிற்கு வருகை தந்திருந்தனர். அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களே இவர்கள். பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்களைப் பார்வையிட குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் ஒன்பது பேர் புனர்வாழ்வு. புனரமைப்பு மற்றும் அகதிகள் மீள் குடியமர்வுகை அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவால் அழைக்கப்பட்டனர்.

இராணுவப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப் பட்ட இப்பத்திரிகையாளர்கள் புன்னாலைக்கட்டுவான் இராணுவ முன்னரங்க நிலையில் வைத்துப் புகைப்படக் கருவிகள் போன்ற சாதனங்கள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தினருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் இடம்பெற்றன. அதேநேரம் பலாலி விமான நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் இவர்கள் கலந்துகொள்ள இடமளிக்கப்படவில்லை. உடனடியாக வெளியேறுமாறு பத்திரிகையாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டனர். ஐ.பி.சி செய்தியாளர் தவச்செல்வம் இராணுவ உயர் அதிகாரி ஒருவரினால் கொலைப்பயமுறுத்தலுக்குள்ளானதாக அவரே பி.பி.சி தமிழோசைக்குத் தெரிவித்தார். ஒட்டுமொத்தமாகக் கூறினால் ஊடகவியலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதையினை மீறி மிக அநாகரிகமாக இராணுவத்தினர் நடந்துகொண்டனர்.

இவையெல்லாம் சம்பவம் நடந்த அடுத்த நாள் பத்திரிகையில் செய்திகளாக வெளிவந்திருந்தன. இவை எல்லாவற்றையும் ஒரேயடியாக மறைத்திருக்கிறார் ஒரு ஊடகவியலாளர் (?). இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்குச் செய்தி வழங்கும் இவர் தமது தலைமையிலேயே மேற்படி பத்திரிகையாளர்கள் சென்றதாகவும் புகைப் படக் கருவிகளை மட்டும் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மிக வினையமாகவும் அன்புடனும் பாசத்துடனும் இராணுவத்தினர் வேண்டிக் கொண்டனர் எனவும். வேறெந்தப் பிரச்சினைகளும் நடைபெறவில்லை என்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய செய்தியில் கூறினார். பத்திரிகையாளர்களுக்கு ஏற்பட்ட அவமதிப்புக்களை அவ்வாறு நடக்கவில்லை எனவும் மறுதலித்துள்ளார் அவர்.

அவ்வாறெனில். பத்திரிகைகளில் அடுத்த நாள் வந்த செய்திகளும் ஐ.பி.சி தவச்செல்வம் பி.பி.சிக்குக் கூறியவைகளும் பொய்கள் என ஆகுமா?

அதேசமயம் மகாநாயக்கர்களின் குடாநாட்டு வருகையும் அவர்களால் கடும் இராணுவ பாதுகாப்புடன் நயினாதீவிற்குக் கொண்டு செல்லப்பட்ட புத்தர் சிலை குறித்த நிகழ்வுகளும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என அவர் வர்ணித்தார். இந்து மதமும் புத்த மதமும் இணைகின்ற ஒரு மகத்தான சரித்திர சம்பவம் எனவும் அவர் கூறினார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த என்று எல்லா விடயங்களுக்கு முன்னாலும் அவர் அடிக்கடி குறிப்பிட்டார். சரித்திரம் பற்றியும். சரித்திரம் எவ்வாறெல்லாம் மாறுகின்றது என்பது குறித்தும் இவருக்கு எதுவும் தெரியாமலிருக்கலாம்.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த - புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னைய காலங்களிலும் இவர் பல செய்திகளை இலங்கை வானொலிக்கு அதிகாலை வேளைகளில் கூறும் போது. இராணுவ கட்டுப்பாட்டில் யாழ்ப்பாண மக்கள் மிக மகிழ்ச்சியாக இருப்பதாகவே இவரது வர்ணிப்புகள் அமைவதுண்டு. குடா நாட்டிலுள்ள கோவில் திருவிழாக் காலங்களில் அத்திருவிழாக்களைப் பற்றி இவர் விபரிப்பார். யாழ்ப்பாண வரலாற்றிலேயேமுதற் தடவையாக இவ்வளவு தொகையான பக்தர்கள் கலந்து கொண்டனர் என வர்ணிப்பார். குடாநாட்டில் கோவில்கள் குண்டுபோட்டு அழிக்கப்பட்டமையினையும். அரச படைகளின் ஆக் கிரமிப்பில் மக்கள் அடைந்த துன்பங்களையும். கலாசார சீரழிவுகளையும் வெளிப்படையாகச் சொல்லத் துணிவில்லாவிட்டாலும் பரவாயில்லை. உண்மைகளை மறுத்துரைக்க வேண்டிய அவசியம் இவர் போன்ற ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏன் ஏற்பட்டுள்ளது? இவற்றிற்கெல்லாம் பின்னணி என்ன?

இராணுவத்தின் வெளிப்படையான அம்சங்களையும். உள்ளார்ந்த அதன் நோக்கங்களையும் இருபது வருட போர் அனுபவத்தினூடாகச் சாதாரண பொது மக்களே தெரிந்து வைத்திருக்கின்ற போது. இவ்வூடகவியலாளர்களுக்கு அவை தெரியாமல் போனதா?

- நிதர்சன் -

நீரின் ஆழத்தை நிதானிக்க, இரண்டு பாதங்களையும் பயன்படுத்துபவன் முட்டாளே. - ஆப்ரிக்கப் பழமொழி




## தலை நிமிர்ந்து வாழ்ந்திடுவோம்

தன்மானம் உள்ள
என் தோழியே
எங்கே உன் கால்கள்
எங்கே உன் கரங்கள்
கவிழ்ந்து கிடக்கிறது
விரைந்து வா
நாளை எம் மண்ணில்
நானும் நீயும்
தலை நிமிர்ந்து
வாழ்ந்திடுவோம்.

கனிமதி

## அன்பான விளக்கே

ஏன் இவ்வளவு பிரகாசமாய்
இன்று ஒளிர்கிறாய்
உனக்கு எண்ணெய்யிட்டவர் யார்
எம் காவல் தெய்வங்களா
ஒளிர் இன்னும் பிரகாசமாய் ஒளிர்
எம் ஈழமக்கள் அனைவரும்
இருள்களைந்து இன்புற்று வாழ
பெருமையுடன் சுடர் விட்டு ஒளிர்.

கிறிஸ்ரின் ஜெனிபர்

## காதல் நீராகும் கனவுகள்

கனடாவில் இருந்து
வருகின்ற வழியெல்லாம்
அவன் கண்களில் ஆயிரம்
ஏக்கம்
தென்னைகளும்
பனைகளும் கொண்ட
தோப்புகளை
எப்படி பங்கிட்டு
தங்கைகளுக்கு கொடுப்பது
எப்படி எண்டாலும்
கட்டிய கல்வீட்டை
கடசி பெண் பிள்ளைக்கு
கொடுப்பதுதான் முறை
சுற்று மதில் உள்ள
பழய வீட்டை
மூத்தவளுக்கு
கொடுக்கலாம்
சம்மதிப்பாளோ
வயலை கடசிவரை
வைத்திருப்பம்
என்வருங்காலம்
என்னவாவது
என்ன இது
என் நினைவுகள்
அத்தனையும் மாற்றி
இவர்கள்
எங்கட காணியில்
எங்கள் மொழியல்லாத
மொழியில்
பேசி சிரித்து
ஐயோ...!
அதென்ன
அபாயம்
மிதிவெடி என்ற
அறிவிப்புப் பலகை

## சோதனைகள்

கையிலே பணம் இல்லை
கவனிப்பார் யாரும் இல்லை
ஏழையாய் ஆனபின்பும்
எட்டிப்பாப்பார் யாருமில்லை
சொந்தங்கள் என்று போனால்
சோதிக்க வைக்கிறார்கள்
பந்தங்கள் என்று போனால்
பரிந்துரைப்பார் யாருமில்லை.

நி.ரோஜா

## மௌனத உனை

எங்கள் மௌனத்தையே
மேடையாக்கி
மிதித்து மிதித்துப்
பழகிப்போனது
இந்தப் பாதங்களுக்கு
திருந்தாத இந்த
தேசப்பிறவிகளின்
வருந்தாத குணமிது
மௌனமே!
முள்ளாய் நீ
முளைக்காத வரை
பொறுமையே!
பூகம்பமாய் நீ
கிழம்பாதவரை
இந்தப்பாதங்கள்
ஒவ்வொன்றும் உன்னை
மிதிக்கத்தான் செய்யும்.

வாசுகி

# சொல்ல வேண்டி வந்த பொய்கள்

அன்று காலை இனிமையாகவே புலர்ந்தது. நானும் வளமை போல காலைக்கடன் முடித்துவிட்டு பாடசாலைக்கு போக ஆரம்பித்தேன். எனக்கென்று தூறியது போல சின்ன மழை தூறியது. நானும் இதுதான் சாட்டு என்று பாடசாலைக்கு போகவில்லை. ஒன்பது மணிபோல கோடைகால வெய்யில் போல கதிரவன் ஒளிக்கற்றைகளை பூமிமேல் பரப்பிக் கொண்டிருந்தான். 'போளை'களை எண்ணி காச்சட்டை பையில் போட்டுக் கொண்டு விளையாடுவதற்காக மாமரத்தடி சந்திக்குப் போனேன். என்ர நண்பர்கள் ரெண்டு பேர் விளையாடிக் கொண்டிருந்தனர். எனக்கு பெரிய சந்தோசம் நானும் சேர்ந்து விளையாடினேன். மழைபெய்து சாடயாய் இறுகிய மண் விளையாட்டுக்கு இதமாக இருந்தது. ரெண்டு பேற்ற போளையும் என்ர கையுக்கு வந்து கொண்டிருந்தது. திடீரெண்டு துப்பாக்கி வேட்டுச்சத்தம் என் காதை கிழித்தது. எனது அம்மா கூறியது போல நான் மரத்தடியில் படுத்து விட்டேன். ஓர் இயக்க அண்ணா இறுகிய புழுதியை கிழறியவாறு வேகமாக ஓடிப் போனார். சற்றுத் தூரம் சென்றதும் திரும்ப நடந்து வந்து புல் நிறைந்த அந்த ஒற்றையடி பாதையூடாக ஓடி மறைந்து விட்டார். நானும் மரத்தை விட்டு வெளியே வர இந்தியனாமி ஓடி வந்துகொண்டிருந்தான். நான் பயத்தினால் விழி பிதுங்க நின்றேன். "அடோ இதால புலி வந்ததா"? என்று தடித்த குரலில் ஒருவன் கேட்டான். நானும் என்மனதை சுதாகரித்துக்கொண்டு இதாலதான் ஓடினவன் என்று கூறி கால் தடயத்தையும் காட்டினேன். வந்த இராணுவமும் அந்தத் திசையிலே தேடிச்சென் று மணலைக் கிண்டி ஓடிப் பின் பைய நடந்து வந்த தந்திரமும் அதைக் கண்டு காட்டிக் கொடுத்த தந்திரமும் அன்று இருவரையும் காப்பாற்றியது.

சீ.வீதுரன்

# இப்படிக் கொடுங்கள் திருப்பி

மாசிலாமணிக்கு தனக்குள் பெரிய நினைப்பு எவனும் என்னைவிட ஜோக்கடிக்க மாட்டான். நான்தான் பீடிகைபோட்டு மற்றவர்களை சிரிக்கவைப்பேன் என்ற இறுமாப்பு.

மதவடியில் நண்பர்களுடன் சிரித்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தவனை ஒரு வயதானவர் "தம்பி...மணி என்ன சொல்லுது மோனே..."

என்று அந்த வயதானவர் நேரத்தை கேட்க,

"ஐயா மணி சரியாகத்தான் இருக்கான் மாசிலா தான் இன்னும் வரவில்லை"

என தன்னையே ஒப்புமை வைத்து பதில் சொல்ல அங்கு அவனது நண்பர்கள் மாசிலாமணிக்கு கை குலுக்கி "அடமச்சான் உன்னோட ஜோக் அடிக்க இனி ஒருவன் பிறந்துதாண்டா வரனும்" என ஆரவாரித்தனர். வயதானவர் வெக்கி "இந்தக் காலத்துப் பசங்களோட ஒன்றும் கதைக்க முடியாது" என கூறிக் கொண்டு அப்பால் நகர்ந்தார்.

இதை தூரத்தில் நின்று அவதானித்த சேகர், 'இவன் மாசிலாமணியை தலை குனியவைக்கனும். மற்றவர்கள் இவனால் எவ்வளவு வெக்கிப்போகிறார்கள் இம்...இருக்கட்டும்...இருக்கட்டும் என்றைக்காவது ஒரு நாள் இவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்' என மனதுக்குள் திட்டம் போட்டான். இதைப் பற்றி சேகர் தன் நண்பர்களிடம் கூறி வைத்தான்.

பஸ்சில் சேகரின் நண்பர்களும் வேறு சிலரும் சீற்றில் அமர்ந்திருந்தனர். சிலர் இருக்கை இல்லாததால் நின்றனர். பஸ் தன் பயணத்தைத் தொடங்கியது சிறிது தூரம் சென்றதும் பஸ் தரிப்பு நிலையத்தில் நின்றவர்களையும் ஏற்றி புறப்பட்டது. எறியவர்களில் மாசிலாமணியும் அவனது நண்பர்களும் ஏறினார்கள். அவர்களுக்கு சீற் கிடைக்கவில்லை மாசிலா மணியின் கண்கள் ஒருமுறை இருக்கைகளை ஒவ்வொன்றாக நேட்டமிட்டது. சேகரின் இருக்கையில் கொஞ்ச இடம் காலியாக இருந்தது. மாசிலாமணியோ நண்பர்களை இடித்துக் கொண்டு அவ்விடம் போனான்.

"அண்ணன் எஸ்....கியூஸ்.....மி இடம் கொஞ்சம் தருவீர்களா?" என்றான்.

உடனே "நோ.....நோ... எற்கெனவே ஒரு கேளுக்கு இடம் கொடுத்து விட்டேன்" என்று பதிலளிக்க, அங்கு நின்றவர்கள் இருந்தவர்கள் எல்லோரும் கொல் என சிரித்து விட்டார்கள்.

அண்ண மனசில நான் கேட்கல இருக்கத்தான் கேட்டேன்" என்றான் மாசிலாமணி.

"சேர்! அதைத்தான் நானும் சொன்னேன்" என்று அவனை மடக்கினான் சேகர் சனம் மீண்டும் ஒருமுறை "கொல்" என்று சிரித்தது. மாசிலாமணிக்கு பெரிய அவமானமாக போய்விட்டது.

-சுகந்தினி-

## கவிதை

கற்பனைகளின் ஆக்கிரமிப்பால்
கவிஞனிடம் கருவாகி
நிறை மாதம் ஆனவுடன்
பேனாவால் பிரசவித்து
தாள்களிலே தவழுபவன்

## நிலவு

அண்ட வெளி தனில் பவணிவந்து
அழகாக ஒளியை தந்து
அகிலத்தை மயக்கிக் கொண்டே
வளர்ந்தே தேயும் வசீகரப் பெண் இவள்.

வ.விஜயரூபன்

## முகில்

கடல் நீர் மீதிருந்து
கருவாகி உருவெடுத்து
தன்னை மறந்து விண்ணில் பறந்து
தரை மீது காதல் கொண்டு
தன்னை கரைத்து தானம் செய்பவள்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 54

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 06 | |
| | 09 | | | | | |
| 15 | | | | | | 21 |
| | | 24 | | | | |
| | 50 | | | | | |
| | | | 39 | | | |
| | | | 46 | | | |

பெயர்:-.................................
முகவரி:-...............................
.............................................
.............................................

### இடமிருந்து வலம்

01. தமிழ் மூதாட்டி.
06. கற்பகத்தரு.
09. நட்சத்திரங்களில் ஒன்று.
15. குரு.
24. 40 நாட்கள்.
30. மன்னன்.
39. மகன் (தலைகீழாக உள்ளது).
46. கோயில்.

### மேலிருந்து கீழ்

15. ஒழுக்கம்.
21. உடன்பாடு.
24. சாவு.
30. மாலை.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.52 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சூர்ப்பனகை.
10. அபாண்டம்.
15. நாணயம்.
20. மதி.
23. வம்சம்.
40. பாகம்.
43. ஆதி.

**மேலிருந்து கீழ்**

09. ஆணவம்.
14. தினம்.
15. நாதம்.
18. சத்தியம்.
26. அபாயம்.
31. மாதா.
34. கனல்

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.54
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.52 இன் பரிசுக்குரியவர்
கா. டக்சனா, இல.42.
உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் ஆலய வீதி,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி
இல.52 இன்,
பாராட்டுக்குரியவர்கள்.

01. கே. அரசேஸ்வரன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
02. சி. சங்கீதா+சம்பூரணி, அரசடி வீதி, வட்டுக்கோட்டை.
03. நா. சுந்தரலிங்கம், 8ம், வட்டாரம், புதுக்குடியிருப்பு.
04. செ. நிலாவரசி, காரைநகர், யாழ்ப்பாணம்.
05. டேடிலைக்ஷன்லோ, கணேசபுரம், கிளிநொச்சி.
06. அ.அபிசன், பேசாலை, மன்னார்.

அறிவு, துன்பத்தின் ஒற்றன், அறியாமல் இருப்பதில்தான் ஆபத்து இல்லை. - வில்லியம் டெவனான்ட்




எட்டாம் வகுப்பே படிக்கும் இவ் அமெரிக்கச் சிறுமி காண்பிக்கும் பொருள் செவ்வாயில் அண்மையில் தரையிறங்கிய ஸ்பிறிற் விண்ணாய்வு வண்டியின் மாதிரியையே. அமெரிக்காவின் லொஸ்ஏஞ்ஜலில் ஒரு பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சி ஒன்றிலே ஸ்பிறிற் வண்டியின் செயற்பாடு பற்றி விளக்கிக் காட்டுகிறாள்.




எங்கேயோ பார்த்ததுபோல இருக்கிறதல்லவா இது. அமெரிக்காவின் லிபேட்டி சிலைதான் இது. சற்று மாற்றத்துக்காக தன்னை அலங்கரிப்பதற்கு இறங்கி வந்துவிட்டதா? இல்லை. அமெரிக்காவின் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்க உயிர்வாழும் 'லிபேட்டி'யே இது.

இறந்து போன தன் தாய்க்காக அழும் குழந்தை யானைக்காக எவருமே கலங்கவேண்டாம். தாய்யானை இறக்கவும் இல்லை. குழந்தை யானை அழவுமில்லை. இது நைரோபில் அமைக்கப்பட்டுள்ள குட்டி யானைகளின் காப்பகம் ஒன்றிலே சேற்றில் விளையாடும் யானைக் குட்டிகளே இவை.








ஆழகு ஆடைக்கலை என்றுவிட்டு இனி ஏதோ எல்லாம் செய்வார்கள். ஹொங்ஹொங் ஆடை வடிவமைப்பாளரின் கை வண்ணத்தை உடலிலேந்தி இந்தமாது.




ஏதோ யப்பானிய நகைச் சுவைப்படங்களில் வரும் கதாநாயகன் ரோபோ இது என்று நினைத்து விடாதீர்கள் தற்போது யப்பானின் தீயணைப்பு படைப்பிரிவில் இணைக்கப்பட்ட ஒரு இயந்திர தீயணைக்கும் மனிதன் தான் இது. 11அடி உயரமும், தூரத்தே வைத்து இயக்கக் கூடிய வசதியும் கொண்டது இந்த கதாநாயகன்.








இது கடற்தேவதை. சைவர் பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் கடலில் அடிப் பாகத்தில் வசிக்கும் ஒரு பிராணி இது. தற்போது இத்தேவதை ஆய்வு கூடத்தின் மாதிரிக்கடலில்.

சிங்கத்தின் வாயில் அகப்பட்டுக்கதறுவது ஒரு மனித உயிர். ஆஜன்ரீனாவின் மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் கூண்டை விட்டுப் புறப்பட்ட சிங்கம் அகப்பட்டது ஒரு ஒளிப் பதிவுக்கருவியில். இதையுமா ஒளிபரப்புகிறார்கள்.

# ஒரு தமிழ் மாண்பாளனின் சரிவு





**கங்கை** நதி பெருங்கடலில் கலக்கத்தொடுக்கும் வெருகல் முகத்துவாரம்.

பெருங்கடல் சிறுகடலில் கலக்கத் தொடுக்கும் இலங்கைத் துறைமுகத்துவாரம்

பால்போல வெள்ளைமணல் கரையோரத்தை கடல் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தழுவிச் செல்ல, வள்ளங்கள் மீன்களைச் சுமந்தவண்ணம் கரைசேரும்.

சிறுகாடுகளின் பச்சையும் அக்காட்டு மரக்கிளைகளில் ஆங்காங்கே தூங்கிக்கொண்டிருக்கும் தூக்கணாங் குருவிக் கூடுகளும் இயற்கை எழில்கள்.

இத்தனை இயற்கை எழில்களின் மத்தியில் சோளன், கச்சான், மரவள்ளி ஆகிய சேனைப் பயிர்கள் கல்லடி, முட்டிச்சேனை, வாழைத்தோட்டம் ஆகிய குக் கிராமங்களைச் செழுமைப்படுத்தும்.

இப்பகுதிமக்கள் சீரற்ற பாதையால் நீண்டதூரப் பயணங்களை சைக்கிள், மாட்டுவண்டிகள், கால் நடையாகச் செல்லல் எனப் பயணிப்பார்கள். இச்சந்தர்ப்பங்களில் இரு முகத்துவாரங்களையும் வள்ளங்கள் துணையுடன் கடப்பார்கள்.

களைத்து வரும் மக்கள் நிழலில் இளைப்பாறவும் தண்ணீர்த் தாகம், பசி ஆகியன தீர்க்கவும் தென்னஞ்சோலைகள் தொண்டு செய்கின்றன.

சோளன் "மாப்" பிட்டும், கருவாட்டுக்கறியும், உடன் "மீன்" கறியும், வேட்டை இறச்சிக்கறியும் இக் கிராமத்து மக்களது விருந்தோம்பலில் சிறப்பான இடத்தினை வகிக்கின்றது.

இத்தகைய வளம்மிக்க ஊர், இவ் மக்களது உவகை உணர்வுக்கு உரமூட்டுவனவாக அமைந்ததனால் மக்கள் திளைத்து மகிழ்ந்து வாழ்ந்தார்கள்.

பன்னெடுங் காலமாக தழைத்தோங்கி ஆழமாக வேர் பாய்ச்சி நிற்கின்ற இவ் மக்களது தமிழ் உணர்வு நிறைந்த உறுதி மிக்க எழுச்சியால் மகிந்தபுர, சேருவில சிங்கள குடியேற்றங்களின் வீச்சு கட்டுப்படுத்தப்பட்டு இப் பூர்வீகப் பூமி பாதுகாக்கப்பட்டது.

இவ் மண்ணின் குக் கிராமமான கல்லடியில்தான் சின்னையா-வடிவேல் தன் அன்பு மனைவி மகிழம்மா, நான்கு பிள்ளைகளுடன் மகிழ்ச்சி மிக்க இல் வாழ்வில் ஒன்றிப் போயிருந்தார்.

அவரது நெற்றியின் நடுவில் எப்போதும் சிறிய வட்ட சந்தனப் பொட்டு முகத்தில் மலர்ச்சியைப் புலப்படுத்தும் நேர்த்தியான தூய வெள்ளையுடை அணிந்து கருணை சிந்தும் அவரது பார்வையும், அன்பும், அமைதியும் நிறைந்த அவரது வார்த்தைகள், நம்பிக்கையூட்டும். அவரது சமூகத் தொண்டு இவைகள் அனைத்தும் அவரை நல்ல பண்பாளராக, நல்ல மனிதராக ஆக்கி மக்கள் மனங்களில் மதிப்பிற்குரியவராக வாழ்ந்தார்.

முதிர்ச்சி மிக்க பக்குவமுடைய 48 வயதான அவரை லிங்கம் ஐயா என பன்பாக அனைவரும் அழைப்பார்கள்.

தமிழினத்தின் உயிர் உடமைகளைத் தொடர்ந்து அழித்து, உரிமைகளை மறுத்து, தமிழர் தேசிய இனமில்லையென மறுத்து வந்த சிங்கள இனவாத அரசியல் போக்குகளால் ஐயாவின் நெஞ்சில் சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான உணர்வு கிளர்ச்சி கொள்ளவேசெய்தது. இப்படி வாழ்ந்து வரும் காலத்தில் தான் 83 யூலையில் தமிழ் உணர்வு மிக்க இளைஞர்கள் வெளிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட வானொலி செய்தியால் அவரது கண்கள் கண்ணீரில் கிடந்து மிதந்தது.

தமிழினம் உயர்ந்தோங்க பல இன்னல்களை எதிர்கொண்டு தம்மை முழுமையாக அர்ப்பணித்து வரும் விடுதலைப்புலிப் போராளிகளைச் சந்தித்து, தன் உணர்வுகளைப் பகிர்ந்து தன்னாலான தொண்டை ஆற்றவேண்டும் என்கிற இதயத்துடிப்பு அவரிடம் மேலோங்கியது.

அவரின் வாழ்வு சுயநலத்தில் ஒரு சில பொதுநலம் என்கிற சுயநலக்கருத்து நிலையில் இல்லாது பொதுநலத் தொண்டினிலேயே அவரின் மனம் தோய்ந்திருந்தது. சங்க முகாமையாளராக இருந்து, கிராமோதைய அவைத் தலைவராகவும் செயலாற்றினார்.

அவரது தமிழினப் பற்றுதலும், போராளிகள் மீது ஆழ்ந்த விசுவாசமும் கொண்டுள்ள மனப்பாங்கும், தளபதி கணேசுக்கு இவர் மீது ஈர்ப்பு ஏற்பட பண்டிதர், டக்ளஸ் வழிகாட்டிகள் உதவியுடன் குண்டுக் கணேஸ், கஜேந்திரன், விஜித், குளியா, நந்தன் ஆகிய போராளிகளுடன் கணேஸ் 85ல் ஒருநாள் இரவு ஐயாவை சந்தித்து விடுதலைப் போருக்கான உதவிகள் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்துகொண்டார்.

ஐயாவிற்கு தனது நீண்ட நாளைய எதிர்பார்ப்பு, ஏக்கம் எல்லாவற்றுக்கும் இச் சந்திப்பின் ஊடாக விடை கிடைத்துவிட்டது போல் இருந்தது. அன்றைய சந்திப்பை நினைக்கும் போது எல்லாம் அவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத் த்லைவனாக, சமூக சேவையாளனாக இருந்த அவரது தொண்டு, விடுதலைப் போருக்கான உழைப்பில் ஈடுபடும் தமிழ் மாண்பாளனாக விரிந்து செல்லத் தொடங்கியது.

வெருகல் சுங்கான்குழி காட்டுப் பகுதியில் சஞ்சய், கஜேந்திரன், தீபன் ஆகிய போராளிகள் முகாம் நிறுவி சில புதிய போராளிகளுக்கு அடிப்படைப்பயிற்சி வழங்கினார்கள். அதற்குப் பின்புலமாக வீரப்பா,பூநகர் கந்தண்ணன் இவர்களுடன் ஐயாவும் இருந்தார் .

அக்காலங்களில் ஐயா தன் பிரியமான மனைவியின் ஒத்துழைப்போடு உணவு சமைத்து எடுத்து அதைச் சுமந்துகொண்டு வந்து போராளிகளிடம் ஒப்படைத்துவிட்டு மனநிறைவோடு வீடு செல்வார். அதற்கு அப்பாலான தேவைகளையும் கேட்டறிந்து. அவற்றையும் நிறைவேற்றும் உழைப்பில் தன்னை அர்ப்பணித்தார்.

ஆரம்ப காலங்களில் மாற்றுக்கருத்தையுடைய ஆயுதக்குழுக்கள் தமக்கானவோர் அரசியல் தளத்தை ஊரில் உருவாக்கத் தீவிரமாக முனைந்தார்கள். அத்தகைய சூழ்நிலையில் அத்தளத்தைப் பிளந்து விடுதலைப்புலிகள் வேரூன்றவும் கிளை பரப்பவும் பாடுபட்ட இளங்கோ, தளபதி கணேஸ் ஆகியோரது தடத்தினை ஐயா பின்பற்றி விடுதலைப்புலிப்போராளிகளுக்கான நல்லார்வ வரவேற்பை ஊர் மக்களிடம் பெறத்தக்கவகையில் தீவிரமாக இயங்கினார்.

கால ஓட்டத்தில் சிங்களப் படையினரின் நெருக்கீடுகள் ஏற்பட ஆரம்பித்ததும் ஊர் மக்கள் பட்ட துன்பங்கள் கணக்கிலடங்கா. அத் துன்பங்களைச் சுமந்தவராக ஐயா தன் குடும்பத்தோடு இடம்பெயர்ந்து வெருகல் பெரியசோலைக்காட்டுப் பகுதியினுள் குடில் அமைத்து வாழ்ந்து வருகையில் உணவு நெருக்கடி ஏற்பட நெல்லைக் கையால் குற்றி சோறு சமைத்து அரைவயிறு மாய்க் கிடந்து எழும்பிய நாட்கள் சில, அந்நாட்களில் போராளிகளும் ஐயா குடும்பத்தோடு கலந்தே வாழ்ந்தார்கள். அவரின் வாழ்வில் எவ்வளவு சிக்கல், சிடுக்கு இருந்தாலும் மனம் தளராதவராக, மனவுறுதியுள்ளவராக வாழ்ந்தார்.

இப்படியாக வாழ்ந்துவரும் காலங்களில் இன்ப துன்பங்களில் தானும் ஒருவனாக இருந்து வந்த அவரது மூத்த மகன் ரவீந்திரன் இயக்கத்தில் இணைந்து நிமலாக இயங்க ஆரம்பித்தார். இது நடந்து ஒரு சில மாதங்களின் பின்னர் அவரது இரண்டாவது மகன்-சச்சிதானந்தை ஐயா தன் சுய விருப்பத்தில் போராளியாக்கினார். அம்மகன் கண்ணனாகச் செயற்படத் தொடங்கினான்.

தமிழர்களுக்கு வழி காட்டும் நிரந்தரமான,பலமான சக்தியாக இருந்துவரும் விடுதலைப்புலிகள் தம் கழுத்தில் நஞ்சை மாலையாக அணிந்து தாய் மண்ணுக்காகச் சலியாது உழைப்பதைப் பற்றி, இரக்க மனப்பாங்குடன் தன் மனையாளுடன் உணர்வு பூர்வமாகப் பகிர்ந்து

**இ.கபிலன்**

கொள்வார். போராளிகளைத் தன் பிள்ளைகளைப் போலப் பாசமு டன் அரவணைக்கும் அவரது உளப்பாங்கு தூய்மையானது. போராளிகளான நேசன்,வேலாயுதம் ஆகியோரது தொடர்பு அப்போது ஐயாவிற்கு இருந்தது.

சிங்களப் படையினரின் இடர்பாடுகள் குறைந்த சூழ்நிலை ஏற்பட ஐயா தன் அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகளோடு கல்லடியிலுள்ள சொந்த வீட்டில் குடியமர்ந்தார். அவரது தீவிர இயக்கச் செயற்பாடுகள் சிங்களப் படையினருக்குத் தெரியவந்ததும் அவரது வீடு இலக்கு வைக்கப்பட்டு ஒரு திடீர் சுற்றி வளைப்பு சிங்களப் படையால் மேற்கொள்ளப்பட்டது. அதில் ஐயாவும்,அவரது குடும்பமும் உயிர் தப்பி மீண்டும் தலைமறைவு வாழ்க்கை. ஆனாலும், அவரது வீடுவாசல், சொத்துக்கள் என அனைத்தும் சிங்களப் படையினரால் தீக்கிரையாகியது.

முதலில் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களிலிருந்து எழ முன்பே மீண்டும் கடுமையான நெருக்குதலுக்குள்ளாகினார். அவரின் பொருளாதார அடித்தளம் மெல்ல மெல்லச் சிதைந்து சீர்குலைந்துபோனது. அதனை அவர் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. தன் மனதை மீளுறுதி செய்துகொண்டு தன் வழமையான போராட்டக் கடமையைச் செய்ய ஆரம்பித்தார்.

சில மாதங்கள் ஊரில் அதீத நிசப்தம் நிலவியது. இருப்பினும் மீண்டுமொரு போருக்கான அறிகுறிகளாக இந்தியப் படையின் ஆக்கிரமிப்பு இருந்தது. இதுவரையும் இருந்த சூழ்நிலை மாறி வெடித்தது யுத்தம். நெருக்கடி உச்சத்தில் இருந்த காலப் பகுதியாக இருந்தும் ஐயா போராளிகளுக்கான உதவிகள் செய்வதில் அயராமல் செயலாற்றினார். அவ்வேளை சேனாதி அப்பா, அருளையா, அப்பையா அண்ணன், ஜஸ்டின், கணேஷ் அண்ணன், வெள்ளை அண்ணன் கும்பத்தினர் ஆகியோரும் விடுதலைக்காகக் கடினமாக உழைத்தார்கள். இவர்களது தமிழ்த் தேசிய உணர்வு இந்தியப் படைக்குச் சவாலாகவே அமைந்தது. இந்தியப் படை இவர்களைத் தேடி ஊர் சந்து பொந்துகளையெல்லாம் அலசியது. ஒரு நாள் இரண்டு உலங்கு வானூர்திகள் மூலம் லிங்கம் ஐயாவினது வீடு திடீர் சுற்றிவளைப்பிற்குள்ளாகியது. ஆனாலும் தன் குடும்பத்தோடு ஐயா தப்பித் தலைமறைவு வாழ்க்கைக்குள் மீளவும் சென்றார். எது எப்படி இருந்த போதிலும் தான் ஒரு போதும் உயிருடன் பிடிபடமாட்டேன், தன் உயிரற்ற உடலையே இந்தியனால் எடுக்க முடியும் எனகிற உறுதி மிக்க கருத்துக்களைத் தன் மனைவியிடம் கூறுவார்.

இக்காலகட்டத்தில் கல்லடி நீலியம்மன் ஆலயத்துக்கு மிக அருகில் இந்தியப் படையினர் முகாம் அமைத்திருந்தனர். இச்சமயம் ஐயாவின் கல்லடி வீடு இந்தியப் படையினரால் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. அவரது குடும்பம் எதிர்கொண்ட நெருக்கடிகள்,ஆபத்துக்கள் ஒன்றல்ல,இரண்டல்ல. அவை கணக்கிலடங்கா.

அப்பகுதி மக்கள் சிங்களப் படையினரின் அட்டூழியங்களால் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்களை இழந்து, வாழ்விடங்கள் அழிக்கப்பட்ட நிலையில் உளநலப் பாதிப்புக்குள் வாழ்ந்தார்கள். இதற்கு அப்பால், பொருளாதாரத் தடை பல ஆண்டுகளாகத் தொடர்ந்ததால் அவ் மக்களது அடிப்படை வாழ்வில் போர் இடர்பாடுகள் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் மிக அதிகம்.

இடப்பெயர்வுகள், சமூகச் சிதைவுகள், சிறுவர்களது உளநலப் பாதிப்புக்கள் என இந்தியப் படை காலப்பகுதியிலும் போர் அனர்த்தங்கள் பரந்து விரிந்துசென்றது.

போரின் வடுக்கள் இன்னும் மாறாத சூழ்நிலையில் ஐயா தன் குடும்பத்தோடு வெருகல் முகத்துவாரத்திலுள்ள ஒதுக்குப்புறமான மணற் தரையான ஒரு இடத்தில் சிறு குடிசையில் வாழ்ந்தார். அவ்விடம் அப்போது பாதுகாப்பான இடமாகவும் இருந்தது. போராளிகளும் வந்து தங்கிச் செல்லக் கூடிய சூழலாகவும் இருந்ததனால் ஐயாவின் மனதிற்குப் பூரண திருப்தியையும் கொடுத்தது.

இங்கு வாழ்ந்துவரும் காலங்களில் இருள் சூழ்ந்ததும் கங்கையைக் கடந்து கதிரவெளிப் பக்க கங்கையோரத்தில்தான் இரவுப் படுக்கை. இரவில் நிம்மதியாகப் படுத்துறங்கியபின் காலை வீடு வருவது நாளாந்த நிகழ்வு.

தாக்குதலொன்றை மேற்கொள்வதற்கான வேவுக்குச் சென்று வந்த சங்கர், பேனாட், கண்ணதாசன், மணி ஆகிய போராளிகள் ஐயாவிடம் வந்து தங்கிச் செல்வார்கள். இச் சமயத்தில் மேலும் கபிலப்பா,ராமு இருவரும் வந்து சேர்ந்தார்கள். அனைவரும் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு இரவுப் படுக்கைக்காக ஐயா குடும்பத்தோடு கங்கையைக் கடந்தார்கள்.


மறுபுறம் இந்தியப் படையினர் இரகசியமாக இரவோடு இரவாக ஐயாவினது வீட்டு வளவைச் சுற்றியுள்ள சிறுகாட்டுப் பற்றைகளுக்குள் பதுங்கி நிலையெடுத்து மறுநாட் காலை தாக்குதலுக்காகக் காத்திருந்தார்கள்.

இரவுப் படுக்கை ஒழுங்குகளைச் செய்த பின் போராளிகள் தத்தமது படுக்கையில் படுத்துறங்க இரவுக்காவலுக்கான போராளி விழித்திருந்தார். அப்போராளியைப் படுத்துறங்கும்படி வேண்டுதல் செய்த ஐயா அன்றைய இராப் பொழுதினில் நித்திரை நேரத்திலும் விழித்திருந்து காவல் காத்தார்.

கடல் அலைகள் ஓயாது கண்விழித்துத் தாலாட்டிக் கரையை முத்தமிட்டு எழுப்பும் ஓசை ஒரு புறம். கங்கை நதியோரத்து மேட்டுப் பகுதியில் ஓங்கி நிற்கும் மதுர மரம். அவ் மரக்கிளைகள் மாலை நேரங்களில் பறவைகளின் சரணாலயமாக மாறி விடும். அதில் பறவைகள் இசைகள்

19 ஆம் பக்கம் பார்க்க

# நினைவுடனும் கனவுடனும் காலத்தின் ஒவ்வொரு அசைவுடனும் இருக்கும் அவர்கள்



பட்டத்து யானையையும்
வீர வாள்களையும் இழந்து
பத்து ஆண்டுகள் முற்றிற்று.
கொற்றவையின் குங்குமத்தை
கடலிற் கரைத்து தசாப்தமாயிற்று.
கரையெங்கும் பூபரவி
நம்பிக்கை விதைத்து
அலைமீதேறி வருவாரெம் குமாரர்களென
காத்திருந்தோம்.
திசையெங்கும் அளந்து வந்த காற்றை
சிறைபிடிக்க நின்றது இமயம்.
காற்றா கைவிலங்கிட ஒப்பும்?
ஆழிநடுவே தீயாயிற்று.
கரையிருந்த எம் காதுகளில்
கூர்வேல் சொருகியது
வங்கக் கடலலை.
சோகத்தைத் தாங்குதல் எளிது
துரோகத்தைத் தாங்குதல்எங்கனம்?
காலப்பேய் அகப்பட்டதனைத்தையும்
அள்ளி வாயுண்டு போகிறது.
எஞ்சுவது எமக்கு நினைவுகள் மட்டுமே.
இருக்கவேண்டியன இல்லையெனவும்
போகவேண்டியன கண்முண்னெனவும்
நெடுநாளாய்.
சித்திரபுத்திரனின் கணக்கெங்கோ பிசகிறது.
கிட்டு
குட்டிச்சிறி
கூடவந்த தோழர்கள்
பெயரினை மட்டும் அறிந்தவர் பெருகியும்
நேரினில் தெரிந்தவர் அருகியும்
பூத்து விட்டது புதிய தலைமுறையொன்று
இது நியதியெனினும்
காத்தவராயன் இன்றும் எம்மோடிருக்கிறானே
வாயினில் பாட்டாய்
வெடியரசன் வாழ்கிறானே எம்முடன்
காலினில் கூத்தாய்
ஆரியப் பூமாலைக்கு அழிவில்லை என்பதாய்
கோயில் வீதியில் குதிக்கிறாளே இன்றும்
காக்கைவன்னியன் கற்பனைப் படைப்பென
எழுதியவனேஒப்புக் கொடுத்த பின்னும்
உயிருடன் தானே உலவுறான் எம்முடன்.
எம் காலத்து அதிசையங்கள்மட்டும்
'எல்லாம்கற்பனை' என்றாகி
போவரோ எனும் அச்சமெழுகிறது
அடி நெஞ்சில்.
கிட்டு
ஆற்றலால் நிமிர்ந்த உயரமென்றானான்
மலை போல.
குட்டிச்சிறி
நம்பிக்கை சுமந்துவிரிந்தான்
கடல் போல.
மற்றத்தோழர்களென்ன குறைவா?
பற்றியெரிவோம் எல்லோரும் எனும் கட்டளைக்கு
பணிந்த ஒன்றுக்காகவே
எத்தனை வீரர்கள் அவர்கள்
வஞ்சனை செய்தது வல்லாதிக்கம் மட்டுமா?
நெஞ்சிலிவரின் நினைவகற்று வோமெனில்
நாமும் தான்.
கிட்டு.
தலைவனை நெஞ்சிற் பொத்தியவன் மட்டுமல்ல....
நரம்போடும் குருதிக்கலங்கள்
ஒவ்வொன்றினுள்ளும்
கலந்து வைத்தவன்.
விடுதலைக்காக தலைவனை நேசித்து
பின்னர்
தலைவனுக்காக விடுதலையைப் பூசித்தவன்.
தோளிற் கைபோட்டால்
தோழமையின் ஆழம் தெரியும்
அக்கணங்களில்.
சிரசேறிய செருக்குடன் தான்
பகைவரெம் வாசல் வந்தனர்.
கிட்டு வழிமறித்த பின்னரே
ஆணவம் தவறென அறிந்தனர்.
வீரத்துக்குச் சான்றிருந்தது முன்னரும்
எம் கண்ணெதிரே நின்றதும்
கையெடுத்து மகிழ்ந்ததும்
கிட்டு என்ற வடிவுதானே.
கோபம் ஒரு குற்றமல்ல
உண்மை மனிதரின் உயிர்.
எனக்கு கோபமே வருவதில்லையென
எங்கேயும் ஒரு குரல் கேட்டால்
அவன் ஞானி.
அல்லது கசபோக்கிலி.
கிட்டு உண்மைமனிதனாகவே ஒளிர்ந்தான்
இறக்கும் இறுதி நொடிவரை.
குட்டிச்சிறியும்
ஒன்பது தோழரும் அவ்வாறே
மானுடவாழ்வு சாவுடன் முற்றுமெனின்
அது வாழ்வல்ல.
நெடுநாள்நினைவாய் நிலைக்கனும்.
கிட்டு எம் நினைவுடன்
கிட்டு எம் கனவுடன்
கிட்டு எம் காலத்தின் ஒவ்வொரு அசைவுடன்
இணைந்திருந்து போனான்.
இனியும்இருப்பான் எம்முடன்.
இருப்பார்கள் இனியும் அவர்கள் எம்முடன்.
ஊழிக்கடைவரை.

- புதுவை இரத்தினதுரை








## இலட்சியம்

இலட்சியத்தை அடிக்கடி மாற்றக் கூடாது. மாற்றினால் பிரகாசிப்பது வலு கடினம்.

ஆனால் அவசியம் என்றால் இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறைகளை - பாதைகளை மாற்றிக்கொள்ளலாம்.

- நெப்போலியன்.

எமது போராட்டத்திற்கான இலட்சியம் மாறாது. வடிவம் மாறலாம்

- தேசியத்தலைவர்.

## செல்வந்தனாக

ஒரு ரூபாயை இரண்டாக மாற்ற கடுமையாகப் போராட வேண்டும்.
10 ரூபாயை 20 ரூபாயாக மாற்ற கடுமையாக உழைக்கவேண்டும்.
1000 ரூபாயை 2000ரூபாயாக மாற்ற அதிக முயற்சியும் உழைப்பும் தேவை.
10000 ரூபாயை 20000 மாக மாற்ற இன்னமும் அதிக பிரயாசைப்பட வேண்டும்.
ஒரு லட்சத்தை இரண்டு இலட்சமாக மாற்ற கவனமான திட்டமிடலுடன் கூடிய முயற்சி அவசியம்.
10 இலட்சத்தை 20 இலட்சமாக்க எதுவுமே செய்யவேண்டாம் அது தானாகவே அப்படி ஆகிவிடும்.

- இது பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவம்.

## முறையும் முடிவும்

முறை சரியாக இருந்தால்
முடிவும் சரியாகவே இருக்கும்.
நம்பிக்கை நார் மட்டும் கையில் இருந்தால்.
நம்பிக்கையில் உதிர்ந்த பூக்களும்
ஒவ்வொன்றாக வந்து ஒட்டிக் கொள்ளும்
கழுத்து மாலையாகவும்
தன்னைத்தானே மாற்றிக் கொள்ளும்

- மு.மேத்தா

## உங்களுக்காக

பொய்யைத் துரத்திக் கொண்டு ஓடாதே
நீ துரத்துவதை விட்டு விட்டால்
அது தானாகவே செத்துவிடும்.

- எமர்சன்.

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தைகள் மீதுதான் பெரும்பாலான ராஜ்யியங்கள் சாய்ந்தழிந்தன.

- மீமாண்ட்.

எந்த மனிதனும் தவறு செய்யக்கூடும் - ஆனால் முட்டாளைத்தவிர வேறு எவரும் அதைத் தொடர்ந்து செய்யமாட்டார்கள்.

- ஸிஸரோ.

## ஞானம் பிறந்த வேளை

என் தந்தை இறந்தசமயம் எனக்கு ஞானம் பிறந்த வேளையாயிற்று.

அப்போது உறவினர்களும் வெளியார்களும் காட்டியபோலி அனுதாபம், சிந்திய போலிக் கண்ணீர், வெளிப்படுத்திய போலிச் சோகம், போலிச் சடங்குகளின் ஆர்ப்பாட்டம் என்மனதில் கசப்பை ஏற்படுத்தின...

நீரில் கண் மூழ்கி
நினைப்பொழிவர் சுற்றத்தார்
தலையில் கைசேர்த்து,
கதறியழும் தாயத்தார்
உலைவைத்து இலைபோட்டு
உண்டவுடன் மறந்திடுவார்

- எழில் முதல்வன்

## பணமொழிகள் சில...

தங்கப் பாத்திரத்தில் யார்தான் பிச்சையிட மறுப்பார்.

- தாய்லாந்து பழமொழி

பணமிருந்தால் உங்களை உங்களுக்குத் தெரியாது பணமில்லாவிட்டால் உங்களை யாருக்குமே தெரியாது.

பணம் எவரையும் முட்டாளாக்கியதில்லை முட்டாள்களை அது அம்பலப்படுத்தியதோடு சரி...

- பிராங்க ஹப்பட்

பணம் பேசும் போது உண்மை வாயடங்கிப் போகும்

பொறுக்கி

உண்மையை விலைக்கு வாங்கு: அதை விற்காதே. - ஸாலமன் மன்னன் (வில்லியம்)

## வரட்சியால் பயிர் அழிவு

வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் பருவமழையை நம்பி மேட்டு நிலப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பயிர்கள்வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஓரிரு வாரங்களில் மழை பெய்யாவிட்டால் பயிர்களைக் கைவிட வேண்டிய நிலை வருமென விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

இதேபோல் குடாநாட்டில் பருவமழை வீழ்ச்சி குறைந்திருப்பதால் நெற்செய்கையாளருக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என யாழ்.விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இம்முறை 8,900 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. மார்கழி மாதத்தில் மழை குறைவாகக் காணப்படுவதால் மேட்டு நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிந்துள்ளன. குறிப்பாக தீவுப்பகுதி,வலிகாமம்மேற்கு வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மேட்டுநிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல்லில் 20சதவீதம் அழிந்துவிட்டது. கடந்த காலங்களில் 3.4 மெற்றிக் தொன் விளைச்சல் ஏற்பட்டது. ஆனால் இம்முறை 2.5 மெற்றிக் தொன் நெல் வீழ்ச்சி காணலாம் என யாழ். செய்திக்குறிப்பொன்று கூறுகிறது.

இங்குள்ள விவசாயிகள் பயிர்க்காப்புறுதி செய்யாததால் நட்டஈடு பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர் எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிருச்செந்திநாதன்

**மரங்கள்** இயற்கை எமக்கு அளித்த வரங்களில் ஒன்று. அதன் காரணமாகவே அதன் பொருண்மிய பெறுமதி அளவில்லாதது.

உலகளாவிய ரீதியிலும் சரி எங்கள் மட்டத்திலும் சரி அதன் காரண்மாகவே மரங்களைப் பாதுகாக்க பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



எனினும் எமது அவசியதேவை கருதி நாங்கள் மரங்களை வெட்டுகின்றோம். எனினும்மரங்கள் வெட்டப்படுவதையாரும் ஊக்கப்படுத்துவதில்லை. மரங்களைப் பாவிக்கும் செயற்பாடுகளுக்குப் பதிலாக பல்வேறு மாற்றுப்பொருட்களை மாற்றீடுகளை பாவிக்கப் பழகிவருகின்றோம். அவ்வாறு பாவிக்கத் தூண்டப்பட்டு வருகின்றோம்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நாம் நடத்தி வரும் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் இறங்கிய ஆக்கிரமிப்பு அரசு அழித்த எமது வளங்களில் மரங்கள் முக்கியமானவை.

இவ்வாறான சூழ்நிலையில் அண்மைக்காலமாக அபிவிருத்திப் புனர் அமைப்பு நடவடிக்கைகளின் பின்விளைவாக மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக மிகச் சமீபத்தில் காணக்கூடிய காட்சியாக 'A9' பாதை யோரமாக பாரிய மரங்கள், பனைமரங்கள் வெட்டப்படுகின்றன.

மின்சார வசதி கருதி இவைசெய்யப்படுகின்றன. என்றாலும் மிக நீண்டகால மரங்கள் இவ்வாறு வெட்டப்படுவது கவலை தருவதாக பொது மக்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

மின்சாரத்துக்கான தொடர்புகளை தரைக்கீழான வழிகள் மூலம் செய்யக்கூடிய வழிகள் இப்போது உள்ளன. ஏனைய நாடுகள் பலவற்றில் இவ்வாறு செய்யப்படுகின்றன.

எனவே இவ்வாறான ஒரு மாற்று நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டால் பொருத்தமாக இருக்கும் எனவும் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## பனை வளம் காப்போம்

எங்கள் பொருண்மிய வளங்களில் பனை.தென்னை வளங்கள் மிகவும் முக்கியமானவை.கடந்த கால யுத்தத்தினால் ஏராளமான வளங்கள் அழிக்கப்பட்டது.

இவ்வளங்களை மீண்டும் உற்பத்தி செய்யும் நோக்கிலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை. தென்னை அபிவிருத்திப் பகுதியினர் முன்னின்று செயற்பட்டு வருகின்றார்கள். பனை கிராமப் புறங்களில் பொருளாதாரத்தில் பெரும்பங்கை வகிக்கின்றது. பிற பயிர்களைப் பயிரிட முடியாத நிலங்களில் கூட செழித்து வளரக்கூடிய தன்மையினைக் கொண்டது.

அத்துடன் குறைந்த செலவிலும். குறைந்த பராமரிப்புடனும் நிறைந்த வருமானத்தைத் தரக் கூடியதுமாகும். இது தானாகவே வளரும் தன்மையினைக் கொண்டது. ஆயினும் இதனைத் திட்டமிட்டு வளர்ப்பது நம்மவர்களின் கடமையாகும். திட்டமிட்டு வளர்ப்பதன் மூலமாக நில விரயத்தைத் தடுப்பதோடு. பனை மரத்தின் வளர்ச்சிக்குத் தேவையான இடத்தினை ஒதுக்கிக் கொடுப்பதன் மூலம் அதிலிருந்து பெறும் பயனை இரட்டிப்பாக்கிக்கொள்ளமுடியும்.

மிகமிகக் குறைந்த நே[illegible]ரயமே பனையின் வளர்ச்சியில் ம[illegible]ர் செலுத்தவேண்டி இருப்பதால் [illegible] போக்காகத் தானும் தமது நிலங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பனையினை நட்டு வளர்த்தல் வேண்டும். ப[illegible]ன மரத்தை வளர்ப்பதால் மிகுந்த பொரு[illegible]தாரப் பயன்பாட்டினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இப்பனை வளத்திலிருந்து நாம் எமக்குத் தேவையான உபஉணவுப் பொருட்களாக நுங்கு. பதனீர். கள்ளு. பனம்பழம். பனங்கிழங்கு. ஒடியல். புழுக்கொடியல் என்று மக்களின் உணவில் ஒரு பகுதியை நிறைவு செய்யக்கூடியது. பனையில் வெல்லமாகவும். கல்லக்காரமாகவும். பனஞ்சீனியாகவும் மற்றும் பல உற்பத்திப் பொருட்களாகவும் தயாரிக்கப்பயன்படுகின்றது.

ஒடியல் மாவானது ஒடியல் பிட்டாகவும். ஒடியற் கூழாகவும். ஊட்டச்சத்துமிக்க ஆகாரமாய் விளங்குகின்றது. குழந்தைகள் முதல் முதியோர் வரை வாயூறவைக்கின்ற ஓர் நல்லுணவாகும்.

இவைதவிர கிராமப்புற மக்களின் வேலை இல்லாப் பிரச்சினையைப் போக்குவதற்கும் ஒரு மூலமாக விளங்குகின்றது. பல கைத்தொழில்கள் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றது. ஏற்றுமதிப்பொருட்களுக்கான மூலப்பொருட்களைத்தந்து நாட்டின் தேசிய வருமானத்திலும் ஒரு பகுதியைப் பங்கெடுத்துக்கொள்கின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை. தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் கடந்த ஆண்டு தமிழீழத்தின் பல பகுதிகளில் பனை நடுகைத் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன்குளம். ஊற்று[illegible]லம். கோணாவில் ஆகிய பிரதேசங்[illegible]ில் 17100 விதைகளும். பாரதிபுரம் கிராமத்தில் 5500 விதைகளும். வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 8000 விதைகளும். கண்டாவளைப் பிரதேசத்தில் கொழுந்துப்புலவு கிராமத்தில் 10000 விதைகளும். பரந்தன் பிரதேசத்தில் உமையாள்புரம் கிராமத்தில் 4500 விதைகளும். பளைப் பிரதேசத்தில் தம்பகாமம் கிராமத்தில் 20000 விதைகளும் நடுகை செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களின் வரம்புகளில் கிழக்கு மேற்காக நடுகை செய்யப்படுமாயின் வயல் நிலங்களுக்கோ. வரம்புகளுக்கோ எந்த விதமான பாதிப்பும் இல்லை. எனவே இப்பனை வளத்தினைக் காப்போம்.

- தே.நிதி


கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனை
முறைசாராக்கல்விப்பிரிவு

**கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிநெறி 38A**

மேற்படி முறைசாராக்கல்விப்பாடநெறி இந்த வருடமும் கிளிநொச்சி மத்தியகல்லூரியில் 01-02-2004 முதல் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதால் பயிற்சிபெற விரும்புவோர் 24-01-2004க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

நன்றி


அதிபர்,
கிளி/மத்தியகல்லூரி,
கிளிநொச்சி.

(சி-9034)

தமது வாடிக்கையாளர்களுக்கு
5-9 காகிதாதிகளின்
பொங்கல்வாழ்த்துக்கள்!
யாழ் சாலை, கிளிநொச்சி.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில்! SONY SIEDLES
வடபகுதிக்கான
ஏகவிநியோகஸ்தர்கள் உலகப்பிரசித்தி பெற்ற சோனி அய்வா தயாரிப்புகளை வழங்குகின்றது.

SONY AIWA



21" KV HA21P50



700W (மேலும் இதைவிட உங்களுக்குக்கிடைக்கக்கூடியது) MHC RV 8

MHC RV -2, RV-5, RV-8, & RV.-50
DVD PLAYER
Walkman, Radio Cassettes& Car Stereo, Micro Recorders.



T.V.C2121

மேலும் இதைவிட
உங்களுக்குக்கிடைக்கக்கூடியது
PG-21''
PG-14''

மேலும் இதைவிட
உங்களுக்குக்கிடைக்கக்கூடியது
TVC 14 22
HIFI
RV-15, RV-25, RV-75

சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சோனியை வீட்டிற்குக்கொண்டு செல்லவேண்டாம்"

SIEDLES
NO.1J,Stanley Road,
Jaffna.
T.P.021-222 6744

KING PARROT'S
Kodigamam Road,
Nelliyady.
T.P:0777-112122

PING PARROT'S(SIEDLES)
No-91, Stanly Road,
Jaffna.
T.P: 021-222 6744

(சி-8752)

SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒலிக்கத்தொடங்க இருள் நீங்கி வானம் ஒளிர ஆரம்பித்தது.

கங்கை நதியில் வழிந்தோடிய வெள்ளத்தில் நிமிர முனைந்துகொண்டிருக்கும் நாணற்புற்களின் அழகின் இனிய காலைப்பொழுதினில் ஐயா கங்கையில் நீராடிய பின் தன் சிறு குடிசை வளவிற்குச் செல்ல, அதன் பின்னால் மனைவியும், மகள் அங்கயற் கண்ணியும் சென்றார்கள். ஐயா கடவுள் தரிசனம் செய்ய, மனையாள் தேநீர் ஒழுங்கு செய்ய, போராளிகளும் வந்து மணல் முற்றத்தில் உட்கார்ந்தும் சாய்ந்தும் படுத்திருந்தார்கள்.

எவ்வளவு இனிமையான சுவாரஸ்யம் நிரம்பிய காலைச் சூழலில் போராளிகள் உதிரும் சிரிப்பலைகள், நகைச்சுவைக் கதைகள் மத்தியிலும் தேநீரைச் சுவைக்க, அவர்களது நா ஆவலுடன் எதிர்பார்த்து இருக்க, ஐயாவின் மனையாள் தேநீரைக் கொடுத்துவிட்டு மீளக் குடிசைக்குள் சென்றார்.

இந்தியப் படையினரின் வருகையைக் கண்ட ஐயா முற்றிலும் தளர்ந்துவிட்டாராகிலும் கடவுள் தரி சனம் செய்தபடியே இரு கைகளைக் கூப்பிய வண்ணம் போராளிகளைப் பார்த்து ஐயா ஓடுங்கள் பிள்ளைகளே எனச் சத்தமிட, இந்தியப் படையின் துப்பாக்கிகள் சரமாரியாகச் சுட ஆரம்பித்தது.

கண்ணதாசன் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த சங்கரின் வயிற்றை ரவை துளைத்ததும் அவர் படுகாயமுற்றார். கண்ணதாசன் நெஞ்சையும்,மணியின் உடற்பகுதி ஒன்றையும் ரவை பதம் பார்த்தது. பேனாட் வைத்திருந்த தேநீர் கண்ணாடிக் கோப்பை சிதறி நொருங்கியது. அனைத்துப் போராளிகளும் ஒருவருக்கொருவர் உதவியபடியே தப்பிப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று மறைந்துகொண்டார்கள்.

அவரது மன்னவியும், மகள் அங்கயற்கண்ணியும் வெவ்வேறு திசையில் சிதறி ஓடிப் பற்றைக்குள் ஒளிந்துகொண்டார்கள். ஆனால், ஐயாவால் மட்டும் தப்பமுடியவில்லை. அவரை இலக்கு வைத்த துப்பாக்கி ரவை உடலைத் துளைத்ததனால் இரத்தவெள்ளத்தில் அமைதியாகத் தன்சொந்த மண்ணில் சாய்ந்தார். அவர் சாவடையும் போது வயது 51.

தன் இல்லத் தலைவன் ஆருயிர்க்கணவனின் உயிரற்ற உடலைக் கண்ட மகிழம்மா கண்களைப் பொத்திக்கொண்டு மணலில் இருந்து விம்மினார். நேரம் செல்லச் செல்ல கண்ணீர் வற்றி, வார்த்தைகள் அற்றவர்களாக மனைவியும்,அவரது மகளும் திகைத்துப்போய் இருந்தார்கள். அவர்களை ஆற்றித் தேற்றுகிறதுக்கு ஊர்மக்களுக்கு,உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு, சக்தியும்,தைரியமும் இல்லை. அனைவரையும் துயரம் மேலிட்டது. ஐயாவினது சாவுச் செய்தி போராளிகளின் இதயத்திலே உள்ள ஏதோ ஒரு இரத்த நாளம் அறுந்துவிட்டது போல இருந்தது.

ஐயா தனக்காக மட்டும் வாழவில்லை. தமிழ் இனத்தின் நல்வாழ்விற்காக வாழ்ந்தே இத்தியாகத்தை அவர் செய்தார். இத்தகைய தியாகம் நிறைந்த உறுதி மிக்க தமிழ் தேசிய எழுச்சிமிக்க உணர்வுள்ள மாண்பாளர்களைத் தமிழ்த் தேசம் கௌரவிக்கின்றது.

தமிழினத்தின் வீரமும், மாண்பும் உலகமெல்லாம் கொடிகட்டிப் பறக்கும் சிறப்பினை நிலைநாட்டுவதற்காகத் தியாகத்தைச் செய்துள்ள மாவீரர்களது சரித்திரப் பதிவுகளில் ஐயாவின் மகன் மேஜர் நிமாலின் பெயரும் பதிவாகியுள்ளது. கணவனை இழந்த மகிழம்மாவுக்கு எங்கேயோ ஒரு சூனியப் பிரதேசத்தில் சிக்குண்டு தடுமாறுவது போல் உணர்வு ஏற்பட்டது. இல்வாழ்வு அப்படியே மண்ணுக்குள் மறைந்த மரவேர் ஆகியது. அம்மாவினது துயரங்கள் என்னவாக இருந்த போதும், போராளிகள் தம் பிரியமாகப் பெற்ற தாய் போலப் பாசமுடன் பழகும் தன்மையால் அவரது பாதங்கள் கணவனது தடத்தில் பதிந்தது.

அம்மா எண்ணற்ற ஊறுபாடுகளைச் சந்தித்தபடியே பழக்கப்பட்ட அஞ்சாமையுடன் தன் விடுதலைக்கான கடமையைத் தொடர்கின்றார். அவரது வீடு,சமயற் குடிசை,வீட்டு முற்றம் அனைத்திலும் மூத்த பொறுப்பாளர்கள்,போராளிகளது பாதங்கள் ஆழமாகப் பதிந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. மகிழம்மாவுக்கு எனத் தனிச் சரித்திரம் உண்டு.

கணவனின் இலட்சியச் சோதனைக்கெல்லாம் இருப்பிடமாக இருந்த அவர் கணவன் ஆற்றிய பணியில் ஆழ்ந்தபடியே போராளிகளின் நிழலாக இருந்து கல்லடி அம்மா என்கிற பெயரில் போராளிகளால் மதிப்புடன் அழைக்கப்பட்டு விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து வாழ்ந்து வருகின்றார்.

---

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதறகுரிய வழிவகைகளை ஆராய்வதற்கென ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளும் ஏனைய சில ஐரோப்பிய நாடுகளும் ராஜதந்திரிகள் அடங்கிய குழுக்களை அனுப்பமுயன்றுவரும் இவ்வேளையில், அதற்கு முன்னர், இந்த அமெரிக்கச் சார்பு நாடுகளின் முயற்சிகளுக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கையாக சனாதிபதியையும் பிரதமரையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா தலைப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது இந்தியாவின் மற்றொரு ஊடுருவல் தந்திரோபாயமாகும். இதன்மூலம் இத்தகைய முயற்சியை ஏற்கெனவே வேறுவேறு வழிமுறைகளில் ஆரம்பித்துவிட்டுள்ள ஜப்பான், அமெரிக்கா, மற்றும் நோர்வே போன்ற நாடுகள் தமது முயற்சிகளைக் கைவிடவோ ஒதுக்கிப் போடவோ ஒத்திப்போடவோ நேரிடலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்..

சந்திரிகாவையும் ரணிலையும் ஒற்றுமைப்படுத்துவதென்பது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக இந்தியா எடுக்கும் ஆத்மார்த்தமான முயற்சியாக நிச்சயம் இருக்காது.

இதன் பிரதான நோக்கம் இலங்கை மீதான தனது ஆதிக்க வலுவை இந்தியா நிருபிக்க முயலுவதாகவும், சமாதான முன்னெடுப்புகளை இந்தியாவின் பிராந்திய நலன்களை பாதுகாப்பதற்கான முறையில் நகர்த்துவதாகவுமே இருக்கும்.

நிச்சயமாக இந்த முயற்சி சந்திரிகாவின் அரசியல் நலன்களை பாதுகாப்பதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இதில் இந்தியாவின் சொல்லை சந்திரிகா கேட்பார். ஆனால் ரணில் அதற்கெல்லாம் உடன்படுவாரா என்பது விடைகாண முடியாத கேள்வியாகும். ரணில் இந்திய அணுகுமுறைக்கு ஒப்புதல் அளித்தால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை இப்போதிருக்கும் அளவுக்கு அவரால் பெறமுடியாமல் போகும்.

ரணிலின் அரசியல் எதிர்காலத்திற்கு இது பாதிப்பாகவும் அமையும். எனவே ரணிலின் முடிவு இந்த முயற்சியில் இந்தியாவுக்கு எதிராக அமையாவிட்டாலும், இந்தியாவின் முழுமையான அபிலாசைகளை நிறைவேற்ற உதவியாக அமையப்போவதில்லை என்பது தெளிவு

எந்த வகையிலும் சந்திரிகா - ரணில் ஒற்றுமையென்பது சாத்தியமானதாக இருக்காது. இருந்தாலும் நிரந்தரமானதாக அமையாது. இலங்கை மீதான தனது ஆதிக்கவலுவை இந்தியா ஊடுருவி சிதைப்பதை அமெரிக்காவும் விட்டுக்கொடுக்காது. ஆகவே இலங்கையில் சமாதான முயற்சிகள் இந்தப்புத்தாண்டிலும் இழுபறி நிலையில் தொடரும் சாத்தியமே உண்டு.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் மட்டும் சமாதானம் மீதான பற்றுறுதியை உறுதிப்படுத்தத்தொடர்ந்த விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு பொறுமைகாக்கவேண்டுமென சர்வதேச சமூகம் நினைப்பதில் அர்தமுமில்லை. நியாயமுமில்லை.




## படத்திற்கு மெருகூட்டுங்கள் –52



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –52

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –51



ச.மேரி
இல.93 கட்சன்வீதி
வட்டக்கச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

முன்பு கரகமெடுத்தாடினோம் – பின்பு
கயவர் வரக்கலைந்தோடினோம்
வல்ல தலைவனைத் தேடினோம் – வீழ்ந்து
எம் வீரரின் தியாகத்தில் வந்தாடினோம்

### பாராட்டுக்குரிய வரிகள்

*தடைப்பட்ட பேச்சு மீண்டும் தளிர்விடவே*
*தலையினில் கரகம் ஏந்தி நின்று. கேட்கின்றோம்.*
*புத்தம் சரணம் இனி ஒரு யுத்தம் எனில்*
*சத்தம் எல்லாம் கொழும்பினில் கேட்கும்*

இ.கஜனி,
வட்டக்கச்சி.

*வெற்றிக் களிப்பின் கொண்டாட்டம்*
*விடிவைத்தேடி கொண்டாட்டம்*
*ஈழம் கிடைக்காதா என திண்டாட்டம்*
*தமிழனின் பாரம்பரிய கரகாட்டம்*

மு.ராஜேஸ்,
புளியங்குளம்.

*சமாதானம் நிலைத்திட நேர்த்தியா?*
*நியமனம் கோரிய கரகாட்டமா?*
*எதை நீ செய்தாலும் வானரங்கள்*
*இருக்கும் வரை (?) இதுதான் சமாதானம்*

ந.நவநீதா,
வட்டக்கச்சி.

*ஆட்சி ஏறும் போட்டியிலே*
*தென் இலங்கை திண்டாட்டம்*
*கலைத்துறையின் போட்டியிலே*
*வட திசையில் கரகாட்டம்*

மு.வ.சுதா,
பரந்தன்.

*புரிந்துணர்வு ஒப்பந்தம் எனப் புன்முறுவல் காவடியா?*
*புலிவீரர் தூங்கவில்லை பூக்குமடா தமிழீழம் - இதை*
*புரிந்துணர்ந்து நெய்ப்பந்தம் தூக்கிடடா*
*புல்லர்தலை கொய்வதற்கு போர் எழுச்சி செய்துவைப்போம்.*

இ.நடேசன்,
வட்டக்கச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

வாழ்க்கையின் இலட்சியம் முடிவு, இன்பமல்ல: ஒழுக்கமே. – ஹொன்றி வார்ட் பீச்சர்



யாழ்

த்தியில்

# மில்லேனியம்

## உல்லாசப்பயணிகள் விடுதி



MILLENNIUM

GUEST HOUSE & RESTAURANT

19-01-2004

திங்கட்கிழமை

வைபவ ரீதியாக

திறந்து வைக்கப்படுகின்றது




**மில்லேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி**

## திறப்பு விழா அழைப்பிதழ்

காலம்: 19–01–2004 திங்கட்கிழமை

நேரம்: பி.ப. 5.45மணி

பிரதம விருந்தினர் :- திரு. மு. கு. சிவபாதவிருதையர் (பிரதேச முகாமையாளர், யாழ். வன்னிப்பிராந்தியம் மக்க

சிறப்பு விருந்தினர் :- திரு. துரைசிங்கம் ரகு, (முகாமையாளர், மக்கள்வங்

திரு. க. ஆனந்தராஜா (உதவிப்பிராந்திய முகாமைய மக்கள்வங்கி யாழ்ப்பாணம்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்

இறைவணக்கம்,
மங்கள விளக்கேற்றல்
வைபவரீதியான திறப்பு விழா
உறுதுணையாய் இருந்தவர்க்கோர்
உபகாரம் (கௌரவிப்பாளர் திரு.நா.சிவஞானம்

**நவீன வசதிகளுடன் கூடிய உல்லாசப்பயணிகள் விடுதி**

உங்கள் தொடர்புகளுக்கு:-

ம் உல்லாசப்பயணிகள் விடுதி

, இராமநாதன் வீதி,

யாழ்ப்பாணம்

-222 2810

SM GRAPHICS